


COMICS PDF TIMES
HSC

# இருட்டிலே நடமாடிய இரவு ராணி!

(துப்பறியும் மர்ம நாவல்)

ங்கு ழுதியது:

மேதாவி

ற்றும்

ஐந்து

ஒரே போ

ணிந்து கொ

NOT FOR SALE
FAN MADE ONLY

முதற்பதிப்பு : ஆகஸ்ட்டு 1974

விலை : ரூ. 2-00

COMICS PDF TIMES

இ வரும்
இடங் பனையே.
இறந்தோர், இருப்போர்
யாரையும் குறிப்பிடுவன
அல்ல.

அச்சிட்டது !
அன்னை அஞ்சுக அச்சகம்,
சென்னை-600014.

# 1. இருளில் ஒளிந்த மர்ம மனிதன்!

அன்று அமாவாசை தினமாதலால் எங்கும் கும்மிருட்டாக இருந்தது. இரவு சுமார் ஒன்பது மணிதான் இருக்கும். ஆனால் பனிரெண்டு மணிக்கு இருக்கக் கூடிய தோற்றத்தைக் கொண்டிருந்தது அந்தத் தெரு. சிவ்ராம் சதுக்கம் என்ற பெயருடைய அந்தத் தெருவில் அமைந்திருந்த நவீன ஓட்டல் ஒன்றைத் தவிர வேறு எந்த இடத்திலும் எத்த விதமான ஒளியையும் காணப்படவில்லை. தனது தோற்றத்தைப் போலவே மிகவும் அமர்க்களமாக "அன்னிமீரா" என்ற பெயரைக் கொண்டிருந்தது அந்த ஹோட்டல். இரவுகளில் நடனங்களும் பிரமாதமான விருந்துகளும் அந்த ஹோட்டலில் இடம் பெறுவது வழக்கம். எனவே இரவு பத்து மணிக்கு மேல்தான் அங்கு [illegible]டம் வருவது உண்டு.

அன்று மழை மித[illegible]மையாகப் பெய்து கொண்டிருந்தது. காரோ மற்றும் [illegible]ாகனங்களோ அந்தத் தெருவில் மிகவும் குறைவாக ஐந்து நிமிடங்களுக்கு ஒன்றோ பத்து நிமிடங்களுக்கு ஒன்றோ போய் வந்துக் கொண்டிருந்தன. மழைக் கோட்டு அணிந்து கொண்டு ஒரு சிகரட்டைப் புகைத்தபடி தனது பார்வையை சாலையின் இருபுறமும் ஓட்டியபடி நடந்து வந்து கொண்டிருந்தான் ராஜசுந்தரம். தனது பழைய வாழ்க்கையை நினைத்துக் கொண்ட ராஜசுந்தரத்தின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது.

வீரசாகஸம் நிறைந்த அந்தப் பழைய வாழ்க்கைக்கும் இப்பொழுது அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் உப்பு சப்பற்ற வாழ்க்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் என்பது அவனுக்கு மிகவும் நன்றாகப் புரிந்தது. சிறிது நேரம் யோசனையோடு நடந்து கொண்டிருந்த ராஜசுந்தரம் தனது கையில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு மிதித்து அணைத்து விட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தான். அவனைத்தவிர வேறு யாரையும் அந்தத் தெருவில் காணவில்லை. ஆனால் கடந்த சில தினங்களாக அவன் மனதில் ஒருசந்தேகம் வேரூன்றி இருந்தது. அடிக்கடி அவனுக்கு தன்னை யாரோ தொடர்ந்து வந்து வேவு பார்ப்பதாக ஒரு விசித்திர உணர்வு எழுந்தது. இப்பொழுதும் அவனுக்கு அதே எண்ணம்தான் ஏற்பட்டது.

பார்க்கப் போனால் தன்னை தொடர்ந்து வேவு பார்க்கும் அளவிற்கு தான் ஒன்றும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவனல்ல என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். தன்னுடைய பழைய வாழ்க்கையில் அவன் சந்தித்த பல்வேறு மனிதர்களை நினைவுக்கு கொண்டுவர முயற்சித்தான் ராஜசுந்தரம். அவனுடைய பழைய வாழ்க்கையில் அவனுக்கு இருந்த நண்பர்களை விட எதிரிகளே அதிகமானவர்கள் என்று கூறலாம். ஆனல் பழைய பகைமையை எண்ணிக்கொண்டு தன்னைப் பழிவாங்க எத்தனையோ வருடங்கள் கழித்து ஒருமனிதன் முயல்வது முட்டாள்தனம் என்று அவனுக்குத் தோன்றியது.

தேச உளவாளியாக இருந்த ராஜசுந்தரம் அவனுடைய வாழ்க்கையில் சந்திக்காத கொடுமைகளே இல்லை என்று கூறலாம். ஒவ்வொரு நாட்டிலும் அவன் சில சமயங்களில் மாட்டிக் கொள்ள நேர்ந்த பொழுது அவன் பட்ட சித்ரவதைகளுக்கு கணக்கில்லை. ஆனல் அவற்றை வீர சாகஸ உணர்வோடு ஏற்றுக் கொண்ட ராஜசுந்தரம் ஒவ்வொரு முறையும் தந்திரமாகத் தான் தப்பியதை நினைத்துக் கொண்டான். அவ்வாறு அவன் வந்த காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்திருக்கிறன். அவனேடு இருந்த பல உளவாளிகள் இன்று எங்கிருக்கிருர்கள் என்பதே அவனுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவர்களில் பலபேர் மரணதண்டனை அடைந்ததும் அவன் நினைவுக்கு வந்தது.

அதே சமயம் ராஜசுந்தரத்தின் காலடிச் சத்தத்தோடு சேர்ந்தார்போல் மற்ருெரு காலடிச் சத்தமும் சன்னமாகக் கேட்டது. தன்னைப் பின்தொடர்ந்து வருவது தெரியக்கூடாது என்பதற்காக தன்னேடு சேர்ந்து நடந்து வரும் அந்த மனிதனைப் பார்க்க வேண்டுமென்ற தவிப்பு ராஜசுந்தரத்திற்கு ஏற்பட்டது. ஆனல் தான் திரும்பிப் பார்த்தால் அந்த மனிதன் உஷாரடைந்து விடக்கூடும் என்பதை உணர்ந்த ராஜசுந்தரம் சட்டென்று நின்று விட்டான். பின்னல் கேட்ட காலடிச் சத்தமும் நின்று விட்டது. ராஜசுந்தரம் ஒருமுடிவுக்கு வந்தவனுக திடீரென்று திரும்பிப் பார்த்தான். அப்பொழுது ஒருமின்னல் பளிச்சென்று மின்னியது. அந்த வெளிச்சத்தில் ஒரு குள்ளமான உருவம் ஒரு மூடியிருந்த கடையின் நிழலில் பதுங்குவது ராஜசுந்தரத்திற்குத் தெரிந்தது.

சில அடிகள் தள்ளி "அன்னிமீரா" ஹோட்டல் ஜகஜ்ஜோதியாகக் காணப்பட்டது. அந்த ஹோட்டலை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்த ராஜசுந்தரம் சில விநாடிகளில்

அந்த ஹோட்டலினுள் நுழைந்தான். வழக்கத்திற்கு விரோதமாக அன்று ஹோட்டலில் கூட்டமே இருக்கவில்லை. இங்கொருவர் அங்கொருவராக சிலமனிதர்கள் அமர்ந்து உயர்ந்த வகை மதுமானங்களை அருந்திக் கொண்டிருந்தார்கள். அந்த பெரிய ஹாலின் கடைசியில் இருந்த ஒரு பிரமாண்டமான நடன மேடை மீது அமர்ந்து கொண்டு ஒரு மெல்லிய ஆங்கில இசையை பியானோவில் வாசித்துக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன். சோகமான அந்த இசையைத்தவிர வேறு பேச்சு சத்தங்கள் எதுவும் அங்கு கேட்கவில்லை.

அப்பொழுது அந்த ஹாலை ஒட்டியிருந்த ஒரு அறையின் கதவைத் திறந்து கொண்டுவந்த ஒரு ஆறடி உயரமுள்ள மனிதன் ராஜசுந்தரத்தை அமர்க்களமாக வரவேற்றான்.

"ஓ! ராஜசுந்தரமா? ஏது இந்தப்பக்கம்?" என்று புன்னகையுடன் கேட்ட அந்த ஹோட்டலின் முதலாளியான காத்தவராயன், "ஒன்றும் சங்கடமில்லையே?" என்று விசித்திரமாகக் கேட்டான்.

"ஒன்றுமில்லை!" என்று கரகரத்த குரலில் பதிலளித்த ராஜசுந்தரம்," எனக்கு மூன்று இரவு இங்கு தங்க இடம் வேண்டும்!" என்று கூறிவிட்டு நேராக பியானோ வாசித்துக் கொண்டிருந்த மனிதனை அடைந்தான்.

ராஜசுந்தரத்தைக் கண்டதும் ஒருபுன்னகை பூத்த அந்த மனிதன் தான் வாசிப்பதை நிறுத்திவிட்டு, "ராஜசுந்தரம்! சில நாட்களுக்குமுன் உனது நண்பன் பாலு ஒரு பெண்ணுடன் இங்கு வந்து உன்னைப்பற்றி விசாரித்தான். ஆனால் உன்னைப்பற்றி எந்தவிதமான தகவலும் தெரியாத காரணத்தால் அவர்களுக்கு என்னால் சரியான பதிலை அளிக்க முடியவில்லை!" என்று கூறினான்.

"என்னைத் தேடிக்கொண்டு ஒரு பெண் வந்தாளா? உளறுதே, சேகர்!" என்று கூறிய ராஜசுந்தரம் யோசனையில் ஆழ்ந்தான். அவனுக்குப் பெண்களிடம் அவ்வளவு சுவாரசியம் கிடையாது. அவன் தன்னுடைய வாழ்நாளில் எந்த பெண்ணுடனும் எந்தவிதமான உறவையும் வைத்துக் கொண்டதில்லை. எனவே தன்னைத் தேடிக்கொண்டு ஒரு பெண் வந்தாள் என்பதை அவனால் நம்பமுடியவில்லை.

"உண்மைதான், ராஜசுந்தரம்; உன்னால் என்னை நம்ப முடியவில்லை என்றால் உன் நண்பன் பாலுவை வேண்டுமானால் கேட்டுக் கொள்;" என்று கூறினான் சேகர்.

"நல்லது" என்று கூறிய ராஜசுந்தரம், ஏதோ நினைத்துக் கொண்டவனாய், "அவள் பெயரை விசாரித்தாயா?" என்று கேட்டான்.

"அவள் தன் பெயர் கோகிலாராணி என்று கூறினாள். நீ வந்ததும் உன்னை பாலுவின் வீட்டிற்கு வரச் சொன்னாள்!" என்று கூறிய சேகர் மீண்டும் பியானோ வாசிப்பதில் ஈடுபட்டான்.

அப்பொழுது அங்கு வந்த காத்தவராயன், "ராஜ சுந்தரம்! உனக்கு மாடியிலுள்ள ஏழாம் எண்ணுள்ள அறையைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். நீ அதில் இன்று இரவு தங்கிக் கொள்ளலாம்!" என்று கூறினான்.

"தெருவைப் பார்த்ததுபோல் ஒரு ஜன்னல் அங்கு இருக்கிறதா?" என்று கேட்டான் ராஜசுந்தரம். "இல்லை. அப்படிப் பட்ட அறை ஒன்றுதான் இருக்கிறது. அதுதான் பத்தாம் எண்ணுள்ள அறை" என்றான் காத்தவராயன்.

"அப்படியானால் அந்த அறையை எனக்குக் கொடு!" என்றான் ராஜசுந்தரம்.

"அங்கு லலிதா தங்கி இருக்கிறாள். அவளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அங்கு தங்கிக் கொள்!" என்று கூறிய காத்தவராயன்; "அதோ? லலிதாவே வந்துவிட்டாள் அவளிடம் அனுமதி பெற்றுக் கொள்!" என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

அப்பொழுது மாடியிலிருந்து இறங்கி வந்த லலிதாவின் கண்கள் ராஜசுந்தரத்தைக் கண்டதும் அகலமாக விரிந்தது. "ஓ' ராஜசுந்தரமா? வாருங்கள். நீங்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் தாராளமாக என்னுடைய அறையில் தங்கிக் கொள்ளலாம்!" என்று புன்முறுவலுடன் கூறினாள் லலிதா. அவளுக்கு சுமார் இருபது வயது இருக்கலாம். தாய் தந்தையற்ற அனாதையான அவள் "அன்னிமீரா" என்ற அந்த ஹோட்டலில் இரவு நடனங்கள் ஆடி பணம் சம்பாதித்து வந்தாள். அதனைக் கொண்டு தன்னுடைய கைச் செலவையும் சாப்பாட்டுச் செலவையும் சமாளித்து வந்தாள். அந்த ஹோட்டலின் முதலாளியான காத்தவராயனுடைய நெருங்கிய நண்பனாகிய ராஜசுந்தரத்தை அவள் பல தடவைகள் அங்கு சந்தித்திருக்கிறாள். அவனுடைய வீர சாகஸ வாழ்க்கையைப்பற்றி அவளுக்கு ஓரளவு தெரியும். கவர்ச்சியான தோற்றமுடைய ராஜசுந்தரத்தின்மீது அவளுக்கு அளவிலாக் காதல் இருந்தது என்று கூறலாம். ஆனால் ராஜசுந்தரத்திற்கு அவளிடம் அவ்விதம் எந்தவிதமான சுவாரசியமும் கிடையாது. பல முறை அவள் அவனிடம் நெருங்கிப் பழக முயன்றும் அவன் ஒதுங்கியிருக்கிறான்.

மாடியில் லலிதாவின் அறையை இருவரும் அடைந்தனர். விசாலமான அந்த அறையை நோட்டமிட்ட ராஜசுந்தரம் தெருவைப் பார்த்ததுபோல் இருந்த அந்த ஜன்னல்மீது மெல்ல ஏறினன். அவனது செயலைக்கண்டு பதறிப்போன லலிதா, "ராஜசுந்தரம்! என்ன செய்கிறீர்கள். அது ஆபத்தான இடம்! விழுந்துவிட்டால் எலும்பு கூட முழுதாகக் கிடைக்காது! கீழே இறங்குங்கள்!" என்று கிறீச்சிட்டாள்.

அவள் செயலைக்கண்டு ஆத்திரமடைந்த ராஜசுந்தரம், "உன் வாயை மூடிக் கொள்! நான் செய்யும் எந்த காரியத்திலும் நீ தலையிட வேண்டாம். புரிந்ததா?" என்று கடுமையான குரலில் எச்சரித்தபடி அந்த கம்பியில்லா ஜன்னலின் கட்டைமீது நின்றுகொண்டு மேல் கட்டையை கைகளால் பிடித்துக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். மழை பலமாகப் பெய்து கொண்டிருந்தது. அந்தத் தெருவின் கோடியில் ஒரு குள்ளமான உருவம் மின்வெட்டின் வெளிச்சத்தில் சிகரெட் குடித்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. அந்த மனிதன் ஒரு கடையின் வாசலில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தான்.

ஒரு புன்னகை பூத்துக்கொண்ட ராஜசுந்தரம் இனியும் அந்த ஜன்னல்மீது நிற்பது ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டவனாக கீழே இறங்கினன். அதுவரை கட்டிலின்மீது அவன் செயலையே நடுக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்த லலிதா ஓடிவந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"ராஜசுந்தரம்! உங்களுக்கு என்ன நேர்ந்தது? கீழே விழுந்திருந்தால்—ஐயோ...;" என்று தன்னுடைய உடம்பை ஒருமுறை சிலிர்த்துக் கொண்டாள்.

தனது கையை வெடுக்கென்று இழுத்துக்கொண்ட ராஜசுந்தரம், "உன்னுடைய புலம்பலை சற்று நிறுத்திக் கொள், அம்மணி;": என்று இகழ்ச்சியாகக் கூறினன்.

அவனையே ஏமாற்றத்தோடு வெறித்துப் பார்த்த லலிதா, "நாம் இருவரும் இந்த அறையில் இன்று உறங்கப் போகிறோம் அல்லவா?" என்று கேட்டாள்.

"இல்லை!" என்று பதிலளித்த ராஜசுந்தரம், "நீ ஏழாம் எண் அறையில்தான் உறங்கப் போகிறாய்! இது காத்தவராயனுடைய உத்தரவு! நல்லது! நேரமாகி விட்டதால் நீ இந்த அறையைவிட்டுப் போகலாம்!" என்றான் ராஜசுந்தரம்.

"நீங்கள் இவ்விதம் நடந்து கொள்ளக் கூடாது. உங்களை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்பது—"

"போதும், நிறுத்து! உன் காதல் மொழிகளை யாராவது கிழட்டு மைனரிடம் வைத்துக் கொள்! இப்பொழுது இந்த அறையைவிட்டு முதலில் வெளியே போ!" என்று கர்ஜித்தான் ராஜசுந்தரம்.

அதற்குமேல் அங்கு நிற்பது தவறு என்பதை உணர்ந்து கொண்ட லலிதா, "மீண்டும் அப்படி ஜன்னல்மீது ஏறி ஆபத்தை தேடிக் கொள்ளாதீர்கள்!" என்று கூறிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

அவள் சென்ற பிறகு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி அறைக் கதவைத் தாளிட்ட ராஜசுந்தரம் மீண்டும் ஜன்னல் அருகே போய் நின்றுகொண்டு தெருவையே கண்காணிக்க ஆரம்பித்தான். சற்றுநேரத்திற்குமுன் தான் பார்த்த அந்த குள்ளமான மனிதன் தன்னைத்தான் கண்காணிக்க வந்தவனாக இருக்க வேண்டுமென்பது அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. அப்படி அவன் கண்காணிக்க வந்தவனாக இல்லாவிட்டால் ஏன் தனக்காக அங்கே காத்திருக்க வேண்டும். தான் வெளியேறுவதற்காக சமயம் பார்த்துக் கொண்டு நிற்பதாக அவனுக்குத் தோன்றியது.

காலை வரை அவன் அங்கேயேதான் நின்று கொண்டிருக்கப் போகிறானா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. கீழே நின்று கொண்டு பார்த்தால் அந்த மனிதனைத் தன்னால் கண்காணிக்க இயலாது என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் ஜன்னல்மீது ஏறி நின்றுகொண்டு கண்காணிப்பது மிகவும் அபாயகரமானதாகத் தோன்றியது. அந்த சிறிய கட்டையில் மழைத் தண்ணீர் விழுந்து வழுக்கியது. அதனால்தான் விழுந்தால் லலிதா சொன்னதுபோல் ஒரு எலும்புகூட அவனுக்கு முழுதாக கிடைக்காது என்று தோன்றியது. எனவே தான் கண்காணிக்க இயலாது என்பதை உணர்ந்து கொண்ட ராஜசுந்தரம் போய் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

## 2. நரபலி விரும்பிய நங்கை!

---

காலை ஒன்பது மணிக்கு கண் விழித்த ராஜசுந்தரம் அறைக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தான், லலிதா தான் நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் ஒருகோப்பை காப்பி இருந்தது. புன்னகையுடன் அறைக்குள் நுழைந்த லலிதா தன் கையிலிருந்த காப்பியை ராஜசுந்தரத்திடம் நீட்டியபடி, "நல்ல

காலம்! அந்த ஆபத்தான வேலையை மீண்டும் செய்து நீங்கள் எதுவும் ஆபத்தை வரவழைத்துக் கொள்ளவில்லை!'' என்று கூறியபடி ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

அதற்கு எந்தவிதமான பதிலையும் கூருத ராஜசுந்தரம் தன்னுடைய மழைக்கோட்டை தோளில் போட்டுக்கொண்டு "நல்லது நான் வருகிறேன். இரவு தங்க உன்னுடைய அறையை எனக்குக் கொடுத்ததற்கு ரொம்பவும் நன்றி!'' என்று கூறியபடி அறையை விட்டு வெளியே நடந்தான். அவன் செல்வதையே வெறிக்கப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் லலிதா.

கீழே "அன்னிமீரா'' ஹோட்டலின் முதலாளியான காத்தவராயனிடம் விடை பெற்றுக் கொண்ட ராஜசுந்தரம் அந்த ஹோட்டலை விட்டு வெளியேறினுன்.

பாதிரியார் சந்து என்று அந்த ஒரு சிறிய சந்தை ராஜசுந்தரம் அடைந்த பொழுது காலை மணி பத்து. அந்த தெருவில் எங்கும் குப்பையும் கூளமும் நிறைந்திருந்தது. சிறுவர்கள் தெருவில் விளையாடிக் கொண்டு இடத்தை குப்பையாக்கிக் கொண்டிருந்தனர். அங்கு எல்லாம் வீடுகள்தான் என்றாலும் ஒண்டுக்குடித்தனக்காரர்கள் தங்கள் குழந்தைகளை தெருவில் விளையாட விட்டிருந்தபடியால் அவர்கள் இடத்தை நாசமடித்துக் கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் பாராமல் ஒவ்வொரு வீட்டையும் பார்த்துக் கொண்டே நடந்தான் ராஜசுந்தரம்.

காலை "அன்னிமீரா'' ஹோட்டலில் இருந்து புறப்பட்ட ராஜசுந்தரம் ஒரு ஹோட்டலில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தன்னுடைய நண்பன் பாலுவைத்தேடி கிளம்பினுன். ஒருசமயம் பாலு தான் பாதிரியார் சந்திலுள்ள 117ம் எண்ணிள்ள வீட்டில் தங்கியிருப்பதாகச் சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. எனவே பாலுவைத் தேடிக் கொண்டு கிளம்பினுன் ராஜசுந்தரம்.

அந்தச் சந்தின் கோடியில் காணப்பட்ட ஒரு பழங்கால வீட்டின் வாசலில் 117 என்ற எண் பொறிக்கப்பட்டிருப்பதை கண்டான் ராஜசுந்தரம். தான் தேடிவந்த இடம் அதுதான் என்பதைப் புரிந்து கொண்ட ராஜசுந்தரம் அந்த வீட்டின் வாசற் கதவைத் தட்டினுன். சிறிது நேரம் வரை யாரும் வந்து கதவைத்திறக்கவில்லை. மீண்டும் சற்று பலமாகவே கதவைத் தட்டினுன் ராஜசுந்தரம். சில விநாடிகளில் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து தாழ்ப்பாள் நீக்கப்படும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தவன்

பாலுதான். ஆனால் அவன் முகம் பீதியினால் வெளுத்திருந்தது. ராஜசுந்தரத்தின் வரவைக் குறித்து அவன் மகிழ்ந்ததாகவே தெரியவில்லை. மாறாக வேண்டாத ஒருவன் வருகையைக் கண்டு அருவருப்படைவதைப்போல இருந்தது அவனுடைய பார்வை.

அவனைத்தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த ராஜசுந்தரம், "பாலு! நீ மட்டும்தான் இருக்கிறாயா?" என்று சந்தேகத்தோடு கேட்டான். காரணம் அங்கு ஆண்கள் அணியும் செருப்புக்கள் இரண்டு ஜோடியும், பெண்கள் அணியும் செருப்புக்களில் ஒரு ஜோடியும் காணப்பட்டது.

அவனை ஒரு மாதிரியாகப் பார்த்த பாலு வேண்டாத கேள்விக்கு பதில் சொல்பவனைப் போல், "எனது நண்பர்களும் இங்கு தங்கியிருக்கிறார்கள்!" என்று அசிரைத்தையாக பதிலளித்தான். பிறகு, ",அதுசரி! நீ இங்கு வரக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"நீ "அன்னிமீரா" ஹோட்டலுக்கு கோகிலாராணி என்ற பெண்ணுடன் என்னைத் தேடி வந்ததாக சேகர் கூறினான். அது எதற்காக என்பதைத் தெரிந்துகொள்ளவே இங்கு வந்துள்ளேன்!" என்று கூறினான் ராஜசுந்தரம்.

"ஒன்றுமில்லை. உன்னைப்பற்றி விசாரிக்கவே வந்தோம்!" என்று அவசரமாகக் கூறினான் பாலு.

அதேசமயம் அடுத்த அறையிலிருந்து மின்னல் வேகத்தில் ஒரு பெண் வெளியே வந்தாள். அவள் முகத்தில் கோபக் கனல் வீசிக்கொண்டிருந்தது. பாலுவை சுட்டெரிப்பது போல் பார்த்த அப்பெண், "வாயை மூடு, பாலு! நாம் ராஜசுந்தரத்தை தேடி வேலையாகத்தான் போனோம்!" என்று உறுமினாள். அவள் குரலைக் கேட்டதும் இடியோசை கேட்ட நாகம்போல் மிரண்டுவிட்ட பாலு வேகமாக அந்த அறையை விட்டு உள் அறைக்குச் சென்றான்.

அவள்தான் கோகிலாராணியாக இருக்க வேண்டுமென்பதை யூகித்துக் கொண்ட ராஜசுந்தரம், "நீதான் கோகிலாராணியா?" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்று இறுகிய குரலில் கூறிய கோகிலாராணி, "நாம் உள்ளே செல்லலாம். அங்கு போய் எல்லாவற்றையும் பேசிக் கொள்ளலாம்!" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள். சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பெண்ணான கோகிலாராணி அபாரமான அழகு படைத்தவள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அவளிடமிருந்த ஒரு அலாதியான கவர்ச்சி எல்லோரையும் வசீகரிப்பதாக இருந்தது.

ஆனால் அவள் கண்களில் தென்பட்ட ஒரு அசாதாரணமான ஒளி அவள் கொலை செய்யக்கூட அஞ்சமாட்டாள் என்பதை பறைசாற்றியது.

கோகிலாராணியும் ராஜசுந்தரமும் நுழைந்த அந்த அறை மிகவும் விசாலமானதாக இருந்தது. அதனுள் மற்றொரு அறையும் காணப்பட்டது. ஆனால் அதனுள்ளே பார்க்க முடியாதபடி திரைச்சீலை தொங்கவிடப் பட்டிருந்தது. அங்குக் கிடந்த ஒரு சோபாவில் அமர்ந்த ராஜசுந்தரம், "என்ன விஷயமாக என்னைத் தேடி வந்தீர்கள்" என்று கேட்டான்.

"உன்னிடம் எங்களுக்கு ஒரு காரியமாகவேண்டியிருக்கிறது!" என்று கூறினாள் கோகிலாராணி.

எடுத்த எடுப்பிலேயே தன்னை அவள் மரியாதைக் குறைவாகப் பேசியதைக் கேட்டு ராஜசுந்தரம் எரிச்சலடைந்தாலும் அதனை வெளிக் காட்டிக்கொள்ளாமல், "அப்படியானால் என்னை இத்தனை நாளும் தொடர்ந்து வரும்படி நீதான் ஒரு ஆளை நியமித்திருந்தாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்! நீ முரண்டு செய்தால் பலாத்காரமாக உன்னை இங்கு கொண்டு வரவேண்டுமென்பது என்னுடைய கட்டளை!" என்று சர்வசாதாரணமான குரலில் கூறினாள் கோகிலாராணி.

"நீ இவ்வளவு கஷ்டப்பட்டும் உன்னுடைய திட்டத்திற்கு நான் அடிபணிய மறுத்தால் —?" என்று இகழ்ச்சியாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

"உன்னைக் கட்டாயப்படுத்தி என்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவேன்!" என்று ஆணவத்தோடு கூறினாள் கோகிலாராணி.

"அது ஒருக்காலும் முடியாது, அம்மணி!' என்று கூறியபடி தன்னுடைய இருக்கையை விட்டு வேகமாக எழுந்தான் ராஜசுந்தரம். பிறகு, "உன்னைப்போல திமிர் பிடித்தவளுக்கு என்னால் ஒருசிறு வேலை கூட செய்யமுடியாது!" என்று கூறிவிட்டு கதவை நோக்கி நடக்க யத்தனித்தான்.

அதே சமயம் உள்அறையிலிருந்து வேகமாக ஒரு மனிதன் வெளியே வந்தான். இவன் கையில் ஒரு சுழல் துப்பாக்கி இருந்தது. ராஜசுந்தரத்தைப் பார்த்து கேலியாகச் சிரித்த கோகிலாராணி," உன்னுடைய இருக்கையில் போய் ஒழுங்காக அமர்ந்து கொள்! இல்லாவிட்டால் மனோகருடைய துப்பாக்கியின் குண்டுகள் உன் அழகிய உடலை துளை போட்டு விடும்!" என்று கெக்களித்தாள். அவள் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது.

அவளைக் கண்டு ராஜசுந்தரமே ஒரு கணம் திகைத்து விட்டான். துப்பாக்கியைக் கண்டு நடுநடுங்கிய பாலு, "மனேகர்! அந்தத் துப்பாக்கியை முதல் வேலையாக உள்ளே போடு!" என்று நடுங்கும் குரலில் கூறினன்.

அவனைப் பார்த்து முறைத்த மனேகர் அவன் பேச்சை லட்சியம் செய்யாதவனுய் சோபாவில் அமர்ந்திருக்கும் ராஜ சுந்தரத்தையே குறிபார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்தான். தனது தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்ட கோகிலாராணி, "உன்னுடைய வாழ்க்கைச் சரிதமே எனக்கு மிக நன்ருகத் தெரியும். அதை நான் சேகரிக்க எனக்கு எவ்வளவு காலம் ஆனது தெரியுமா?" என்று கேட்டாள்.

"உனக்கு என்னைப்பற்றி கடுகளவு கூடத் தெரியாது, பெண்பிசாசே!" என்று கேலித்தொனியில் கூறினன் ராஜ சுந்தரம்.

"அதுதப்பு! உனக்கு வேண்டுமாஞல் உன் வாழ்க்கையைப்பற்றி நான் கேட்டு அறிந்தவைகளைக் கூறுகிறேன். கவனமாகக் கேட்டு சரியா அல்லது தவரு என்பதை நீயே முடிவு கட்டிக்கொள்!" என்று சர்வசாதாரணமாகக் கூறினுள் கோகிலாராணி.

"நல்லது! சொல் பார்க்கலாம்!" என்று கேட்டான் ராஜ சுந்தரம்.

"சிறுவயதில் பல புத்தகங்களைப் படித்து வீரசாகஸப் பைத்தியம் பிடித்து விட்ட உன்ஞல் உன் வீரசாகஸ செயல்களை வீட்டில் செய்யமுடியவில்லை. வீரசாகஸச் செயல்கள் என்று சொல்லிக்கொண்டு நீ செய்தவற்றை உன் பெற்ருேர் கண்டித்தனர். எனவே நீ வீட்டை விட்டு வெளியேறினுய். தாய்நாட்டைப் பற்றியே வெளிநாட்டாருக்கு உளவு கூறும் தேசத்துரோகிகளுடன் சேர்ந்து கொண்டு சுதந்திரப் போராட்டத்தின் போது தண்டனை அடைந்தாய். அதன் பிறகு வெளிநாடுகளில் உன் கைவரிசையைக் காட்டச் சென்ருய். அப்பொழுது உனக்கு உறுதுணையாக உன்னுடன் வந்தவன் தான் இந்த பாலு. வெளிநாடுகளில் இதே வேலையை செய்த காரணத்தால் உடம்பு முழுவதும் சாட்டையடி பெற்று சித்ரவதைக்குள்ளாஞய்.

"அதன் பிறகு அந்தத் தொழிலை கொஞ்சகாலத்திற்கு நிறுத்தி வைத்து விட்டு தங்க நாணயங்களை வெளிநாடுகளிலிருந்து கடத்தும் நற்பணியில் ஈடுபட்டாய். அதற்கு பரிசுதர உன்னை அந்த ஊர் போலீஸார் பிடித்து விட்டனர். உன்னுடைய குற்றங்களையெல்லாம் கணக்கிட்டு உனக்கு

ஐந்து வருட சிறைவாசம் கொடுத்தார்கள். அதை அனு பவித்து விட்டுதான் இப்பொழுது இன்னொரு வீரசாகஸ செயலைத் தேடிக் கொண்டு அலைகிறாய். அதை உனக்குக் கொடுக்க நாங்கள் மனம் வைத்திருக்கிறோம்! இதுவரை நான் சொன்னதெல்லாம் சரியா நண்பரே?'' என்று கேட்டாள் கோகிலாராணி.

தன்னுடைய வாழ்க்கைச் சரிதத்தையே டேப்ரிகார்டர் போட்டது போல ஒப்பிக்கும் அவளையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த ராஜசுந்தரம், ''உண்மை!'' என்று மெல்ல முணுமுணுத்தான்.

அதேசமயம் அந்த அறைக்கு மற்றொரு மனிதன் நுழைந் தான். பார்வைக்கு கவர்ச்சிகரமாகத் தோற்றமளித்த அந்த மனிதனின் வலக்கை பாதியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது ராஜசுந்தரத்தைப் பார்த்து புன்னகை பூத்த அந்த மனிதன், ''நீதான் ராஜசுந்தரமா? என் பெயர் வேல்முருகன். உன்னை இந்தத் திட்டத்தில் பங்கு கொள்ள அழைக்க வேண்டுமென் பதே என்னுடைய யோசனை தான்!'' என்று கூறினான்.

''இதற்காக உனக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப் படும். இப்பொழுது முன்பணமாக ஐயாயிரம் ரூபாயும் வேலை முடிந்த பிறகு ஐயாயிரம் ரூபாயும் கொடுக்கப்படும்!'' என்று கூறினார் கோகிலாராணி.

''இந்த வேலைக்கு நான் ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன செய்வாய். முன் பணமான ஐயாயிரம் ரூபாயையும் ஏமாற்றி நானே எடுத்துக் கொண்டால்–?'' என்று கேட் டான் ராஜசுந்தரம்.

''அதை நீ செய்யமாட்டாய்! அப்படி நீ செய்தால் என் னுடைய ஆட்கள் வலைபோட்டு உன்னைத்தேடி கண்டுபிடித்து சித்ரவதை செய்து கொன்று விடுவார்கள்!'' என்று இரக்க மற்ற குரலில் கூறினாள் கோகிலாராணி. பிறகு ஏதோ யோசித்தவளாக, ''நீதான் ராஜசுந்தரம் என்பதற்கு என்ன ஆதாரம். சவுக்கடி பட்ட தழும்புகள் உன் உடம்பில் இருந் தால்தான் அதை நம்புவேன் என்று கூறியபடி மனேகர் பக்கம் திரும்பி, ''அவன் சட்டையைக் கழற்றி பார்!'' என்று ஆணையிட்டாள்.

''அது தேவையில்லை!'' என்று கூறிய ராஜசுந்தரம் தனது சட்டையை கழற்றினான். உள்ளே உடம்பில் சவுக்கடிபட்ட வெள்ளைத் தழும்புகள் காட்சியளித்தன. பிறகு, ''என்னு டைய வேலை என்ன?'' என்று கேட்டான்.

''ஒரு மனிதனைக் கொல்ல வேண்டும்!'' என்று இல்விட்ட குரலில் கூறினாள் கோகிலாராணி.

# 3. பயந்து நடுங்கும் பாலு!

படு பயங்கரமான அந்தக் கொலை திட்டத்தைக் கேட்டு ஒரு கணம் பிரமை தட்டிப் போன ராஜசுந்தரம் தன்னை சுதாகரித்துக் கொண்டவனாக, "இந்தக்கொலையை எதற்காக நீங்கள் செய்ய விரும்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

"அந்த மனிதன் ஒரு துரோகி! எங்களுக்கு துரோகம் செய்துவிட்டான். அதனால்தான் அவனை நாங்கள் பழிவாங்க விரும்புகிறோம்!" என்று கூறினாள் கோகிலாராணி. அவர்களுடைய பேச்சைக் கேட்க விரும்பாதவனாக அந்தஅறையை விட்டு பாலு வெளியேறினான். அவன் செல்வதையே இகழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தாள் கோகிலாராணி.

"நீங்கள் எதற்காக அவனைக் கொல்ல விரும்புகிறீர்கள், அவன் உங்களுக்கு என்ன துரோகம் செய்தான்?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"நாங்கள் எல்லோரும் ஒரே கோஷ்டியினர்தான். நாங்கள் ஒருமுறை உன்னைப்போல ஒரு தேசத்துரோக செயலின் காரணமாக மாட்டிக் கொள்ள இருந்தோம். ஆனால் அவன் மட்டும்தான் மாட்டிக் கொண்டான். அவனைச் சித்திரவதை செய்து அவனுடன் சேர்ந்து ஒத்துழைத்த கோஷ்டியினரை அடையாளம் காட்டும்படி வெளியூர் போலீஸார் மிரட்டினர். அதனால் அவன் எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டான். அதன் காரணமாகத்தான் வேல் முருகனுக்கு ஒரு கை போய் விட்டது அவர்கள்தான் வெட்டி விட்டார்கள். அதன் பிறகு என்னை சாட்டை கொண்டு அடித்துத் துன்புறுத்தினார்கள், அந்தத் தழும்புகள் என் உடலில் இன்னும் இருக்கின்றன!" என்று கூறினாள் கோகிலாராணி.

"அவன் காட்டிக் கொடுக்கும் முன்பு கோகிலாராணியும் அவனும் காதலர்களாக இருந்தார்கள்!" என்று கூறினான் வேல்முருகன்.

அதைக் கேட்க விரும்பாதவளைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கோகிலாராணி. அவளையே விசித்திரமாகப் பார்த்த ராஜசுந்தரம், "இது நடந்து எவ்வளவு நாட்களாகிறது?" என்று கேட்டான்.

"சுமார் இரண்டரை வருடங்கள்!" என்று பதிலளித்தாள் கோகிலாராணி.

"இந்த இரண்டரை வருடங்களில் எழாத இந்தப் பழி வாங்கும் எண்ணம் உனக்கு இப்பொழுதுதான் எழுந்ததா?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"உனக்கு முன்பு—அதாவது ஒருவருடத்திற்கு முன்பு இரண்டு ஆட்களை விட்டு அவனைக் கொல்ல ஏற்பாடு செய்தேன். ஆனால் துரதிருஷ்ட வசமாக ஒருவன் ஒரு ஏரியில் விழுந்து இறந்து விட்டான். மற்றொருவன் ஒரு லாரி விபத்தில் அகப்பட்டு இறந்து விட்டான்!" என்று கூறினாள் கோகிலாராணி. அதன் பிறகு மாணிக்கவேலின் அங்க அடையாளங்களை விவரித்தாள். அவன் குரலைப் பற்றியும் வர்ணித்தாள்.

நீங்கள் பழிவாங்க நினைக்கும் அந்த பரிதாபகரமான மனிதனின் பெயர் என்ன? என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"அவன் பெயர் மாணிக்கவேல்!" என்று பதிலளித்தாள் கோகிலாராணி.

"அந்த வேலையை முடிக்க நான் தயார். அதற்காக முன் பணமாக ஐயாயிரம் ரூபாயை உடனே கொடுக்க வேண்டும்!" என்று ஏதோ முடிவுக்கு வந்தவனாகக் கூறினான் ராஜசுந்தரம்.

மனேஜரை நோக்கித் திரும்பிய கோகிலாராணி, "தயாராக வைத்திருக்கும் பணக்கட்டை எடுத்து வா, மனேஜர்!" என்று கூறினாள்.

சிறிது நேரத்தில் பத்து ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்தான் மனேஜர். அத்துடன் மாணிக்கவேலின் புகைப்படம் ஒன்றும் காணப்பட்டது. புத்தம் புதிய நோட்டுக்களான அவற்றையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜசுந்தரம். இந்த கோஷ்டியினருக்கு புத்தம் புதிய நோட்டுக்களான அவை எப்படிக் கிடைத்தன என்பது அவனுக்குப் புதிராக இருந்தது. கள்ள நோட்டாக இருக்குமோ என்று சந்தேகமடைந்த ராஜசுந்தரம், "இவையெல்லாம் உண்மை நோட்டுகள்தான் என்பதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டான்.

அதைக் கேட்டு கலகல வென்று சிரித்த கோகிலா, "உன் புத்தி எப்படியெல்லாம் போகிறது! உன்னைப்போல ஒரு குறுக்குப்புத்திக் காரனைத்தான் நாங்கள் இவ்வளவு காலமாகத் தேடிக் கொண்டிருந்தோம்! உண்மையில் நீ எங்களுடைய வேலைகளுக்கு மிகவும் பயன்படுவாய்! நாங்கள் இப்படிப் பட்ட புரட்சி காரியங்களைச் செய்பவர்களே தவிர கள்ள நோட்டு அடிப்பது போன்ற சில்லறைத் தொழிலில் ஈடுபட்டு எங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்ள மாட்டோம், நண்பரே!" என்று இகழ்ச்சியாகக் கூறினாள்.

அவள் பேச்சைக் கேட்டு அயர்ந்து போன ராஜசுந்தரம், "நல்லது! நான் புறப்படுகிறேன்!" என்று கூறிவிட்டு தன் இருக்கையை விட்டு எழுந்தான்.

"மற்றொன்றையும் நினைவில் வைத்துக் கொள், சுந்தரம்! நீ மாணிக்கவேல் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட்டால் அதை உடனே எங்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும்! புரிந்ததா?" என்று கூறிய கோகிலாராணி, "இன்னும் ஒருவார காலத்தில் எங்களுக்கு அதைத் தெரியப படுத்தி விட வேண்டும்!" என்று கூறினாள்.

அதற்குத் தலையசைத்த ராஜசுந்தரம் தன் கையிலிருந்த பணக்கட்டை பாக்கெட்டினுள் போட்டுக் கொண்டு அந்த அறையை விட்டுவெளியே நடந்தான். அந்த அறையிலிருந்த கோகிலாராணியோ, மனேகரோ அல்லது வேல்முருகனே அவனைத் தொடர முயலவில்லை. முன் அறையை அடைந்த ராஜசுந்தரம் யாரோ தன்னை மிகவும் சன்னமான குரலால் அழைப்பதைக் கேட்டுத் திரும்பினான்.

பாலுதான் அங்கு நின்று கொண்டிருந்தான். அவன் உடல் வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. ராஜசுந்தரத்தின் கையை வேகமாக ஓடி வந்து பற்றிக் கொண்ட பாலு, "ராஜசுந்தரம்! நீ மாட்டிக் கொண்டிருக்கும் இடம் எப்படிப் பட்டதென்று உனக்குத் தெரியுமா? அந்தப் பெண் ஒரு ரத்த வெறி பிடித்த காட்டேரி! நீ உடனடியாக இந்த விவகாரத்திலிருந்து நழுவி விடுவதுதான் நல்லது. இல்லாவிட்டால் அவள் உன்னை உயிரோடு விட மாட்டாள்!" என்று படபடப்போடு கூறினான்.

"அவள் ஒரு பெண்தான், பாலு! ஒரு பெண்ணுக்குப் போய் இவ்விதம் நீ நடுங்கிச் சாவது ரொம்பவும் கோழைத் தனம்! என்னை அவளால் ஒன்றுமே செய்யமுடியாது! இதை நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள்!" என்று கூறினான் ராஜசுந்தரம்.

"இல்லை, ராஜசுந்தரம்! உனக்கு ஒன்றுமே தெரியாது. அறியாமல் இவளிடம் மாட்டிக் கொண்டு நான் படும் அவஸ்தை யாருக்கும் தெரியாது. எனவே நீ உடனே இந்த விவகாரத்தைக் கை கழுவி விடு இல்லாவிட்டால்—!"

"போதும் நிறுத்து உன் புலம்பலை!" என்று எரிச்சலோடு கூறினான் ராஜசுந்தரம்.

"இல்லை, ராஜசுந்தரம்! கடந்த சிலநாட்களாக அவள் வேல்முருகனிடம் நான் உபயோகமற்றவனாகப் போய் விட்டதாகவும், நான் அவர்களைக் காட்டிக் கொடுத்தாலும் கொடுத்து விடுவேனும். அதனால் என்னைக் கொல்ல அவள் அந்த நொண்டியோடு சதியாலோசனை செய்து வருகிறாள். நாளை சமயம் கிடைக்கும் போது ஓடிவிடப் போகிறேன்!

எனவே நீயும் ஓடிவிடு!'' என்று சன்னமான குரலில் கூறினான் பாலு.

''உன்னைக் கொல்ல திட்டமா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் ராஜசுந்தரம். உண்மையில் கோகிலாராணி ஒரு பிசாசு என்று தான் எடைபோட்டது உண்மைதான் என்பது அவனுக்குப் புரிந்தது. அவர்கள் எல்லோரையும் ஒரு சர்வாதிகாரி போல ஆட்டி வைக்கிறாள் கோகிலா என்பதும் அவனுக்குத் தெரிந்தது.

''ஆமாம்!'' என்று பாலு பதிலளிக்கும் பொழுது அவன் கண்களில் நீர் கசிந்தது. பாலுவைப் பார்க்க ராஜசுந்தரத்திற்குப் பரிதாபமாக இருந்தது.

அதே சமயம் உள் அறையிலிருந்து வெளியே வந்த கோகிலா, ''இன்னும் நீ போகவில்லையா, சுந்தரம்? பாலு உன்னிடம் என்ன பாடம் ஒப்புவித்துக் கொண்டிருந்தான்?'' என்று கேட்டபடி பாலுவை முறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையின் கொடூரத்தைத் தாங்க முடியாதவனாக பாலு தன் தலையை கவிழ்த்துக் கொண்டான்.

''ஒன்றுமில்லை!'' என்று கூறிய ராஜசுந்தரம் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான்.

## 4. சதித்திட்டம் வகுத்த சதிகாரி

ஒருவாரம் உண்மையில் ராஜசுந்தரத்திற்கு இனிமையாகக் கழிந்தது. கோகிலாராணி கூறிய வேலையைப்பற்றி கடுகளவு கூட எண்ணாதவனாக அந்தப் பணத்தை தண்ணீராகச் செலவிட்டுக்கொண்டு இருந்தான். அவனுடைய தனி ஜாகை ஒரு ஒதுக்குப்புறத்தில் இருந்தது.

இரவு ஒன்பது மணி சுமாருக்குத் தன் இருப்பிடத்தை அடைந்த ராஜசுந்தரம் யோசனையோடு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தபடி நாற்காலியில் அமர்ந்தான். தான் அந்த ஒதுக்குப்புறமான இடத்தில் குடியிருப்பதை யார் வந்தாலும் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணினான் ராஜசுந்தரம். எனவே கோகிலாராணியால் தன்னைக் கண்டுபிடிக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது.

அந்தப் பயங்கர கொலையைச் செய்ய ராஜசுந்தரம் சிறிதும் விரும்பவில்லை. ஆனால் வலியவரும் பணத்தை ஏன் மறுக்கவேண்டும். அதை வைத்துக்கொண்டு சிறிது காலம் இனிமையாக இருக்கலாம் என்ற எண்ணம் அவனுக்கு உதித்தது. திடீரென்று அவன் நினைவு பாலுவின்மீது சென்றது. அவன்தான் கொலை செய்யப்படப் போகிறோம்

என்று கூறியது உண்மையாகத்தான் இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. கோகிலாராணி எப்படிப்பட்ட சிராதகச் செயலையும் செய்யத் தயங்கமாட்டாள் என்பதை அவன் அவளைப் பார்த்த உடனேயே புரிந்துகொண்டான்.

அதேசமயம் வாசல் கதவு படபடவென்று தட்டப்படும் ஓசை கேட்டது. அந்த நேரத்தில் தன்னைத் தேடிவரும் நபர் யாராக இருக்கக் கூடுமென்று அவனுக்கு வியப்பாக இருந்தது. அவன் அங்கு தங்கியிருப்பது யாருக்குமே தெரியாது. ஒருக்கால் வழி தெரியாமல் யாராவது வந்து விசாரிக்கக் கூடும் என்று எண்ணியவனாகப் போய் கதவைத் திறந்தான். வெளியே இருளாகத் தென்பட்டால் நின்று கொண்டிருந்த உருவத்தை அவனால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

"யார், அது?" என்று கடுமையாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

அடுத்த கணம் அவனைத் தள்ளிக்கொண்டு அந்த உருவம் வேகமாக உள்ளே நுழைந்தது. எல்லையற்ற ஆச்சரியமடைந்த ராஜசுந்தரம், "கோகிலாராணி நீயா?" என்று கூச்சலிட்டான்.

அதற்கு பதிலாக ஒரு புன்னகை பூத்த கோகிலாராணி, "ஆமாம், சுந்தரம்! இந்த ஒருவார காலத்தில் நீ அவன் எங்கு இருக்கிறான் என்பதைக் கண்டுபிடித்து விட்டாயா?" என்று கேட்டாள்.

"இல்லை!" என்று அமைதியாகப் பதிலளித்தான் ராஜசுந்தரம்.

"ஏன்?" என்று கேட்டாள் கோகிலாராணி. அவள் குரலில் கடுமை தொனித்தது.

"இனியும் நான் அந்த வேலையைச் செய்யப் போவதில்லை!" என்று ஆணித்தரமாகக் கூறினான் ராஜசுந்தரம்.

அதைக் கேட்டு அவள் சிறிதும் மாற்றமடைந்ததாகத் தெரியவில்லை. அவன் முகத்தை அமைதியாக நோக்கிய கோகிலாராணி, "அப்படியானால் நான் கொடுத்த பணம் எங்கே?" என்று கேட்டாள்.

"அதுவும் உனக்கு வராது! அதை எப்பொழுதோ நான் செலவு செய்துவிட்டேன். அந்தப் பணத்தை நீ என்னிடம் கொடுத்தாய் என்பதற்கு என்ன ஆதாரம். அப்படி நீ என்னைப் போலீஸில் காட்டிகொடுக்க முயன்றாலும் நீதான் மாட்டிக்கொள்வாய். ஆதாரமில்லாமல் என்னை ஒன்றுமே செய்யமாட்டார்கள்!" என்று அமைதியாகக் கூறினான் ராஜசுந்தரம்.

"ஓஹோ?" என்று அலட்சியமாகக் கேட்ட கோகிலா ராணி, "நீ அதற்குத் துணிந்துவிட்டாயா? நாங்கள் போலீஸாரைவிட கொடூரமானவர்கள் என்பது உனக்குத் தெரியும். அப்படியும் எங்களிடம் விளையாடத் துணிந்துவிட்டாய்! ஆனால் உன்னை இந்த முதல் தடவை மன்னித்துவிடுகிறேன். இனிமேல் உன் வேலையை ஒழுங்காகச் செய்!" என்று அலமதியாகக் கூறினாள்.

"அது ஒருபோதும் நடக்காது, அம்மணி!" என்று இகழ்ச்சியாகக் கூறினான் ராஜசுந்தரம்.

அடுத்தகணம் தன் இடுப்பிலிருந்து ஒரு துப்பாக்கியை உருவி எடுத்த கோகிலாராணி, "இது என்னவென்று உனக்குத் தெரியும்! பாலுவின் உடலைத் துளைபோட்டதுபோல் அவன் நண்பனான உன் ரத்தத்தையும் இது ருசிக்குமுன்பு எங்கள் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். நீ எந்த மூலை முடுக்கில் ஒளிந்தாலும் நான் கண்டுபிடித்து விடுவேன், சுந்தரம்! இதை நினைவில் வைத்துக்கொள்!" என்று கூறிவிட்டு அவன் பதிலுக்குக் கூட காத்திராமல் வேகமாக வெளியே நடந்தாள்.

அவளையே வெறிக்கப் பார்த்தபடி அமர்ந்திருந்த ராஜசுந்தரத்திற்கு தான் வகையாக மாட்டிக்கொண்டு விட்டோம் என்று புரிந்தது. கோகிலாராணி, கூறியதை வைத்துப் பார்த்தால் அவள் பாலுவைக் கொன்றுவிட்டாள் என்பது அவனுக்குப் புரிந்தது. உடனே பாலு உண்மையில் இறந்துவிட்டானா என்று பார்க்க வேண்டுமென்ற தவிப்பு அவனுக்கு ஏற்பட்டது.

ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தன்னுடைய ஜாகையை விட்டு வெளியே வந்த ராஜசுந்தரம் ஜாகையை பூட்டிக்கொண்டு பாலுவின் வீடு இருந்த பாதிரியார் சந்தை நோக்கி நடந்தான். அரைமணி நேரத்தில் அவன் வீட்டை அடைந்துவிட்டான் ராஜசுந்தரம். அந்தத் தெருவில் இருந்த எல்லா கடைகளும் நேரமாகிவிட்டபடியால் சாற்றப்பட்டிருந்தன. ஒரே ஒரு கடைதான் பாக்கி இருந்தது. அதையும் அந்தக் கடையின் முதலாளி பூட்டிக்கொண்டிருந்தான். பாலுவின் வீடு சும்மா சாற்றப்பட்டிருந்தது. வீட்டினுள் ஒரே இருட்டாக இருந்தது. ஒருகணம் தயங்கிய ராஜசுந்தரம் தன்னை திடப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைந்தான். முன்பு அவர்கள் அமர்ந்திருந்த உள் அறைக்குச் சென்று தன்னுடைய டார்ச்சை அடித்துப் பார்த்தான். அங்கும் எல்லாம் சுத்தமாக இருந்தது. அதனுள் இருந்த மற்றொரு அறைக்குள் நுழைந்தான்.

COMICS PDF TIMES

தனது டார்சை அந்த அறையினுள் அடித்தான் ராஜசுந்தரம். அந்த அறையின் இடதுபக்க மூலேயில் ஒரு கட்டில் போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டிலில் ஒரு உருவம் அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு பக்கவாட்டில் சாய்ந்து படுத்திருந்தது. அதன்மேல் ஒரு கம்பளி போட்டு மூடப்பட்டிருந்தது. அதுதான் பாலுவாக இருக்கக் கூடுமென்று எண்ணிய ராஜசுந்தரம் வேகமாக அந்தக் கட்டிலே நோக்கி ஓடினுன்.

கட்டிலில் படுத்திருந்த மனிதனின் முகத்தில் டார்ச்சை அடித்தான் ராஜசுந்தரம். அந்த மனிதன் பாலுதான். அவன் கண்கள் திறந்திருந்தன. அவை எதையோ வெறிக்கப் பார்ப்பவை போலத் தோன்றின. கம்பளியை எடுத்தான் ராஜசுந்தரம். பாலுவின் நெஞ்சில் குண்டுபாய்ந்திருந்தது. கட்டிலின் மெத்தையில் சிறிதளவு ரத்தமே தென்பட்டது. பாலு வேறு ஏதோ இடத்தில் கொலே செய்யப்பட்டு அங்கு கொண்டுவந்து கிடத்தப்பட்டிருக்கிருன் என்பது ராஜசுந்தரத்திற்குப் புரிந்தது. பாலுவின் உடலே சோதனே செய்தான் ராஜசுந்தரம். அவன் கையில் ஒரு துப்பாக்கி தென்பட்டது.

அந்தத் துப்பாக்கியை வெடுக்கென்று அவன் கையிலிருந்து பிடுங்கிய ராஜசுந்தரம் அதை டார்ச் விளக்கின் உதவியால் ஆராய்ந்தான். அன்று மனேகர் அந்தத் துப்பாக்கியை வைத்துத்தான் தன்னே மிரட்டினுன் என்பது கொலே செய்யப் பயன் படுத்தப்பட்ட துப்பாக்கி பின் கொலேயுண்டவன் கையிலேயே சொருகப்பட்டு தற்கொலே செய்து கொண்டதைப்போல் சூழ்நிலேயை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்தது.

அந்தத் துப்பாக்கியை தன்னுடன் எடுத்துச் செல்ல விரும்பினுன் ராஜசுந்தரம். அதேசமயம் வெளி அறையிலிருந்து பேச்சு சத்தம் கேட்டது. கரகரத்த அந்தக் குரலேக் கேட்ட ராஜசுந்தரத்தின் மூளேயில் மின்வெட்டுபோல் ஒன்று தாக்கியது. அன்று கோகிலாராணி, அவர்கள் தேடும் மாணிக்கவேலின் குரல் கரகரப்பாக தகரடின் தரையில் உராய்வதுபோல் கர்ண்கடூரமாக ஒலிக்கும் என்று கூறியது அவன் நினேவுக்கு வந்தது. அப்படியாஞல் அது மாணிக்கவேலின் குரலாகத்தான் அது இருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. மாணிக்கவேல் ஏன் அந்த வீட்டில் அந்த நேரத்தில் வரவேண்டுமென்பதுதான் அவனுக்குப் புதிராக இருந்தது.

திடீரென்று ராஜசுந்தரத்திற்கு மாணிக்கவேலேப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே தனது

கையிலிருந்த துப்பாக்கியை கட்டிலின் விளிம்பில் வைத்து ராஜசுந்தரம் வேகமாக அடுத்த அறையை நோக்கி ஓடினான். அதேசமயம் இருட்டில் யாரோ ஓடுவதுபோல காலடிச் சத்தம் கேட்டது. காலடிச் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினான் ராஜசுந்தரம். அதேசமயம் அங்கிருந்து பறந்துவந்த குண்டு அவன் காதை உராய்ந்தபடி சென்றது.

அதைத் தொடர்ந்து மாடிப்படியில் யாரோ தடதட வென்று ஏறும் சத்தம் கேட்டது. ராஜசுந்தரம் மாடிக்குப் போவதா என்று ஒருகணம் தயங்கி நின்றான். ஆனால் அடுத்த கணம் தன்னை திடப்படுத்திக்கொண்டு மாடிப்படிகளை வேக மாகத் தாண்டி மாடியின் சமதளத்தை அடைந்தான். மாடியில் இரண்டே அறைகள்தான் காணப்பட்டன. அவற்றில் ஒன்றில் பழைய சாமான்கள் அடைக்கப்பட்டு பூட்டப்பட்டிருந்தது. அதனால் அந்த மர்ம மனிதன் அந்த அறைக்குள் நுழைந்திருக்க முடியாதென்று புரிந்துகொண்ட ராஜசுந்தரம் அடுத்த அறை திறந்திருந்தபடியால் அதிஜாக் கிரதையாக உள்ளே டார்ச்சினால் அடித்துப் பார்த்தான்.

அந்த அறை நாகரீகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த அறைக்குள் யாரும் ஒளிந்துகொள்ள வசதி யான இடம் எதுவும் இருக்கவில்லை. மேலே, மழைத் தண்ணீர் குழாயின் மூலமாக அவன் கீழே இறங்கித் தப்பித் திருக்கக் கூடுமோ என்று சந்தேகமடைந்த ராஜசுந்தரம் கீழே எட்டிப் பார்த்தான். ஆனால் யாரும் தப்பிச் சென்றதற் கான அடையாளம் எதுவும் தென்படவில்லை.

அதேசமயம் கீழே ஏதோ அரவம் கேட்டதைப் போக் ராஜசுந்தரத்திற்குத் தோன்றியது. ஒரே பாய்ச்சலாகக் கீழே வந்த ராஜசுந்தரம் பாலுவின் சடலம் கிடத்தப்பட் டிருந்த அறைக்கு விரைந்தான். கட்டிலின் விளிம்பில் அவன் வைத்திருந்த துப்பாக்கியை அப்பொழுது காணவில்லை. உடனே அவசரமாக வெளியே வந்தான் ராஜசுந்தரம். வாசல் கதவு விரியத் திறந்திருந்தது.

அதற்கு மேல் அங்கிருந்து பயனில்லை என்பதை உணர்ந்து கொண்ட ராஜசுந்தரம், வாசல் கதவை சும்மா சாத்தி வைத்துவிட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தான். தான் எதிர்பார்த்ததைவிட அந்த விவகாரம் மிகவும் மர்மம் நிறைந்தாக இருக்கக் கூடுமென்று அவனுக்குத் தோன்றியது. சேகூலாராணி கோஷ்டியினர் எங்கு சென்றிருப்பார்கள் என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. போலீஸாரிடம் அவர்கள் மாட்டிக்கொள்ள மாட்டார்கள் என்பது ஏனோ அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது.

அதே சமயம் தான் ஏன் பாலுவின் கையில் இருந்து எடுத்த துப்பாக்கியை அப்படி முட்டாள்த்தனமாக கட்டி லின் விளிம்பில் வைத்துவிட்டு சென்றேம் என்று அவனுக்கு வேதனையாக இருந்தது. அது இருந்திருந்தால் கொலை செய்யப் பயன் படுத்தப்பட்ட ஆயுதம் என்று ஒரு தடயமாக பயன்படுத்தலாம் என்று அவனுக்கு யோசனை தோன்றியது.

கோகிலாராணியின் அடுத்தத் திட்டம் என்னவென்பது அதனுல் சரியாக யூகிக்க முடியவில்லை. ஆனுல் அவனுடைய அடுத்தத் திட்டமும் இப்படி ஏதாவதொரு கொலைத்திட்ட மாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணினுன் ராஜ சுந்தரம். வேல்முருகன் போன்றவர்கள் ஆதரவினுல் ரத்த வெறி பிடித்த கோகிலாராணி போன்ற பெண்கள் எப்படி யெல்லாம் பயங்கர செய்கைகளைச் செய்கிருர்கள் என்று எண்ணி வியப்படைந்தான் ராஜசுந்தரம்.

உண்மையில் மாணிக்கவேலைக் கண்டுபிடித்தாலும் அவனைக் கொன்றுவிட ராஜசுந்தரத்திற்குச் சிறிதும் மன மில்லை. அவன் அனுபவித்த அந்த சித்ரவதையில் எதைக் கேட்டாலும் அவற்றை யாராயிருந்தாலும் உண்மையை மறைக்காமல் கூறிவிடுவார்கள். எனவே மாணிக்கவேல்மீது தப்பு இருப்பதாக ராஜசுந்தரம் எண்ணவில்லை.

இவற்றையே திரும்பத் திரும்ப சிந்தித்தபடி ராஜசுந்தரம் தன் ஜாகையை அடைந்தபொழுது இரவு மணி பனிரெண் டரை இருக்கும். அதற்குமேல் அவனுல் ஒன்றும் சிந்திக்க இயலவில்லை. கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்ட ராஜசுந்தரம் படுக்கையில் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் ஆழ்ந்த நித்திரை வசமாஞன்.

* * *

மறுநாள் மாலைவரை எதுவும் நடைபெறவில்லை. ராஜ சுந்தரம் தனது ஜாகையை விட்டு எங்கும் வெளியே கிளம்பிச் செல்லவில்லை. மாலை சுமார் நாலரை மணிக்கு சிறிது நடந்து விட்டு வரலாம் என்று எண்ணிய ராஜசுந்தரம் உடையை மாற்றிக்கொண்டு கிளம்பினுன். அதே சமயம் வாயிற் கதவை யாரோ பலமாகத் தட்டினுர்கள். ராஜசுந்தரம் சென்று கதவைத் திறந்தான்.

கோகிலாராணிதான் அங்கு நின்றுகொண்டிருந்தாள். ராஜசுந்தரத்தைப் பார்த்து ஒரு விஷமப் புன்னகை புரிந்த அவள், "இன்று நீ எங்குமே வெளியே செல்லவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை! ஏன் கேட்கிருய்?" என்று கேட்டான் ராஜ சுந்தரம். உண்மையில் கோகிலாராணியின் வரவை அவன்

...பார்க்கவில்லை. மேலும் அவள் வரவை அவன் விரும்பவும் இல்லை.

ஆச்சரியத்தோடு தனது கண்களை அகலமாக விரித்த கோகிலாராணி, "அப்படியானால் போலீஸார் உன்னைத் தேடும் விவரம் உனக்குத் தெரியாதா?" என்று வியப்போடு கேட்டாள்.

"போலீஸார் என்னைத் தேடுகிறார்களா? என்ன உளறுகிறாய்? உன்னைத் தேடுகிறார்கள் என்று சொல்!" என்று கடுமையாகக் கூறினான் ராஜசுந்தரம்.

அவனையே ஒரு நிமிடம் பச்சாபத்தோடு பார்த்துக் கொண்டிருந்த கோகிலாராணி, "த்சோ! உனக்கு நான் சொல்வது பொய்யென்று தோன்றினால் இந்தப் பத்திரிகையைப் படித்துப்பார்!" என்று கூறிவிட்டுத் தன் கையிலிருந்த ஒரு பத்திரிகையை மேஜைமீது விட்டெறிந்தாள்.

முதல் பக்கத்தில் வெளியாகியிருந்த செய்தியைப் படித்த ராஜசுந்தரம் திடுக்கிட்டான். அதில் வெளிவந்திருந்த செய்தி இதுதான்.

**மர்மக் கொலை!**
**கொலையாளி தப்பிவிட்டான்!**
**போலீஸ் வலை வீச்சு!**
**சோலைப்பாக்கம்,**

நேற்று இரவு "பாதிரியார் சந்து" என்னும் இடத்தில் இருந்த ஒரு வீட்டில் ஒரு மனிதன் மர்மமாக சுடப்பட்டு இறந்துகிடந்தான். அதைப் பார்த்து போலீஸாருக்குத் தகவல் தெரிவித்தவர், அந்தத் தெருவில் கடை வைத்திருந்த சங்குண்ணி நாயர் என்பவர். அதன் விவரம் வருமாறு:

மர்ம மனிதன்:

நேற்று இரவு சுமார் பத்தரை மணிக்கு ஒரு மர்ம மனிதன் அந்த வீட்டுக்குள் நுழைந்திருக்கிறான். அவன் சுற்றுமுற்றும் பார்த்து திருட்டுத்தனமாக வீட்டினுள் நுழைவதை அப்பொழுதுதான் கடைக் கட்டிக்கொண்டிருந்த நாயர் பார்த்திருக்கிறார். கதவு சும்மா சாத்தப்பட்டிருந்ததால் அந்த மர்ம மனிதன் சுலபமாக உள்ளே நுழைந்துவிட்டான்.

அவனது சந்தேகமான நடவடிக்கையைப் பார்த்த நாயர் கடையைக் கட்டிவிட்டு வீட்டிற்குப் போகாமல் அந்தத் தெருவிலேயே மறைந்து இருந்து அந்த வீட்டையே கவனித்துக் கொண்டிருக்கிறார். சிறிது நேரத்தில் துப்பாக்கி வெடிச் சத்தம் ஒன்று எழும்பி

யிருக்கிறது. அதைத் தொடர்ந்து சில நிமிடங்கள் கழித்து அந்த மர்ம மனிதன் வெளியே வந்தான். பழையபடி கதவைச் சும்மா சாத்திவிட்டு வந்த வழியே நடந்திருக்கிறான்.

பயங்கரக் கொலை:

அவன் உள்ளே என்ன செய்தான் என்பதை அறிய எண்ணிய நாயர் தனது டார்ச் விளக்குடன் அவன் அந்தத் தெருவைவிட்டு அகன்றதும் வீட்டினுள் நுழைந்திருக்கிறார். ஒவ்வொரு அறையாகப் பார்த்து வந்த நாயரின் கண்களில் உள் அறையில் கட்டிலின் மீது கிடத்தப்பட்டிருந்த பிணம் தென்பட்டது.

அளவு கடந்த கலக்கத்திற்கு ஆளான நாயர் உடனே போலீஸுக்குப் போன் செய்திருக்கிறார். போலீஸார் உடனே சென்று பிணத்தைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இறந்த மனிதன் துப்பாக்கியால்தான் சுடப்பட்டிருக்கிறான் என்பது உறுதியாயிற்று.

வலைவீச்சு:

மறைந்த அந்த மர்மக் கொலையாளியை போலீஸார் வலைவீசித் தேடி வருகிறார்கள். சுடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் அங்குக் காணப்படவில்லை. அந்த வீடு போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் கொலையாளியின் அங்க அடையாளங்களை சங்குண்ணி நாயர் தெரிவித்திருக்கிறார்.

அதில் குறிப்பிட்டிருந்த தனது அங்க அடையாளங்களைப் படித்துப் பார்த்த ராஜசுந்தரத்தின் கண்கள் கோபத்தால் சிவந்தன. கோகிலராணியின் பக்கம் தனது பார்வையைத் திருப்பிய அவன் கண்களின் கோபக்கனல் வீச, "எல்லாம் உன்னால் விளைந்தது!" என்று குமுறினான்.

"உன்னுடைய முட்டாள்தனத்தினால் விளைந்ததுதான் இவையெல்லாம்!" என்று அமைதியாகக் கூறிய கோகிலா ராணி, "உன்னை யார் கொலை நடந்த அந்த வீட்டிற்குப் போகச் சொன்னது!" என்று கேட்டாள்.

அதற்கு மௌனம் சாதித்த ராஜசுந்தரம், "நேற்று அந்த வீட்டில் மாணிக்கவேலின் குரலைக் கேட்டேன்!" என்று கூறினான். பிறகு, "அவன்தான் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை எடுத்தவன்!" என்றான்.

"அதை அவன் எடுக்கவில்லை! என் ஆள்தான் எடுத்து வந்தான். அதில் உன்னுடைய கைரேகை இருக்கிறது. தற்கொலை என்று காட்ட நாங்கள் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை பாலுவின் கையில் சொருகி

...தாம். ஆனால் நீ முட்டாள்த்தனமாக அதை ...த்தாய். மேலும் மாணிக்கவேலைத் தேடிக்கொண்டு நீ ...றபோது துப்பாக்கியை அங்கேயே விட்டுவிட்டு ...டாய். அப்பொழுது அங்கே சென்ற என்னுடைய ஆள் ...தை எடுத்துவந்து விட்டான். அதுவும் எனக்கு ஒரு ...கத்தில் சாதகமே! உன்னைப்போல காட்டுமிராண்டி ...யுள்ள மனிதனை அடக்க அப்படி ஒன்று இருந்தால்தான் ...யும்!'' என்று நிறுத்தினாள் கோகிலாராணி.

''இப்பொழுது நீங்கள் சொல்லியிருக்கும் வேலையை நான் செய்யத் தவறினால்—?'' என்று கேட்டான் ராஜசுந்தரம்.

''துப்பாக்கி உன் கைரேகையோடு போலீஸாரிடம் போய்ச் சேரும்!'' என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியே நடந்தாள் கோகிலாராணி.

## 5. படுகொலையுண்ட பாவை!

கோகிலா ராணி சென்ற பிறகு சில நிமிடங்களில் வேல்முருகன் ராஜசுந்தரத்தின் ஜாகைக்கு வந்தான். அவன் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்திருந்தது. அந்த நிலையில் ராஜசுந்தரம் யாரையுமே வரவேற்கத் தயாராயில்லை. அதிலும் கோகிலா ராணியின் கோஷ்டியினரை அவன் கடுமையாக வெறுத்தான்.

''நீ உன்னுடைய வேலையை ஆரம்பித்துவிட்டாயா, ராஜசுந்தரம்! அதுதான்—மாணிக்கவேலைத் தேடும் வேலையைத்தான் குறிப்பிடுகிறேன்!'' என்றான் வேல்முருகன்.

''அவன் இந்தப் பரந்த உலகத்தில் எந்த மூலையில் இருக்கிறானோ அதனால் அவனைப்பற்றி எதுவும் தகவல் கொடுத்தால் தவிர என்னால் இந்த விவகாரத்தில் ஒன்றுமே செய்ய முடியாது!'' என்று தீர்க்கமாகக் கூறினான் ராஜசுந்தரம்.

''நீ செய்தே ஆகவேண்டும்! கோகிலாராணியின் குணத்தைப்பற்றி உனக்கு மிக நன்றாகத் தெரியும் அப்படி இருக்கும்பொழுது நீ இப்படி முட்டாள்த்தனமாக நடந்து கொண்டு நீயே ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளாதே!'' என்று எச்சரித்த வேல்முருகன், ''நீ அப்படி வேலையை முடிக்கத் தவறினால் உன் கைரேகையோடு துப்பாக்கியை போலீஸாரிடம் கொடுத்துவிடக்கூட கோகிலாராணி தயங்க மாட்டாள் எனவே அவள் விஷயத்தில் சிறிது எச்சரிக்கையுடன் இரு!'' என்றான்.

அதற்கு மௌனம் சாதித்த ராஜசுந்தரம், "நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது! ஆனல் அவனை எப்படித் தேடுவது? எந்த மூலையில் மாணிக்கவேல் இருக்கிருனென்பது எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

"மாணிக்கவேலுக்கு ஒரு தங்கை இருக்கிருள். அவளுக்கு ஒரு நெருங்கிய தோழி ஆஷா என்ற பெயரோடு இருக்கிருள். அவளை நீ போய் பார்த்தால் அவள் மாணிக்கவேலின் தங்கை எங்கு குடியிருக்கிருள் என்பதை உனக்குத் தெரிவிக்கக் கூடும். அவள் தங்கையிடம் அதிஜாக்கிரதையாகப் பழகி நீ அவள் அண்ணன் மாணிக்கவேல் எங்கே இருக்கிருன் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்! இந்த விஷயத்தில் நீ மிகவும் எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும், ராஜசுந்தரம்!'' என்று மெல்லிய குரலில் கூறினன் வேல்முருகன்.

"புரிகிறது!'' என்று தலையாட்டினன் ராஜசுந்தரம். பிறகு வேல்முருகனை நிமிர்ந்து பாகத்தபடி, "ஆஷா என்ற அந்தப் பெண் எங்கு இருக்கிருள் என்பது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

"அவள் எங்கு குடியிருக்கிருள் என்பது எனக்குத் தெரியாது! ஆனல் அவள் இலவச மருத்துவமனை ஒன்றில் நர்ஸ் வேலை பார்க்கிருள். நீ அங்கு போய் விசாரித்துப் பார்த்தால் அவள் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ளலாம். அந்த இலவச மருத்துவமனை ராஜரங்கம் வீதியில் இருக்கிறது!'' என்று கூறிய வேல்முருகன் திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவனுக, "இந்த விஷயங்களையெல்லாம் நான் உனக்குக் கூறியதை தப்பித்ததவறி கூட கோகிலா ராணியிடம் தெரிவித்துவிடாதே!'' என்று தனது குரலைத் தாழ்த்திக்கொண்டு கூறினன் வேல்முருகன்.

அவனையே விசித்திரமாகப் பார்த்த ராஜசுந்தரம், "ஏன்? நீங்கள் எல்லோரும் ஏன் கோகிலாராணியிடம் இவ்வளவு பயப்படுகிறீர்கள்! ஆனலும் அவள் ஒரு பெண்தானே?'' என்று கேட்டான்.

"உனக்குத் தெரியாது, ராஜசுந்தரம்! அவள் எங்களையெல்லாம் எப்படி ஆட்டி வைக்கிருள் என்பது கடவுளுக்கும் எங்களுக்கும்தான் தெரியும்! உன்னையும் சிறிது காலத்தில் எங்களைப்போல பொம்மையாக்கி தன் கைக்குள் வைத்துக் கொள்ளப் போகிருள்!'' என்றுன் வேல்முருகன். அவன் குரலில் சிறிது நடுக்கம் தென்பட்டது.

"நீங்கள் எல்லோரும் அவளை விட்டு விலகி விடுவது தானே?'' என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"அது எப்படி முடியும்? உன்னால் இப்பொழுது அவள் அதிகாரத்திலிருந்து எப்படி நழுவ முடியாதோ அதே போல எங்களுடைய சில குற்றங்களை அவள் தெரிந்து வைத்துக் கொண்டு எங்களை ஆட்டிப் படைத்து வருகிறாள், ராஜ சுந்தரம்!" என்று கூறினான் வேல்முருகன்.

"நீங்கள் எல்லோரும் அவளுக்கு எதிராகக் கிளம்பினால் அவளால் ஒன்றுமே செய்ய முடியாது அல்லவா? அந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டு நீங்கள் நழுவி விடுவது தான் நல்லது அல்லவா?" என்றுகேட்டான் ராஜசுந்தரம்.

"அப்படி நாங்கள் எதுவும் செய்ய முயன்றால் எங்கள் எல்லோரையும் ஒவ்வொருவராக சுட்டுப் படுகொலை செய்யக் கூடத் தயங்க மாட்டாள் கோகிலாராணி! அதனால் ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்தவுடன் நாங்கள் எல்லோரும் நழுவி விடுவோம்!" என்று கூறினான் ராஜசுந்தரம்.

"நீங்கள் எல்லோரும் எவ்வளவு காலமாக இப்படி ஒரு பெண்ணுக்கு அடிமையாகி இருக்கிறீர்கள்?"

"எங்களுடைய ராணுவ வாழ்க்கையிலிருந்தே இப்படி அவளிடம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். இடையில் வந்தவன் பாலு. அவனை அவள் ஈவிரக்கமின்றிக் கொன்று விட்டாள்!" என்று தன்னுடைய உடலைச் சிலிர்த்துக் கொண்ட வேல்முருகன், "நல்லது, ராஜசுந்தரம்! உன்னுடைய வேலையை நீ ஆரம்பிக்கலாம். உனக்கு ஏதாவது உதவி தேவைப்படும் பொழுது அதை என்னிடம் தெரிவி! நான் வருகிறேன்!" என்று கூறிவிட்டு ராஜசுந்தரத்திடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

ராஜரங்கம் வீதியைக் கண்டு பிடித்து அதிலிருந்த மருத்துவமனையைக் கண்டு பிடிக்க ராஜசுந்ரத்திற்கு சிறிதுநேரம் பிடித்தது. போலீஸார் தன்னைப் பிடித்து விடக் கூடுமோ என்று பயந்த அவன், ஒட்டு மீசை போன்ற சில உபகரணங்களால் தன்னை மாற்றிக் கொண்டிருந்தான். அவனுக்குத் தெரிந்தவர்களே அவனை அடையாளம் காண முடியாதபடி அவ்வளவு கச்சிதமாக அமைந்திருந்தது அவனுடைய மாறு வேடம். அவன் அந்த மருத்துவ மனையை அவன் அடைந்த பொழுது இரவு மணிஎட்டு.

தலைமை டாக்டரிடம் விசாரித்து ஆஷாவைப் பற்றி தெரிந்து கொண்ட ராஜசுந்தரம் ஆஷா அப்பொழுதுதான் தனது வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பப் போகிறாள் என்பதை அறிந்ததும் அவளுடனேயே அவள் வீட்டிற்குச் செல்லலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதே

சமயம் தன்னை டாக்டரிடம் கூறிக் கொண்டு புறப்பட அந்த அறைக்குள் நுழைந்த ஆஷாவிடம் டாக்டர் எல்லாவற்றையும் கூறினார்.

ராஜசுந்தரத்தையே வியப்போடு பார்த்த ஆஷா, "என்னைத் தேடி நீங்களா வந்திருக்கிறீர்கள்? உங்களை எனக்கு அடையாளம் தெரியவில்லையே!" என்றாள்.

"நாம் வீட்டிற்குப் போய் பேசலாமா?" என்று அங்கே எந்தவித ரசாபாசமும் நடக்க விரும்பாதவனைப் போல கூறினான் ராஜசுந்தரம்.

'சிறிது தயங்கிய ஆஷா ஒரு முடிவுக்கு வந்தவளாக, 'ஓ! நாம் போகலாம்!" என்று கூறிவிட்டு டாக்டரிடம். விடை பெற்றுக் கொண்டும் ராஜசுந்தரம் பின் தொடர வெளியே நடந்தாள்.

"உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"நடந்து செல்லும் தூரத்தில்தான் இருக்கிறது!" என்று கூறிய ஆஷா, "உங்களை எனக்கு அடையாளம் தெரியாததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

"உனக்கு என்னைத் தெரியாது! எனக்கும் உன்னைப் பற்றி எதுவும் தெரியாது. என் நண்பரின் தங்கையின் சிநேகிதி என்பதைத் தவிர!" என்று பதிலளித்தான் ராஜசுந்தரம்.

"யார்? தமயந்தியைக் குறிப்பிடுகிறீர்களா? அதுதான் மாணிக்கவேலின் தங்கை. அவளைத் தவிர எனக்கு வேறு சிநேகிதிகளே கிடையாது!" என்று கூறினாள் ஆஷா.

"ஆமாம்!" என்று அவசரமாகக் கூறிய ராஜசுந்தரம், "அவள் விலாசம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய டைரியில் எழுதி வைத்திருக்கிறேன். அதை உங்களுக்குக் காட்டுகிறேன்!" என்று கூறினாள் ஆஷா.

அதன் பிறகு அவர்கள் இருவரும் பேசவில்லை. அவர்கள் ஆஷாவின் வீட்டை அடைய சுமார் பத்து நிமிடங்கள் பிடித்தன. மிகச் சிறிய வீடாயினும் அது மிகவும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. வரவேற்பு அறையில் ராஜசுந்தரத்தை அமரச் செய்து விட்டு காப்பி தயாரித்த ஆஷா அதை இரண்டு கோப்பைகளில் ஊற்றி எடுத்து வந்தாள். அவனிடம் ஒரு கோப்பையை கொடுத்த ஆஷா மற்றொரு கோப்பை காப்பியை தான் பருக ஆரம்பித்தாள்.

அவளுடைய நிதானத்தைப் பார்த்து சிறிது எரிச்சல் அடைந்த ராஜசுந்தரம், "எனக்கு தயவுசெய்து அவளுடைய

விலாசத்தைத் தெரிவிக்கிறீர்களா? என் வீடு மிகவும் தொலைவில் இருக்கிறது. சீக்கிரம் போயாக வேண்டும்!'' என்று கூறினான்.

அதைக் கேட்டு புன்னகை புரிந்த ஆஷா, ''இதோ எழுந்து வருகிறேன் என்று கூறிவிட்டு வேகமாக மாடியேறி சென்றாள். அவள் சென்ற சில வினாடிகளில் தெருக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து வேல் முருகன் அங்கு வந்தான்.

அவனது திடீர் வரவை அங்கு எதிர் பார்க்காத ராஜ சுந்தரம் மிகுந்த வியப்படைத்தான். ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், ''நீ எங்கே இங்கே வந்திருக்கிறாய்!'' என்று கேட்டான்.

''உனக்கு முன்னால் மாணிக்கவேலின் தங்கை இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கவே இங்கு வந்தேன்! ஆனால் என்னை முந்தி விட்டாய்!'' என்று கூறி விட்டுச் சிரித்தான் வேல்முருகன்.

அதே சமயம் மாடியில் யாரோ பேசும் குரல் கேட்டது. அதைக் கேட்டு திடுக்கிட்ட ராஜசுந்தரம் வேல் முருகனின் கையைப் இறுகப் பற்றிக் கொண்டு பதட்டமான குரலில், ''வேல்முருகன்! அது,—அது மாணிக்கவேலின் குரல்!'' என்று படபடப்போடு கூறினான்.

அவனுடைய படபடப்பைச் சிறிதும் லட்சியம் செய்யாத வேல்முருகன், ''நீ இதில் தலையிடாதே, ராஜசுந்தரம்!'' என்று கடுமையாகக் கூறினான்.

''நான் இந்த விவகாரத்தில் மாணிக்கவேலைக் கண்டு பிடிக்கவே நியமிக்கப் பட்டிருக்கிறேன், வேல்முருகன்!'' என்று அவசரமாகக் கூறினான் ராஜசுந்தரம்.

''அது எனக்குத் தெரியும்! ஆனால் இப்பொழுது நீ மாடிக்குச் சென்றால் உனக்கு ஒரு பயங்கரமான ஆபத்து ஏற்படக் கூடும்! எனவே நீ பேசாமல் இங்கே இருப்பதுதான் நல்லது!'' என்று எச்சரித்தான் வேல்முருகன்.

அவனையே விசித்திரமாகப் பார்த்த ராஜசுந்தரம், ''உன் போக்கே எனக்குப் புரியவில்லை! ஒரு சமயம் கோகிலா ராணியின் ஆளைப்போலத் தோன்றுகிறாய்! மற்றொரு சமயம் நல்லவன் போல தோன்றுகிறாய்!'' என்றான். அதைக் கேட்டு வேல்முருகன் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

அதே சமயம் மாடியில் தடதடவென்று யாரோ ஓடும் சத்தம் கேட்டது. பிறகு சாமான்கள் தடதடவென்று உருளும் ஓசைகளும் கேட்டன. அதைக் கேட்டு ராஜசுந்தரம் பரபரப்படைந்தான்.

COMICS PDF TIMES

அப்பொழுது ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் அலறல் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஆஷாவின் உடல் மாடிப்படியிலிருந்து செங்குத்தாக தரையை நோக்கி விழுந்தது. அவளை நோக்கி வேகமாக ஓடினான் ராஜசுந்தரம். அவள் உடலில் அசைவு இல்லை. அவள் நாடியைப் பரிசோதித்த ராஜசுந்தரம் அவள் இறந்து விட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான். அடுத்த கணம் மாடியை நோக்கி ஓடினான். ஆனால் மாடி காலியாக இருந்தது!

## 6 திடீர் அதிர்ச்சி!

ராஜசுந்தரம் வியர்க்க விறுவிறுக்க கீழே ஓடிவந்தான். வேல்முருகன் முகத்தில் அமைதி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ராஜசுந்தரத்தின் செய்கையை சினிமா பார்ப்பது போல சர்வ சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவன், "நீ ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறாய் ராஜ சுந்தரம்?" என்று கேட்டான்.

அளவு கடந்த ஆச்சரியத்தோடு அவனை நோக்கித் திரும்பிய ராஜசுந்தரம், "என்ன கேட்டாய், வேல்முருகன்! இங்கு ஒரு கொலையே நடந்திருக்கிறது! நீ இவ்வளவு சர்வ சாதாரணமாக உட்கார்ந்திருக்கிறாயே?" என்று கேட்டான்.

"இந்தக் கொலை சம்பந்தமாக நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அதனால் பதட்டப் படுவதிலும் அர்த்தமில்லை. வீணாக பரபரப்படைந்து ஊரைக் கூட்டினால் நமக்குதான் சங்கடங்கள் நேரும்! எனவே சிறிது நேரம் உன்னுடைய கூச்சலை நிறுத்திக் கொள்!" என்று கூறிய வேல்முருகன் பிணத்தை நோக்கி நடந்தான்.

செங்குத்தாக விழுந்ததால் மண்டை நொறுங்கி இறந்திருக்கிறாள் ஆஷா. அவள் கையில் ஒரு கறுப்பு டைரி இருந்தது. அதை மெதுவாக உருவிய வேல்முருகன் அதை எடுத்துக் கொண்டுதான் இருந்த இடத்திற்குத் திரும்பினான்.

"இந்த டைரியில்தான் மாணிக்கவேலின் தங்கையின் விலாசம் இருக்கிறதென்று உன்னிடம் கூறினாள் அல்லவா?" என்று கேட்ட வேல்முருகன் அந்த டைரியைப் புரட்டினான். டைரியின் கடைசி பக்கத்தில் ஒரு விலாசம் எழுதப்பட்டிருந்தது. அது இதுதான்!

குமாரி தமயந்தி
44, வேஷப் பிரகாசம் தெரு
சோலைப்பாக்கம்

அதைப் படித்துப் பார்த்துவிட்டு ராஜசுந்தரத்திடம் அதை நீட்டிய வேல்முருகன், "நீ இதை வைத்துக்கொண்டு மாணிக்கவேலைத் தேடலாம்!" என்று கூறிவிட்டு டைரியை அவனிடம் கொடுத்தான்.

அதை வாங்கித் தனது சட்டைப் பாக்கெட்டில் பத்திரப் படுத்தி வைத்துக் கொண்ட ராஜசுந்தரம், "இனியும் நாம் இங்கு இருப்பது ஆபத்து. நாம் புறப்படலாம்!" என்று கூறிவிட்டு தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்தான்.

"சற்றுப் பொறு!" என்று கூறியபடி மாடியிலிருந்து கோகிலாராணி இறங்கி வந்தாள். அவள் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது.

அந்த இடத்தில் அவளைச் சந்திக்க நேர்ந்ததைக் குறித்து மிகுந்த ஆச்சரியமடைந்த வேல்முருகன், "கோகிலாராணி! நீயா!" என்று கூச்சலிட்டான்.

அவனை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்த கோகிலாராணி தனது துப்பாக்கியை இடுப்பில் சொருகிக் கொண்டாள். ராஜசுந்தரத்தை நோக்கித் திரும்பிய கோகிலாராணி, "உன்னுடைய வேலையை நீ சுறுசுறுப்பாக செய்ய வேண்டும், ராஜசுந்தரம்! போலீஸார் உன்னைத் தேடி வருகிறார்கள்! இந்த வேலையை நீ முடித்து பிறகு கொடுக்கப் போகும் ஐயாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு நீ ஏதாவது வெளிநாட்டுக்கு ஓடிப்போய் விடு! இதுதான் நீ தப்புவதற்கு ஒரே வழி!" என்று கூறினாள்.

"நீ எப்படி மாடிக்கு வந்தாய்?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"இந்தக் கேள்வி அநாவசியமாகக் கேட்கப்பட்டது! இருந்தாலும் பதில் சொல்லுகிறேன்" நான் மாணிக்கவேலைத் தேடி இங்கே வந்தேன்! மாடியிலிருந்து அவன் தப்பி விட்டான்!" என்று பதிலளித்தாள் கோகிலாராணி.

"மாணிக்கவேலின் தங்கையின் சிநேகிதியின் வீட்டில் அவன் இருப்பான் என்று நம்பியது முட்டாள்தனம்!" என்று மிடுக்காகக் கூறினான் ராஜசுந்தரம்.

அவனை சுட்டெரிப்பதுபோலப் பார்த்த கோகிலாராணி, "இதை நீ கேட்டதற்கு உனக்கு நான் பரிசளித்திருக்க வேண்டும். ஆனால் அவன் இங்கே வந்திருந்தான். என் கண்களால் அவனைப் பார்த்தேன்!" என்று பதிலளித்தாள்.

"அவன் இங்கே வரக் காரணமென்னவாக இருக்கும்?" என்று தனக்குள்ளே கேட்டுக் கொள்பவனைப் போல கேட்டான் ராஜசுந்தரம்.

"ஒருகால் நாம் இங்கே வரக்கூடுமென்று அவன் எதிர்ப் பார்த்திருக்கலாம். அதனால் ஆஷாவை எச்சரிக்க அவன்

இங்கு வந்திருக்கலாம்!'' என்று கூறிய கோகிலாராணி, 'நாம் புறப்படலாம்''' என்று கூறிவிட்டு எழுந்தாள்.

சில நிமிடங்களில் எல்லோரும் அந்த வீட்டை விட்டு வெளியேறினர். ராஜசுந்தரத்தின் மனம் ஏனோ சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது. அவனுக்கு இந்த விவகாரமே ஒரு பெரிய குழப்பத்தை அளித்தது. தனது ஜாகையை அவன் அடைந்த பொழுது இரவு மணி பனிரெண்டரை. தானே ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாக அவனுக்குத் தோன்றியது.

* * *

தமயந்தியின் விலாசத்தைத் தேடி கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. பல இடங்களைச் சுற்றியபின் சரியான விலாசத்திற்கு வந்து சேர்ந்தான் ராஜசுந்தரம். மிகவும் அமைதியாக இருந்த அந்த சாலையில் சுமார் இருபது வீடுகளே காணப்பட்டன. அதனால் தமயந்தியின் வீட்டைக் கண்டு பிடிப்பது அவனுக்குச் சிறிது சுலபமாக இருந்தது.

அந்த வீட்டைச் சுற்றி அழகான தோட்டம் போடப் பட்டிருந்தது. மிகச் சிறிய வீடான அது பார்வைக்கு மிக அழகாக இருந்தது. வீட்டின் வாயிலில் இருந்த அழைப்பு மணி பொத்தானை அழுத்திய ராஜசுந்தரம் தோட்டத்தின் இயற்கை எழிலைக் கண்டு ஒரு வினாடி மயங்கி நின்றான்.

அதே சமயம் வீட்டின் கதவைத் திறந்த இருபது வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி; "நீங்கள் யார்? நீங்கள் யாரைப் பார்க்கவேண்டும்?'' என்று கேட்டாள்.

அவள்தான் தமயந்தியாக இருக்கவேண்டுமென்று யூகித்த ராஜசுந்தரம், "நீதான் மாணிக்கவேலின் தங்கையா?'' என்று கேட்டான்.

ஆச்சரியமடைந்த தமயந்தி, "ஆமாம்! நீங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டாள்.

"உன் அண்ணன் மாணிக்கவேலின் நெருங்கிய நண்பன் தான்! ராணுவத்தில் நாங்கள் இருவரும் இணைபிரியா தோழர்கள்!'' என்று கூறிய ராஜசுந்தரம், "அவனைப் பார்த்து பல வருடங்கள் ஆகின்றன. அதனால் அவனைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!'' என்று கூறினான்.

"உங்களைப் பற்றி என் அண்ணா என்னிடம் ஒன்றும் கூறியதில்லை. உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டாள் தமயந்தி.

"ராஜசுந்தரம்!''

"நீங்கள் என் சகோதரனைத் தேடியா வந்திருக்கிறீர் கள்!"

"ஆமாம்!"

அதைக் கேட்டு கலகலவென்று சிரித்த தமயந்தி, "உங்க ளுக்குத் தெரியாதா? அவன் இறந்து போய் இரண்டு வருடங் களாகின்றனவே!" என்ருள்.

# 7 இரட்டைக் கொலை!

மனேஜரின் கண்கள் கோபக் கனலை வீசின. கோகிலா ராணியையே ஆத்திரத்தோடு பார்த்த அவன் வெறுப்போடு ஏதோ முணுமுணுத்தான். பிறகு, "கோகிலா! நீ செய்வது விரும்பத் தக்க செயலல்ல!" என்று பொருமினன்.

அவற்றையெல்லாம் லட்சியம் செய்யாத கோகிலாராணி "நீ எதற்காக இப்படி துடிக்கிருய்? என்ன நடந்து விட்டது?" என்று கேட்டாள்.

"என்னதான் நடக்கவில்லை—?" என ஆரம்பித்த மனே ஜரை இடைமறித்த கோகிலாராணி, "வாயை மூடு! என் விஷயத்தில் ரொம்பவும் தலையிடுகிருய் நீ! பிறகு உன் முடிவு ரொம்பவும் பரிதாபகரமானதாக இருக்கும் என்று உன்னை எச்சரிக்க விரும்புகிறேன்!" என்று கடுமையாகக் கூறினுள்.

"நான் ஒன்றும் தப்பாகச் சொல்லி விடவில்லை! அந்த தாண்டியை முதல் வேலையாக ஒழித்துக் கட்டு! உனக்கு விருப்பமில்லாவிட்டால் நான் அதைச் செய்கிறேன்!" என்று படபடப்போடு கூறினுன் மனேஜர்.

"வேல்முருகனைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும்! அதனல் அவனை நீ ஒன்றும் செய்ய வேண்டாம். மீறி எதுவும் செய்தாயானல் வேல்முருகனுக்கு என்ன கதி ஏற்படுகிறதோ அந்த கதிதான் உனக்கும் ஏற்படும்!" என்று கடுமையாக எச் சரித்தாள் கோகிலாராணி.

"அவன் அந்த ராஜசுந்தரத்தோடு ஒட்டிக் கொண்டு அலைகிருன். அதனல் அவன்மீது எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. அவன் நமக்கு எதிராகத் திரும்பினலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!" என்று கூறினுன் மனேஜர்.

"நல்லது! அவனை நான் விசாரித்துக் கொள்ளுகிறேன்!" என்று கூறிய கோகிலா அந்த அறையை விட்டு வெளியே நடந்தாள்.

அவர்கள் தங்கியிருந்த "அம்மணிமான்ஷன்" என்னும் அந்தச் சிறிய ஹோட்டலில் மொத்தம் பதினைந்து அறைகளே காணப்பட்டன. பாலுவைக் கொலை செய்த பின்பு அவர்கள்

எல்லோரும் அந்த ஹோட்டலுக்கு ரகசியமாகக் குடி பெயர்ந்து விட்டனர். அதனுல் பாலுவின் கொலேக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் ஏற்படுத்த இடமில்லாமல் போய் விட்டது. மேலும் அந்தவட்டாரத்து ஜனங்களுக்கு கோகிலா ராணியின் கோஷ்டியினரைப் பற்றி கொஞ்சம் கூடத் தெரி யாததால் அவர்களால் ஒன்றும் சாட்சி சொல்ல முடியவில்லே.

உண்மையில் கோகிலாராணி வேல்முருகனேப் பற்றி மனேகர் கூறியது உண்மையாக இருக்கக் கூடுமோ என்று சந் தேகித்தாள். அவனே விசாரிக்க வேண்டுமென்ற முடிவோடு அவள் வெளி அறையை அடைந்த பொழுது வேல்முருகன் உள்ளே நுழைந்தான். கோகிலாராணியைப் பார்த்தும் பார்க்காதது போல உள் அறையை நோக்கி நடந்தான்.

அவனது செயலேயே குறிப்பாகக் கவனித்துக் கொண்டி ருந்த கோகிலாராணி, "வேல்முருகன்! கொஞ்சம் இரு! இப் பொழுது எங்கே போகிருய்?" என்று அதிகாரத்தோரணேயில் கேட்டாள்.

அவளது இந்த திடீர்க் கேள்வியிஞல் திகைத்துப் போன வேல்முருகன், "கோகிலா! உனக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டான்.

"உன்னே என்னிடம் கேள்வி கேட்க நான் சொல்ல வில்லே! மரியாதையாக நான் கேட்ட கேள்விக்கு பதில்சொல் வதோடு நிறுத்திக் கொள்!" என்று கடுமையாகக் கூறிஞள் கோகிலாராணி.

"நான் சாப்பிடப் போகிறேன்!" என்று பதிலளித்தான் வேல்முருகன். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்திருந் தன. கோகிலாராணியின் இந்த திடீர் மாறுதல் அவனுக்குப் புரியவில்லே.

"நீ எங்கே இருந்து வந்தாய் இப்பொழுது?" என அதி காரத்தோடு கேட்டாள் கோகிலாராணி.

"ஒரு வேலே விஷயமாக வெளியே சென்று விட்டு வருகிறேன்!"

"நீ எங்கே சென்றிருந்தாய் என்பது எனக்குத் தெரியும், வேல்முருகன்!" என்று கூறிய கோகிலாராணி, "நீ ஒரு துரோகி!" என்று கத்திஞள்.

"கோகிலா!" என்று அதட்டலாகக் கத்திய வேல்முருகன் "என்னேப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது! நீ இப்படி நடந்து கொள்வதில் அர்த்தமில்லே!" என்று கூறிஞன்.

"நீ அந்த ராஜசுந்தரத்தின் வீட்டிற்குத்தான் சென்றிருந் தாய் என்பது எனக்குத் தெரியும். எங்கள் கோஷ்டியிலிருப் பதாக பாவனே காட்டிவிட்டு நீ அந்த காட்டு மிராண்டியுடன் கூட்டு சேர்ந்திருக்கிருய்! இந்த விஷயம் எனக்குத் தெரிந்

நடந்தது பற்றி உனக்குத் தெரியாது. ஆனுல் எனக்கு எதிராக இங்கு நடக்கும் ஒவ்வொரு செயல்களும் எனக்கு நன்ருகத் தெரியும்!'' என்று கூறிய கோகிலாராணியின் குரலில் பழைய அமைதித் தன்மை தென்பட்டது.

''யாரோ கொடுத்த தவருன தகவலின் பேரில் உன்னுடைய உண்மையான சேவகனை நீ பகைத்துக் கொள்ளுகிருய் கோகிலா! இங்கு நடக்கும் ஒவ்வொரு செயல்களும் உனக்குச் சாதகமானதாக இருக்குமே தவிர எதிராக இருக்காது!'' என்று நெகிழ்ச்சியுடன் கூறிய வேல்முருகன், ''உன்னுடைய வழியிலேயே இருந்து பார்த்தால் ஒருசமயம் உனக்கு எதிராக நான் திரும்பியிருந்தால் எனக்குப் பல லட்ச ரூபாய்கள் கிடைத்திருக்கும்! ஆனுல் உனக்குச் சேவை செய்வது பெரிதென எண்ணி உன் பின்னுல் ஓடிவந்தேன். ஆனுல் இப்பொழுது யாருடைய பேச்சையோ கேட்டு என்னைப் பகைத்துக் கொள்ளுகிருய், கோகிலா!'' என்று படபடப்போடு கூறினுன்.

அவனைத் தலைமுதல் கால் வரை அளவெடுப்பது போலப் பார்த்த கோகிலாராணி, ''உன்னை நான் நம்புகிறேன், வேல்முருகன்! அந்த நம்பிக்கை நிலைத்திருப்பது உன்னுடைய செயல்களைப் பொறுத்தது! என்னுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக நீ இருக்கும் வரை உனக்கு எந்த வித சங்கடமும் இல்லை. நீ அப்படி மாறினுல் நானும் மாறி விடுவேன் என்பது உனக்குத் தெரியும்!'' என்று கூறிய கோகிலாராணி, ''நீ சாப்பிடச் செல்லலாம் வேல்முருகன்!'' என்று கூறினுள்.

அதே சமயம் உள் அறையிலிருந்து பாய்ந்து வெளியே வந்த மனேஜர், ''ஏய்! நில்!'' என்று உறுமினுன்.

''மனேஜர்!'' என்று கத்திய கோகிலாராணி, உன்னுடைய அதட்டலை நிறுத்திக் கொள்!'' என்று கூறிவிட்டு வேல்முருகன் பக்கம் திரும்பி, ''நீ போகலாம்!'' என்ருள்.

''என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல் அவன் இங்கிருந்து நகரப் போவதில்லை!'' என்று கர்ஜித்த மனேஜர் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து வேல்முருகனின் நெஞ்சிற்கு நேராகக் குறிபார்த்தபடி நின்ருன்.

அவனை அலட்சியமாக நோக்கிய வேல்முருகன், ''உன் துப்பாக்கியை உள்ளே வை! அதற்கு அவசியமிருக்காது. நீ கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்கலாம்!'' என்ருன்.

''நீ எதற்காக ராஜசுந்தரத்தின் ஜாகைக்கு அடிக்கடி சென்று வருகிருய்?'' என்று கேட்டான் மனேஜர்.

''அவனை மெதுவாக நம் வழிக்குக் கொண்டு வருவதற்குத் தான் நான் அங்கு சென்று வருகிறேன். ஒரு நண்பனைப்

போல பழகி அவனை மாற்ற முடியுமே தவிர துப்பாக்கியைக் கொண்டு பயமுறுத்தி அவனை வழிக்கு கொண்டு வர முடியாது!'' என்று அமைதியாகப் பதிலளித்தான் வேல்முருகன். அவன் கண்கள் மனேகரின் கையிலிருந்த துப்பாக்கியின் மீதே நிலைக்குத்தாக நின்றது.

''ஓ அப்படியா?'' என்று எகத்தாளமாகக் கேட்ட மனேகர், ''அவனுக்கு நீ உளவு சொல்லுகிருய்! அதை மறைக்க நண்பன் வேடம்!'' என்று கூறிவிட்டு காட்டு மிராண்டித்தனமாகச் சிரித்தான்.

அதே சமயம் பக்கத்து அறையில் தங்கியிருந்த ஒரு ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி மனேகரின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். அந்தமாதிரி காட்டுமிராண்டித்தனமாக சிரிக்கும் நபர் யாரென்று தெரியாவிட்டாலும் அவன் மீது அவருக்கு ஒரு தனி ஆர்வம் ஏற்பட்டது. என்ன நிகழ்கிறதென்று பார்க்க வேண்டுமென்று எண்ணிய அவர் தன்னுடைய அறையை விட்டு வெளியே வந்தார்.

மனேகரின் செயலைக் கண்டு எரிச்சலடைந்த கோகிலா ராணி, ''போதும், மனேகர்! உன் மிரட்டலை நிறுத்திக் கொள்! வாயிற் கதவு திறந்திருக்கிறது. வீண் வம்பை நீ விலைகொடுத்து வாங்கப் போகிருய்!'' என்று எச்சரித்தாள்.

''இந்த பயமுறுத்தலையெல்லாம் ஏதாவது சிறுபிள்ளையிடம் வைத்துக் கொள், கோகிலா! வேல்முருகனை நீ ஆரம்பம் முதலே கண்டிக்கவில்லை. அதற்குக் காரணம் மாணிக்கவேலுக்கு அடுத்தபடியாக நீ அவனைத்தான் விரும்புகிருய்!'' என்று கூறினன்.

அதைக் கேட்டு அடிபட்ட புலிபோல சீறினள் கோகிலா ராணி; ''மனேகர்! வாயை மூடு! அதிகம் பேசினல் உன் கையிலுள்ள துப்பாக்கியைப் பிடுங்கி உன்னையே எமலோகத்திற்கு அனுப்பி விடுவேன்!'' என்று கர்ஜித்தாள். உண்மையில் மனேகர் அப்படிப் பேசுவானென்று வேல்முருகன்கூட எதிர் பார்க்கவில்லை.

அதே சமயம் வாயிற்படியருகில் நின்று கொண்டு ஒருருவம் அவர்களையே வெறிக்கப்பார்த்துக்கொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக அந்தப் பக்கம் திரும்பிய மனேகர் அந்த மனிதன் அவர்களையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். ஆனல் அடுத்தவிநாடி தன்னைச் சுதாரித்துக் கொண்டு அந்த மனிதனை நோக்கிப் பாய்ந்தான். ஆனல் அந்த மனிதன் வேகமாக ஓடி மறைந்து விட்டான்.

ஏமாற்றத்தோடு திரும்பி வந்த மனேகரை ஆத்திரத்தோடு பார்த்த கோகிலாராணி, ''உன்னுடைய முட்டாள் தனத்திஞல் வலுவில் வம்பை வரவழைத்துக் கொண்டாய்!

அவன் போலீஸுக்கு போன் செய்தாலும் செய்யக்கூடும்! நாம் தயாராக இருக்க வேண்டும்!'' என்ருள்.

''போலீஸாரால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது'' என்று தீர்க்கமாகக் கூறினுன் மனேகர்.

''லைசென்ஸ் இல்லாமல் தாம் துப்பாக்கி வைத்திருந்தது முதல் குற்றம்! இரண்டாவது குற்றம் அதை வைத்து ஒருவனை மிரட்டியது. இவை இரண்டுமே நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும்! அதனுல் நாம் என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும்!'' என்று கூறினுள் கோகிலாராணி.

''இங்கிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறது போலீஸ் ஸ்டேஷன். அதனுல் அவர்கள் இங்கு வருவதற்கு பத்து நிமிடங்கள் பிடிக்கும். இந்த மனிதன் இந்நேரம் போலீஸுக்குப் போன் செய்திருக்கக் கூடும்—!''

மனேகரை இடை மறித்த கோகிலாராணி, ''அப்படி யானுல் நாம் தப்ப ஒரே வழிதான் இருக்கிறது! நாம் இங்கிருந்து ஓடிப் போய் விடவேண்டும்! எல்லோரும் அவரவர் உடைகளை எடுத்துத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். இன்னும் எட்டு நிமிட அவகாசமே இருக்கிறது!'' என்ருள்.

சில நிமிடங்களில் அவர்கள் தங்களுடைய துணிமணிகளையும் முக்கியமாக சில பொருட்களையும் பெட்டியில் அடுக்கிக் கொண்டு தப்பிச் செல்ல தயாராக இருந்தார்கள். கோகிலா ராணி முன்னே செல்ல மனேகரும் வேல்முருகனும் அவளைப் பின் தொடர்ந்து சென்ருர்கள். மனேகரின் கண்களில் கோபக்கனல் வீசியது.

அவர்கள் வாசலை அடைந்த பொழுது அங்கே வந்த ஒரு போலீஸ் லாரியிலிருந்து வேகமாக போலீஸ் வீரர்கள் கீழே இறங்கினுர்கள். ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் முன்னே வந்து, யாரும் இந்த ஹோட்டலை விட்டு வெளியேறக் கூடாது! இது போலீஸாரின் கடுமையான உத்தரவு என்று கூறினுர்.

செய்வதறியாது கோகிலாராணி, மனேகர், வேல் முருகன் முதலியோர் திகைத்து நின்றனர். மனேகரின் கால் சட்டை பாக்கெட்டில்தான் துப்பாக்கி வைக்கப் பட்டிருந்தது. அங்கேயே இருந்தால் தாங்கள் மாட்டிக் கொள்வது நிச்சயம் என்பது அவர்களுக்கு நன்ருகப் புரிந்தது. ஆனுல் தப்புவது தான் அங்கே இயலாத காரியமாகத் தோன்றியது.

லாரியில் இருந்த ஐந்து போலீஸ் வீரர்கள் இருவர் ''அம்மணி மான்ஷ''னின் வாயிலில் யாரும் வெளியே செல்லாமல் தடுக்க நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். மற்ற மூவர் மாடி அறைகளைச் சோதனை போட மாடியேறிச் சென்றனர். மாடிப்படியருகே நின்றபடி இவற்றையெல்லாம் வெளிறிய

முகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் அந்த ராணுவ அதிகாரி.

அதுதான் தக்க தருணம் என்று முடிவு கட்டிய மனேகர் வாசலைத் தாண்டி வெளியே சென்றான். ஆனால் வெளியே நின்ற இரு போலீஸார் அவனை விடவில்லை. சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்ட மனேகர் சட்டென்று தன்னுடைய பாக்கெட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்து இருவரையும் பார்த்து சுட்டான். அடுத்த கணம் இருவரும் அலறிக் கொண்டு கீழே சாய்ந்தனர். அவர்கள் அலறல் சத்தத்தைக் கேட்டு மாடியிலிருந்து மற்ற போலீஸ் வீரர்கள் ஓடிவந்தனர். ஆனால் அதற்குள் மனேகரும் கோகிலாராணியும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களில் ஒன்றை கிளப்பிக் கொண்டு வேகமாக சென்றனர். ஆனால் அதேசமயம் போலீஸார் கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்ட வேல் முருகன் வேகமாக வெளியே ஓடினான். ஆனால் கோகிலா ராணியின் காரைக் காணவில்லை.

அதேசமயம் மூவரில் ஒருவனான வேல்முருகனை போலீஸார் துரத்த ஆரம்பித்தார்கள். நிரபராதியான அவன் அவர்களிடம் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. அதனால் வேகமாக ஓட ஆரம்பித்தான். சிறுவயதில் ஓட்ட பந்தயத்தில் நன்கு வெற்றி பெற்று பலபரிசுகளைப் பெற்ற அவனை யாராலும் பிடிக்க முடியவில்லை.

ஆனால் மூன்று கான்ஸ்டபிள்களில் ஒருவர் அவனைப் பிடித்து விட்டார். இயன்றவரை அவரிடமிருந்து விடுபட போராடினான் வேல்முருகன். ஆனால் அவனால் முடியவில்லை. தன்னைச் சிறிது தயார் படுத்திக் கொண்ட அவன் அந்தக் கான்ஸ்டபிளின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அந்த அதிர்ச்சியில் அவர் மயங்கிச் சாய்ந்தார். அதே நேரம் கோகிலாராணியின் கார் அந்த வழியாகத் திரும்பி வந்தது. அதை நிறுத்தித் தன்னை ஏற்றிக் கொள்ளும்படி கையசைத்தான் வேல்முருகன். ஆனால் அந்தக் காரில் அமர்ந்திருந்த கோகிலாராணி அவனைப் பார்க்காதவளைப் போல் முகத்தை திருப்பிக் கொண்டாள். மனேகரின் முகத்தில் திருப்தியின் சாயை படர்ந்தது.

அவர்களால் தனக்கு உதவி கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட வேல்முருகன் கண்மூடித்தனமான வேகத்தில் ஓட ஆரம்பித்தான். கோகிலாராணியை மாற்றியது மனேகராகத்தான் இருக்க வேண்டுமென்று அவனுக்கு சந்தேகமில்லாமல் புரிந்து விட்டது. கோகிலாராணிக்கு அவன் மேல் ஏற்பட்ட அவநம்பிக்கையை நினைத்ததும் அவனுக்குத் தாங்கமுடியாத வேதனை ஏற்பட்டது.

போலீஸாரை விட்டு வெகுதூரம் தள்ளி வந்துவிட்ட வேல்முருகனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. சிறிது தண்ணீர் வாங்கலாம் என்ற எண்ணத்தோடு அருகிலிருந்த வீட்டின் கதவைத் தட்டினான்.

## 8. எதிர்பாராத சம்பவங்கள்

மாணிக்கவேல் இறந்துபோய் இரண்டு வருடங்கள் ஆகின்றன என்று தமயந்தி கூறியதை ராஜசுந்தரத்தால் நம்ப முடியவில்லை. ஒருக்கால் தான் தவறான வீட்டிற்கு வந்து விட்டோமா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனால் அப்படி இருக்குமென்றும் அவனால் நம்ப முடியவில்லை.

தமயந்தி முகத்தை ஏறிட்டு நோக்கிய ராஜசுந்தரம், "நீ சொல்வது உண்மைதானா?" என்று கேட்டான்.

"உண்மைதான்!" என்று புன்னகையோடு கூறிய தமயந்தி," ஏன் உங்களால் நம்பமுடியவில்லையா? நான் யாரிடமும் பொய் சொல்லும் வழக்கம் கிடையாது என்றாள்.

"அவன் எப்படி இறந்தான்?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"கடைசியாக அவன் போரிட ராணுவத்தில் இரண்டாவது முறையாகச் சேர்ந்தான். அப்பொழுது போரில் இறந்து விட்டான். அவன் உடலைக்கூட என்னால் சரியாக அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு ஒரு வழியாகக் கண்டு பிடித்து அடக்கம் செய்தேன். எனக்கென்று இருந்த ஒரே ஆதரவான அவன் இறந்து போய்விட்டதும் நான் இந்தத் தனிமையான இடத்திற்கு அமைதியைத் தேடி வந்து விட்டேன். திருமணம் செய்து கொள்ளக்கூட எனக்கு விருப்பமில்லை!" என்று கூறினாள் தமயந்தி.

அவள் கூறுவது ஒருக்கால் உண்மையாக இருக்குமோ என்று அவனுக்குத் தோன்றியது. அப்படியானால் பாலுவின் வீட்டில் தான் பார்த்தது மாணிக்கவேல் இல்லையா? பிறகு ஆஷாவைக் கொன்றது யார்? இப்படி அலையலையாக கேள்விகள் அவன் மனதில் எழுந்தன.

பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவனாக தமயந்தியை நோக்கிய ராஜசுந்தரம், "இறப்பதற்கு முன்பு மாணிக்கவேலும் நீயும் எங்கே இருந்தீர்கள்?" என்று கேட்டான்.

"எங்கள் சொந்த வீட்டில் இருந்தோம்!" என்று கூறினாள் தமயந்தி.

சிறிது நேரத்தில் கதவை யாரோ படபடவென்று தட்டும் ஓசை கேட்டது. அதைக் கேட்டதும் தமயந்தி ராஜ

COMICS PDF TIMES

சுந்தரத்தை என்ன செய்வது என்று கேட்கும் பாவனையில் பார்த்தாள். அவளது எண்ணத்தைப் புரிந்து கொண்ட ராஜ சுந்தரம், "நான் அந்தக் குளியலறையில் மறைந்து கொள்ளு கிறேன். அவனை நீ அனுப்பிய பிறகு "வரலாம்!" என்று சொல்! நான் இங்கே இருக்கும் விவரத்தை அவனுக்குத் தெரிவித்தால் உன் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படும்!" என்று கூறிவிட்டு அருகிலிருந்த குளியலறையில் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அவன் குளியலறையில் சென்று கதவைத் தாளிடும் வரை காத்திருந்த தமயந்தி மெதுவாக கதவை நோக்கி நடந்தாள். அதற்குள் கதவே பெயர்ந்து விழுந்து விடுமோ என்று பயப்படும் அளவுக்கு கதவை இடித்துக் கொண்டிருந் தான் ஒருமனிதன்.

கதவைத் திறந்த தமயந்தி வெளியே நின்று கொண்டி ருந்த அந்தப் பரட்டைத்தலை மனிதனை நோக்கி, "நீ யார்? ஏன் இப்படி கதவை மிருகத்தனமாக இடிக்கிறாய்?" என்று எரிச்சலாகக் கேட்டாள்.

"நீங்கள் யாராக இருந்தாலும் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்று இரவு மட்டும் இங்கே தங்க எனக்கு இடம் வேண்டும்!" என்று கெஞ்சினான் அந்த மனிதன்.

"நீ யார் என்பதே தெரியாமல் என்னால் உனக்கு இட மளிக்க முடியாது!" என்று மறுத்த தமயந்தி கதவைச் சாத்தி தாளிட முயன்றாள். ஆனால் அதே சமயம் குளியலறையில் இருந்து வெளியே வந்த ராஜசுந்தரம், "ஓ! வேல் முருகனா? நீ எங்கே இங்கே வந்தாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

அவனது வரவை எதிர்பாராத வேல்முருகனும் ஆச்சரி யத்தில் ஆழ்ந்தான். பிறகு, "நானும் இதே கேள்வியை உன்னிடம் கேட்கிறேன்!" என்றான்.

"இவள்தான் தமயந்தி! மாணிக்கவேலின் தங்கை. இவளைத் தேடி நம் விஷயமாக இங்கே வந்தேன்!" என்று கூறினான் ராஜசுந்தரம்.

அவர்களது சம்பாஷணையை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்த தமயந்தி, "இவரை உங்களுக்கு முன்பே தெரியுமா? நீங்கள் இருவரும் என் சகோதரனின் நண்பர் களா?" என்று கேட்டாள்.

"நண்பர்களா?" என்று கேட்டுவிட்டு கடகடவென்று சிரித்த வேல்முருகன், "நாங்கள் உன்னுடைய சகோதரனின் முதல்தர எதிரிகள். உண்மையைச் சொல்லப்போனால்

நாங்கள் அவனைக் கொலை செய்ய அமர்த்தப்பட்டவர்கள்!'' என்று தயக்கமின்றி கூறினான்.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த தமயந்தி, ''நீங்கள் ஏன் என் சகோதரனைக் கொல்ல விரும்ப வேண்டும். அவன் உங்களுக்கு என்ன தீங்கு செய்தான்?'' என்று கேட்டாள்.

''தன் நண்பர்கள் என்றும் பாராமல் தான் தப்புவதற்கு எங்களைக் காட்டி கொடுத்து விட்டான். அதன் பலன்தான் என்னுடைய கரம் பாதி துண்டிக்கப்பட்டது. இப்பொழுது உனக்குப் புரிகிறதா, தமயந்தி?'' என்று கேட்டான் வேல் முருகன்.

''நீங்கள் சொல்வது தவறு, நண்பரே! தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நண்பர்களைக் காட்டிக் கொடுக்கும் வகையினரைச் சேர்ந்தவனல்ல அவன். அப்படி அவன் செய் திருந்தால் அவரைக் கையாலேயே சித்ரவதை செய்து கொன் றிருப்பேன்!'' என்று முழங்கினாள் தமயந்தி.

அவளது செயலைக் கண்டு வேல் முருகனும் ராஜசுந்தர மும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவளையே கூர்ந்து நோக்கிய ராஜசுந்தரம், ''தமயந்தி! அப்படியானால் உண்மையிலேயே அவன் இறந்துபோய் இரண்டு வருடங்களாகின்றனவா?'' என்று கேட்டான்.

''உண்மைதான்!'' என்று கூறிய தமயந்தி. ''உங் களுக்குத் தேவையானால் நான் சத்தியம் செய்யவும் தயார்!'' என்று கூறினாள்.

மாணிக்கவேல் இறந்து இரண்டு வருடங்களாகின்றன என்று ராஜசுந்தரம் குறிப்பிட்டதைக் கேட்டு அதிர்ச்சி யடைந்த வேல்முருகன், ''என்ன? அப்படியானால் இவ்வளவு காலமும் தாம் பட்ட கஷ்டங்கள் எல்லாம் ஒன்றுக்கும் உபயோகமில்லை!'' என்று கூறினான்.

''அந்த வீட்டை நாங்கள் விற்கவில்லை! அது மாடிப் பாக்கம் தோப்பினுள் இருப்பதால் யாரும் அதை வாங்க முன் வரவில்லை. காரணம் அங்கே பேய்கள் நடமாடுவதாக மக்களிடையே ஒரு மூடநம்பிக்கை பரவியிருக்கிறது. அதனால்தான் அந்த வீட்டை யாரும் வாங்கவில்லை. அதனால் அது பூட்டிதான் கிடக்கிறது. நாம் நாளை இரவு அங்கே போகலாம்!'' என்று கூறினாள் தமயந்தி.

'சரி' என்ற பாவனையில் தலையாட்டிய ராஜசுந்தரம் வேல்முருகன் பக்கம் திரும்பி, ''நான் மறந்து போய் விட்டேனே! நீ எதற்காக இப்படித் தலைதெறிக்க இங்கே ஓடி வந்தாய்?'' என்று கேட்டான்.

கோகிலாராணிக்கும் அவனுக்கும் இடையே நடந்தவை களையெல்லாம் ஒன்றுவிடாமல் கூறிய வேல்முருகன்

"அம்மணி மான்ஷ"னில் நடந்த இரட்டைக் கொலையையும், தன்னைப் போலீஸார் துரத்தியதையும் ஒன்றுவிடாமல் விவரித்தான்.

"உன்னை அவர்கள் தங்கள் காரில் ஏற்றிக் கொள்ள வில்லையா?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"இல்லை! என்னைத் தாண்டிதான் கார் சென்றது ஆனுல் என்னை அவர்கள் ஏற்றிக் கொள்ளவில்லை!" என்று ஆத்திரத் தோடு கூறிய வேல்முருகன், "அவர்களுக்கு உண்மையான சேவகனுக உழைத்து வந்த என்னை மனேஜரின் பேச்சை நம்பி ஒதுக்கி விட்டாள் கோகிலாராணி! அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்! இனி நான் உன்னுடனேயே இருக்கிறேன், ராஜசுந்தரம்!" என்று கூறினுன்.

அதற்குள் இரவு உணவைத் தயார் செய்த தமயந்தி அவர்களுக்குப் பரிமாறினுள். மிகவும் ஏழ்மையான அந்த உணவு மிகவும் சுவையாகச் சமைக்கப்பட்டிருந்தது. சாப் பிடும்பொழுது அவர்களுக்குள் சம்பாஷணை எதுவும் நிகழ வில்லை.

அவர்கள் சாப்பிட்டு முடித்தபொழுது யாரோ கதவைத் தட்டினுர்கள். தமயந்தி சென்று கதவைத் திறந்தாள். அடுத்த வீட்டில் குடியிருந்த மனிதன்தான் நின்றுகொண் டிருந்தான். தமயந்தியையே சந்தேகத்தோடு பார்த்த அவன், "உன் வீட்டிற்கு வந்திருப்பது யார், தமயந்தி?" என்று கேட்டான்.

"ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள் தமயந்தி.

"இரண்டு வருடமாக உன்னை யாருமே தேடி வந்ததில்லை. இன்று யாரோ வந்திருப்பதைக் கண்டு விசாரிக்கவே வந்தேன். உன் நலனில் எனக்கு என்றைக்குமே அக்கறை உண்டு!" என்று புன்னகையுடன் கூறினுன்.

"மிகவும் நன்றி! இவர்கள் இருவரும் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள்!" என்று துணிந்து புளுகினுள் தமயந்தி.

"அப்படி இருவர் இருப்பதாக நீ இதுவரை சொன்னதே யில்லையே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் அந்த மனிதன்.

"அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை!" என்று அலட்சியமாகக் கூறிய தமயந்தி, "இப்பொழுது சொல்லி விட்டேன் நீங்கள் போய் வருகிறீர் களா?" என்று கேட்டாள்.

அதற்குமேலும் அங்கே நிற்பது தனது கௌரவத்திற்கு இழுக்கு என்பதைப் புரிந்து கொண்ட அந்த மனிதன், "நல்லது!" என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்

தான். ஆனால் அவன் மனம் என்னவோ சமாதானமடையவில்லை. அதனால் அடிக்கடி தமயந்தி வீட்டையே கண்காணித்தபடி தன்னுடைய தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தான்.

இதை அறியாத மூவரும் மிகவும் சுவாரசியமான பேச்சில் ஈடுபட்டிருந்தனர். வேல்முருகன் ஒரு முடிவுக்கு வந்தவனாக, "நாம் இன்று இரவு பனிரெண்டுமணிக்கே உன் அண்ணனுடைய மாளிகைக்குச் செல்லலாம்! ஏனென்றால் நாளை இரவு நம்மால் அங்கு செல்ல முடியும் என்பது நிச்சயமில்லை!" என்று கூறினான்.

"மாடிப்பாக்கம் செல்லவேண்டுமென்றால் அதற்கு ரயிலில்தான் செல்ல வேண்டும். இன்று இரவு பனிரெண்டரை மணிக்கு ஒரு ரயில் புறப்படுகிறது. இம்பொழுது மணி ஒன்பதேமுக்கால்!" என்று கூறிய தமயந்தி "நாம் மூவரும் இன்று இரவு அங்கே செல்லலாம்!" என்று கூறினாள்.

"எங்களை விட்டுவிட்டு நீங்கள் மூவரும் தனியாக எங்கேயும் செல்லப் போவதில்லை!" என்று ஒரு குரல் வாசற்படியருகே ஒலித்தது. மூவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தனர். கோகிலாராணியும் மனோகரும் அங்கே நின்றிருந்தனர். தான் கதவை சும்மா சாத்தி வைத்திருந்தது எவ்வளவு தவறு என்பது தமயந்திக்குப் புரிந்தது.

"கோகிலா! நீயா!" என்று திடுக்கிட்டு கூவினான் வேல்முருகன். அவன் ஏனோ கோகிலாராணியைப் பார்ப்பதையே வெறுத்தான்.

"ஆமாம், வேல்முருகன்! போலீஸாரின் துரத்தல் எப்படி இருந்தது?" என்று இகழ்ச்சியாகக் கேட்டான் மனோகர். அவன் இதழ்களில் ஒரு விஷமப் புன்னகை அரும்பியது.

தனது முகத்தைத் திருப்பிக் கொண்ட வேல்முருகன், "மனோகர்! இதற்கெல்லாம் ஒருநாள் நீ சரியான தண்டனை அனுபவிப்பாய்!" என்று வெறுப்போடு கூறினான்.

அதே சமயம் ஜன்னலில் இருந்து ஒரு உருவம் தோட்டத்துப் பக்கம் நழுவுவதைப் பார்த்துவிட்ட மனோகர் வெளியே பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து எல்லோரும் வெளியே ஓடினார்கள். இருளில் ஒரு உருவத்தைக் கெட்டியாகப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தான் மனோகர். தன்னுடைய இடுப்பிலிருந்து ஒரு டார்ச்சை உருவி எடுத்த தமயந்தி அதை மனோகர் பிடித்திருந்த உருவத்தின்மீது அடித்தாள். அது அடுத்த வீட்டு ஆள்தான்.

"நீங்களா?" என்று இகழ்ச்சியாகக் கேட்ட தமயந்தி, "என்னுடைய விவகாரத்தில் வீணாக தலையிட்டதின் பலன்

தான் இது, நண்பரே!'' என்று கூறிவிட்டு ராஜசுந்தரம் பக்கம் திரும்பி, ''இவனை அவன் வீட்டிற்கே கொண்டுபோய் அடைத்து வைப்போம்!'' என்று கூறினாள்.

அவளது அந்தத் துணிச்சலான செய்கையைக் கண்டு ஆச்சரியமடைந்த ராஜசுந்தரம் மனோகரிடம் அவனை அவன் வீட்டிற்கே இழுத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அவனைத் தொடர்ந்து எல்லோரும் சென்றனர். சமையலறையில் அவனை வைத்துப் பூட்டிய மனோகர் முன் ஹாலுக்கு வந்தான்.

''நாம் இனியும் இங்கே இருப்பது நமக்கு ஆபத்தையே விளைவிக்கும்! அதனால் நாம் தப்பி ஓடிவிடுவதுதான் நல்லது!'' என்று கூறிய ராஜசுந்தரம், ''நீங்கள் மூவரும் இங்கேயே இருங்கள். நானும் தமயந்தியும் சென்று வாடகைக் காரை கூட்டி வருகிறோம். மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருக்கவே நாங்கள் இருவராகச் செல்லுகிறோம்?'' என்று கூறினான்.

அதற்கு ஒப்புக்கொண்ட கோகிலாராணி, ''நீங்கள் இருவரும் செல்லுங்கள்! நாங்கள் இந்த மனிதனின் வீட்டிலேயே இருக்கிறோம்! யாரும் வந்தால் தமயந்தி வீடு திறந்து கிடப்பதைப் பார்த்து அவளைத் தேடக் கூடும்! அதனால் போகும்பொழுது அவள் வீட்டில் உள்ள விளக்குகளை அணைத்துவிடுங்கள். யாரும் பார்த்தால் வீடு பூட்டியிருப்பதாக எண்ணிக்கொள்ளட்டும்!'' என்றாள்.

அதற்கு ஒப்புக்கொண்ட ராஜசுந்தரம் தமயந்தியை இழுத்துக்கொண்டு அவள் வீட்டிற்கு ஓடினான். விளக்குகளை அணைத்து வீட்டை இருட்டாக்கிய ராஜசுந்தரம், ''தமயந்தி இந்த இருட்டிலேயே ஒருசில ஆடைகளை அவசரமாகப் பெட்டியில் திணித்துக்கொண்டு கிளம்பு! நாம் ஓடிப்போய் விடலாம்! உன் அண்ணன் வீட்டிற்கு முதலில் போகலாம் பிறகு மற்றவைகளை அங்கு போய் முடிவு செய்துகொள்ளலாம்!'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

அவனது திட்டத்திற்கு ஒப்புக்கொண்ட தமயந்தி பத்து நிமிடங்களில் முக்கியமானவைகளை எடுத்துக்கொண்டு தயாராகிவிட்டாள். சில விநாடிகளில் அவர்கள் இருவரும் அந்த வீட்டைவிட்டு வெளியே வந்தனர். அதே சமயம் ஒரு போலீஸ் ஜீப் வந்து அடுத்த வீட்டின் வாசலில் நின்றது.

இதைச் சிறிதும் எதிர்பாராத ராஜசுந்தரம் திகைத்தான்.

தமயந்தியை நோக்கி மெல்ல, ''அவர்கள் அந்தப் பக்கம் போகும்பொழுது நாம் இங்கிருந்து நழுவிவிட வேண்டும்! தயாராக இரு!'' என்று கூறினான்.

அதே சமயம் பக்கத்து வீட்டுக்காரன் வீட்டுக் கதவை ஒரு கான்ஸ்டபிள் பலமாகத் தட்டினார். அதைக் கேட்டு திடுக்கிட்ட கோகிலாராணி பரபரப்போடு, "யாரது?" என்று கேட்டாள்.

"போலீஸார்!" என்று கூறிய அந்த கான்ஸ்டபிள், "சந்தேகாஸ்பதமான உங்களை விசாரிக்க வந்திருக்கிறோம்! கதவைத் திறங்கள்!" என்று முழங்கினார். ஆனால் அதற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

உள்ளே சமையல்கட்டை நோக்கி விரைந்த மனேகர் அதைத் திறந்து பார்த்தான். ஆனால் சமையல்கட்டு காலியாக இருந்தது. அதனுள் இருந்த மற்றொரு வாசல் வழியாக அந்த வீட்டுக்காரன் வெளியே சென்றுவிட்டிருந்தான். அவன்தான் போலீஸுக்குத் தகவல் தெரிவித்திருக்க வேண்டுமென்பதைப் புரிந்துகொண்ட அவன் மீண்டும் பரபரப்போடு கோகிலாராணியிடம் ஓடிவந்தான்.

"கோகிலா! அவன்தான் போலீஸுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறன்!" என்று மூச்சு வாங்கக் கூறினன்.

அதே சமயம் வெளியே இருந்து அந்தக் கான்ஸ்டபிள், "மரியாதையாகக் கதவைத் திறங்கள்! போலீஸார் இந்த வீட்டைச் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கிறார்கள்! தப்ப நினைத்தால் எங்கள் குண்டுகளுக்கு இரையாவீர்கள்!" என்று முழங்கினார்.

அதைக் கேட்டு செய்வதறியாது திகைத்தாள் கோகிலா ராணி. அதே சமயம் வேல்முருகன், "நான் இவர்களுடன் சண்டையிடுகிறேன் நீங்கள் தப்பிச் செல்லுங்கள்! பிறகு நாம் சந்தித்துக்கொள்ளலாம்!" என்று கூறிவிட்டு பின்கட்டு வாசல் வழியாக வெளியே பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து போலீஸ் வீரர்கள் ஓடினார்கள். தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி போலீஸாருக்குப் போக்குக் காட்டிய வண்ணம் ஓடினன் வேல்முருகன்.

இதைப் பயன்படுத்திக்கொண்டு கோகிலாராணியும் மனேகரும் வெளியே ஓடினார்கள். அப்பொழுது ஒரு போலீஸ் விரரின் துப்பாக்கியிலிருந்து பறந்துவந்த ஒரு குண்டு மனேகரின் வலக்கையில் பாய்ந்தது. ஆனால் அந்த வேதனையையும் பொறுத்துக்கொண்டு அந்த வீட்டின் தோட்டத்தை விட்டு வெளியே வந்த இருவரும் தங்கள் காரைத் தேடினர். ஆனால் அது மாயமாக மறைந்து விட்டிருந்தது.

அங்கே இன்னும் காலம் கடத்திஞல் போலீஸார் தங்களைப் பிடித்துவிடுவார்கள் என்பதை புரிந்துகொண்ட கோகிலாராணி மனேகரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தோப்பினுள் புகுந்து ஓட ஆரம்பித்தாள்.

தனது ரத்தம் வழியும் கையை மற்ெருரு கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு ஓடிவந்த மனேகர், "என்னல் இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை. ஒரு டாக்டரிடம் போவோம்!" என்று கூறினன்.

"இப்பொழுது நாம் டாக்டரைத் தேடி போனுல் போலீஸார் நம்மைப் பிடித்துவிடுவார்கள்! முதலில் இந்த ஊரைவிட்டு போய்விடுவோம்! பிறகு அடுத்த ஊரில் ஒரு டாக்டரிடம் உன்னைக் காண்பிக்கிறேன்?" என்று கூறினள் கோகிலாராணி.

அதன் பிறகு இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. அவர்கள் இருட்டில் கண்மூடித்தனமான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தார்கள்,

* * *

சோலைப்பாக்கத்தின் அந்தச் சிறிய ரயில்நிலையத்தை ராஜசுந்தரத்தின் கார் அடைந்தபொழுது சரியாக மணி பன்னிரெண்டேகால். இருவரும் அவசர அவசரமாக இரண்டு டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு மாடிப்பாக்கம் செல்லும் ரயிலில் போய் அமர்ந்தார்கள்.

அவர்கள் அமர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ரயில் புறப்பட்டது. பிரயாணத்தின்போது அவர்கள் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. தமயந்தி மாடிப்பாக்கத்தை ஒன்றரை மணி நேரத்தில் அடைந்து விடலாம் என்று கூறினள். சரியாக ஒன்றரை மணி நேரத்தில் அவர்கள் ரயில் மாடிப் பாக்கம் ரயில் நிலையத்தை அடைந்தது.

பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு வேகமாக இருவரும் வெளியே வந்தனர். இரவு இரண்டு மணியாகி யிருந்தது- அந்த ரயில் நிலையமே தூங்கி வழிந்து கொண் டிருந்தது. சில பிரயாணிகள் மட்டும் சுறுசுறுப்பாக ரயிலில் ஏறிக்கொண்டிருந்தார்கள்.,

ராஜசுந்தரத்தை நோக்கித் திரும்பிய தமயந்தி, "நீங்கள் ஒரு ஓட்டலில் தங்கிக்கொள்ளுங்கள்! நாம் மாடிப்பாக்கத்தி லிருந்து சில மைல் தூரங்கள் நடக்கவேண்டும் அதன் பிறகு ஒரு சிறிய ஆற்றைக் கடக்கவேண்டி வரும். அதற்காக நாளைக் காலைதான் அங்கு உள்ள ஒரே ஒரு படகுக்காரனை ஏற்பாடு செய்யவேண்டும்! அதுவரையில் ஒரு ஹோட்டல் அறையில் நாம் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை!" என்று கூறினள் தமயந்தி.

"நல்லது!" என்று கூறிய ராஜசுந்தரம், "நாம் போக லாம்!" என்ருன். சில நிமிடங்களில் அவர்கள் இருவரும் ஏழ்மையான ஒரு ஓட்டலை அடைந்தனர். அதில் இரு

அறைகளை எடுத்துக்கொண்டு தனித்தனியாக அவரவர் அறைக்குச் சென்றனர். தனது படுக்கையில் படுத்துக் கொண்ட ராஜசுந்தரம் சில நிமிடங்களில் ஆழ்ந்த நித்திரை வசமானுன்.

மறுநாள் காலே சுமார் ஏழரை மணிக்கு தமயந்தி அவன் அறைக்கதவை தட்டினுள். திடுக்கிட்டு விழித்த ராஜசுந்தரம் கதவைத் திறந்தான். தமயந்தியின் கையில் ஒரு கோப்பை காப்பி இருந்தது. அவனைப் பார்த்து புன்னகை புரிந்த அவள் காப்பிகோப்பையை அவனிடம் நீட்டியபடி,'' உங்களுக்காக இதைத் தருவித்தேன்! சீக்கிரம் தயாராக இருங்கள்! இன்னும் அரைமணி நேரத்தில் நாம் இங்கிருந்து புறப்பட வேண்டும்!'' என்று கூறிவிட்டு அவன் காப்பியை சாப்பிட்டதும் காலி கோப்பையை வாங்கிக்கொண்டு வெளியேறினுள்.

சரியாக அரைமணி நேரத்தில் குளித்துவிட்டுத் தயாராக தமயந்தியின் அறையை அடைந்தான் ராஜசுந்தரம். அதன் பிறகு இருவரும் ஹோட்டல் மானேஜரிடம் இரண்டு அறைக்குரிய ஒருநாள் வாடகையைச் செலுத்திவிட்டு ஹோட்டலை விட்டு வெளியே வந்தனர்.

''நாம் ஒரு ஹோட்டலில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு அந்த படகுக்காரனிடம் போகலாம்! எனக்குப் பசிக்கிறது!'' என்று கூறினுள் தமயந்தி.

அவர்கள் காலேச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு மாடிப்பாக்கம் தோப்பினுள் நடக்க ஆரம்பித்தனர். தோப்பு முழுவதும் மரங்கள் அடர்ந்து வளர்ந்து எங்கும் நிழலேப் பரப்பிக்கொண்டிருந்தன. சுமார் ஒன்றரை மைல் தூரம் நடந்த பிறகு ஒரு சமவெளி தென்பட்டது. அதில் ஒரு மூலேயில் ஒரு சிறிய குடிசை அமைக்கப்பட்டிருந்தது. அதை அடைந்த தமயந்தி மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்து, ''முனியா!', என்று அழைத்தாள். அப்பொழுது உள்ளே யிருந்து ஒரு வயதான மனிதன் வெளியே வந்தான். மிகவும் பணிவாக இருவருக்கும் வணக்கம் சொன்னுன் அவன்.

''படகைத் தயாராக வைத்திருக்கிருயா?'' என்று கேட்டாள் தமயந்தி.

''சிறிது நேரம் இந்த குடிசையில் அமருங்கள். நான் சென்று படகைத் தயார் செய்கிறேன். வேலே முடிந்ததும் வந்து உங்களை அழைத்துச் செல்லுகிறேன்!'' என்று கூறி விட்டு வெளியே நடந்தான்.

ராஜசுந்தரம் பக்கம் திரும்பிய தமயந்தி, ''இவன் ஒருவன் தான் இங்கு படகு வைத்திருப்பது! இவனுடைய படகில் தான் நான் ஒவ்வொரு முறையும் ஏரியைக் கடந்து என்

சகோதரனின் வீட்டிற்குச் செல்வது வழக்கம்!'' என்று கூறினாள்.

"உண்மையில் இது ஒரு சுவாரசியமான இடம்!'' என்று பரவசத்தோடு கூறினார் ராஜசுந்தரம். அவன் மனம் அங்கு நிரம்பியிருந்த இயற்கைக் காட்சிகளில் லயித்து நின்றது.

சுமார் அரைமணி நேரம் கழித்து இருவரும் குடிசையை விட்டு வெளியே வந்தனர். அதே சமயம் முனியன் தூரத்தில் வந்து கொண்டிருந்தான். பிறகு மூவரும் படகு நிறுத்தப்பட்டிருந்த ஏரியை அடைந்தனர்.

"இந்தப் படகில் ஏரியில் போவது மிகவும் உல்லாசமாக இருக்கும்!'' என்று கூறினான். பிறகு "நீங்கள் இருவரும் உள்ளே ஏறி உட்காருங்கள்!'' என்று கூறினான் முனியன்.

அதே சமயம் படகுக்குள்ளிருந்து ஒரு பெண் உருவம் எழுந்தது.

அதைக் கண்டு, "கோகிலாராணி!'' என்று ராஜசுந்தரமும் தமயந்தியும் ஏககாலத்தில் கூவினர்.

## 9 கோதையைத் தாக்கிய கோமளவல்லி!

முகத்தில் ஒரு விஷமப் புன்னகை தவழ அங்கு நின்று கொண்டிருந்தாள் கோகிலாராணி. தமயந்தியின் முகத்தில் பீதியின் சாயல் படர்ந்தது.

"நீ எப்படி இங்கே வந்தாய், கோகிலா?'' என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"எப்படி வந்தேன் என்பதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை!'' என்று கூறிய கோகிலாராணி, "நீ தப்பி ஓடப் பார்த்தாய் ஆனால் அதை நான் அனுமதிக்கவில்லை. கடவுளாகப் பார்த்து எனக்கு வழி காண்பித்தார்!'' என்றாள்.

"ஓ! கடைசியில் கடவுள் நம்பிக்கை கூட உனக்கு வந்து விட்டதா?'' என்று இடக்காகக் கேட்டான் ராஜசுந்தரம்.

"வாயை மூடு!'' என்று சீறிய கோகிலாராணி, "முதலில் படகை விடச்சொல்:'' என்று கடுகடுப்பாகக் கூறினாள்.

அதன் பிறகு மூவரும் ஏறிக்கொள்ள படகு புறப்பட்டது. பிரயாணத்தின்போது அவர்களிடையே மௌனம் நிலவியது. பிரயாணத்தின்போது கோகிலாராணியின் கண்கள் தமயந்தி மீதே நிலைக்குத்தாக நின்றன. பதினைந்து நிமிட பிரயாணத்திற்குப் பிறகு அவர்கள் மூவரும் எதிர்க் கரையை அடைந்தனர்.

படகுக்காரனிடம் இரண்டு ரூபாய்களைக் கொடுத்த தமயந்தி இரவு சாப்பாடு கொண்டு வருவதற்கும் பணம்

கொடுத்துவிட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். ஆனால் எதிர்பாராதவிதமாக கோகிலாராணி வெறிபிடித்தவளைப் போல தமயந்தியின் மேல் பாய்ந்தாள். இந்தத் திடீர்த் தாக்குதலால் நிலைகுலைந்து போன தமயந்தி தடாலென்று கீழே விழுந்தாள். அவள்மேல் பாய்ந்த கோகிலாராணி அவளுடைய உடம்பில் தன்னுடைய கூறிய நகங்களால் வெறிபிடித்தவள் போல பிராண்டினாள்.

ராஜசுந்தரம் இந்த எதிர்பாராத சம்பவத்தால் திகைத்து நின்றிருந்தான். ஆனால் எல்லாம் விபரீதமாக மாறுவதைக் கண்ட அவன் ஓடிச் சென்று கோகிலாராணியை இழுத்து அப்பால் தள்ளினான். பிறகு தமயந்திக்கு ஒரு கை கொடுத்துத் தூக்கினான். ஆனால் கோகிலாராணியின் கண்களில் தெரிந்த வெறுப்பு இன்னும் மறையவில்லை.

"எனக்கு ஒன்றுமில்லை!" என்று புன்னகை பூத்தபடி எழுந்து நின்ற தமயந்தி தனது கையில் பட்டிருந்த சிராய்ப்புக் காயங்களைத் தடவிவிட்டுக் கொண்டாள். அவள் கண்களில் வேதனையால் கண்ணீர் கசிந்தது.

அவளது நிலைக்கு இரங்கிய ராஜசுந்தரம் கோகிலாராணி பக்கம் திரும்பி, 'கோகிலா! நீ இப்படி மிருகத்தனமாக நடந்து கொண்டிருக்கக் கூடாது! அவளும் உன்னைப் போல ஒரு பெண்! அவளிடம் நீ அப்படி நடந்து கொண்டது மிகவும் தவறு!" என்று கடுகடுப்போடு கூறினான்.

அவனை அலட்சியமாகப் பார்த்த கோகிலாராணி, "அவள் என் முதல்தர எதிரி! அவள் ஒழியும்வரை எனக்கு நிம்மதியே இருக்காது!" என்று மூச்சு வாங்கக் கூறினாள்.

அவள் பேசிய தோரணை ராஜசுந்தரத்தையே ஒரு நிமிடம் கலக்கிவிட்டது. அவர்கள் இருவரையும் கவனிக்காமல் தமயந்தி முன்னே நடந்து சென்று கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் ஒரு பிரமாண்டமான மாளிகை தென்பட்டது. அதைச் சுற்றி உயரமான காம்பவுண்டு சுவர்கள் எழுப்பப்பட்டு அதில் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட்டு திருடர்கள் ஏறிக்குதிக்க முடியாமல் பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருந்தது.

சிறிது நேரத்தில் அவர்கள் மூவரும் அந்த மாளிகையை அடைந்தனர். தன்னிடமிருந்த ஒரு சாவியால் வெளி கேட்டைத் திறந்த தமயந்தி மீண்டும் அதை மூடி உட்புறம் பூட்டிக் கொண்டாள். பிறகு இருவரையும் அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அந்தத் தோட்டம் பல காலம் வரை பராமரிக்க ஆளில்லாமல் நாச

மடைந்து புல்பூண்டுகள் முளைத்து பார்ப்பதற்கு ஒரு அச்சம் விளைவிக்கும் தோற்றத்தைக் கொண்டிருந்தது.

முகத்திற்கு அருகே சிறகுகளை அடித்துக் கொண்டு வெளவால்கள் பறந்தன அங்கே காணப்பட்ட பிரம்மாண்டமான மாளிகை மிகவும் பாழடைந்து போய் ஒரு பேய்க்களை கொண்டிருந்தது. ராஜசுந்தரத்தை நோக்கித் திரும்பிய தமயந்தி, "ராஜசுந்தரம்! இந்த வீடு என்னுடைய பாட்டனுருக்குச் சொந்தமானது! அதன் பிறகு என்னுடைய அப்பாவுடையதாக இருந்தது. பிறகு என்னுடைய சகோதரன் சொத்தாகியது. இதில் நானும் என்னுடைய சகோதரனும் இங்கே சில காலம் தங்கியிருந்தோம். பிறகு இந்த அமைதியான சூழ்நிலை எங்களுக்கு வெறுத்து விட்டது" என்று நிறுத்திய தமயந்தி தொடர்ந்தாள்; "மேலும் ராணுவத்தில் என் சகோதரன் சேர்ந்து விட்டதால் இந்தத் தனிமையான மாளிகையில் வசிக்க எனக்கு மிகவும் பயமாக இருந்தது. அதனுல் சோலைப்பாக்கத்தில் குடியேறி விட்டேன்!" என்றாள்.

"எவ்வளவு காலமாக சோலைப்பாக்கத்தில் வசித்து வருகிருய், தமயந்தி?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"சுமார் மூன்றரை வருடங்களாக!" என்று பதிலளித்தாள் தமயந்தி.

"உன் சகோதரன் இறந்து விட்டானென்று நீ கூறியதை நான் நம்ப மாட்டேன்! நீ பொய் சொல்லுகிருய்! அவன் என்னுடைய நண்பனைக் கொன்று விட்டான்! மேலும் அவன் இந்தத் தோப்பினுள் ஓடிவந்ததை நான் பார்த்தேன். அமத சமயத்தில் நீங்கள் படகில் வந்தீர்கள். நானும் வந்து ஏறிக் கொண்டேன்!" என்று திடீரென்று கூறினுள் கோகிலாராணி.

"என் சகோதரனு?" என்று ஆச்சரியத்தோடு கேட்ட தமயந்தி, "நீங்கள் பார்த்தது வேறு ஆளாக இருக்கும்! என் சகோதரன் இறந்து உண்மையில் இரண்டு வருடங்கள் இருக்கும்!" என்று கூறினுள். கோகிலாராணியின் கூற்றை அவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

அந்தப் பாழடைந்த பங்களாவைத் தன்னிடமிருந்த ஒரு பழைய துருபிடித்த சாவியினுல் திறந்த தமயந்தி அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே ஒரே தூசிபடிந்து பபர்ப்பதற்கு அருவருப்பை அளித்தது. எங்கும் சிலந்தி வலைகள் காணப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு அங்குலத்திற்கு தரையில் பஞ்சு போல தூசி படிந்திருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த பழங்கால ஓவியங்களைத் தெளிவாகப்

பார்க்க முடியாத அளவுக்கு சிலந்தி வலைகள் அதனை மறைத்திருந்தன.

மிகப்பெரிய ஹாலான அதில் நிறைய மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. நவீனகால நாகரீகப்படி அந்தஅறை அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவற்றை ரசிக்க முடியாதபடி எங்கும் ஒரே தூசிமயமாகக் காணப்பட்டது.

தன்னிடமிருந்த கைக்குட்டையால் நாற்காலிகளைத் துடைத்த தமயந்தி, "நீங்கள் இங்கே உட்காருங்கள்! நான் போய் உள்ளே பார்த்து விட்டு வருகிறேன்!" என்று கூறி விட்டு அந்த ஹாலின் மூலையில் இருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்.

"மனேகருக்கு என்ன நேர்ந்தது, கோகிலா?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"அவன் இறந்து விட்டான்!" என்று அமைதியாகப் பதிலளித்தாள் கோகிலாராணி. சிறிது நேரத்திற்கு முன்நடந்த அந்தப் போராட்டத்தைப்பற்றி அவள் மறந்தே போய் விட்டதாக அவனுக்குத் தோன்றியது.

"எப்படி இறந்தான்?" என்று கேட்டான் ராஜசுந்தரம். மனேகர் இறந்தது அவனுக்கு பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

"அவனை மாணிக்கவேல் கொன்று விட்டான்!" என்று தன்னுடைய தொனி மாருமல் அமைதியாக பதிலளித்தாள் கோகிலாராணி.

"அவன் இறந்து விட்டான் என்று தமயந்தி கூறினாள். இறந்துபோன மாணிக்கவேல் எப்படி மனேகரைக் கொல்ல முடியும்!"

"அவன் இறக்கவில்லை! தன்னுடைய சகோதரனுக்கு நம்மால் எதுவும் ஆபத்து ஏற்படக் கூடாது என்ற எண்ணத்திலேயே தமயந்தி அவ்வாறு கூறுகிறாள்!" என்றாள் கோகிலாராணி.

"மாணிக்கவேல் இறக்கவில்லை என்பதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"அவன் இந்த இடத்திற்கு வருவதை என் கண்ணால் பார்த்தேன்! மனேகரை அவன் சுட்டுக் கொல்வதையும் என் கண்களால் கண்டேன்!" என்று தீர்க்கமாகக் கூறினாள் கோகிலாராணி.

"நீ எப்படி இங்கேவந்தாய்?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை!" என்று கூறிவிட்டுத் தன்முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள் கோகிலாராணி.

அதேசமயம் அந்த அறையிலிருந்து வெளியே வந்த தமயந்தி, "இங்கே ஒன்றும் சாப்பிட ஏதுவாக இல்லை. பால் இல்லா தேநீர் வேண்டுமானால் தயாரிக்கிறேன்!" என்று கூறிவிட்டு மீண்டும் உள்ளே சென்றாள். அவள் சென்றபிறகு ராஜசுந்தரத்திற்கும் கோகிலாராணிக்கும் இடையே எந்த வித பேச்சுவார்த்தையும் இருக்கவில்லை.

சிலநிமிடங்களில் மூன்று கோப்பைகளில் தேநீரை எடுத்துக்கொண்டு சமையலறையிலிருந்து வெளியே வந்தாள் தமயந்தி. அவர்கள் இருவரிடமும் ஒவ்வொரு கோப்பை தேநீரைக் கொடுத்துவிட்டு தானும் ஒரு கோப்பையைப் பருகினாள்.

"இந்த வீட்டிற்குள்தான் மாணிக்கவேல் இருக்க வேண்டும்!" என்று திடீரென்று முணுமுணுத்தாள் கோகிலாராணி.

"இல்லை! நீங்கள் சொல்வது தவறு! என் சகோதரன் இறந்து போய் உண்மையிலேயே இரண்டு வருடங்களாகின்றன!" என்று தவித்தாள் தமயந்தி. கோகிலாராணியை எவ்விதம் நம்பவைப்பதென்று அவளுக்குப் புரியவில்லை.

"இதைப்பற்றி யாரும் பேசவேண்டாம்!" என்று கூறிய ராஜசுந்தரம், "நாம் இந்த பங்களாவையும் தோப்பையும் சுற்றிப் பார்க்கலாம்!" என்று கூறினான்.

அவன் யோசனைக்கு ஒப்புக்கொண்ட தமயந்தி, "ஆனால் ஆறுமணிக்கெல்லாம் நமக்கு சாப்பாடு வந்துவிடும்! அந்தப் படகுக்காரனிடம் அதற்குப் பணம் கொடுத்திருக்கிறேன்! அதைச் சாப்பிட்டுவிட்டு அவரவர் ஆறுமணிக்கே அவர்கள் அறைக்குப் போய்விட வேண்டும்!" என்றாள்.

"ஏன்?" என்று விசித்திரமாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

"இந்த இடத்தில் வெகுகாலமாக யாரும் குடிவராததால் மின்சார இணைப்புகள் கெட்டுப்போய் விளக்குகள் எரியாது! அதனால் எல்லோரும் ஆறுமணிக்கெல்லாம் படுக்கைக்குப் போய்விடுவது நல்லது!" என்று கூறினாள் தமயந்தி.

அதற்கு ஒப்புக்கொண்டு எல்லோரும் மாளிகையைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தனர். மிகப் பிரமாண்டமான அந்த மாளிகையில் நிறைய அறைகள் விருந்தினர்கள் வந்தால் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருந்தது. மாடியில் சுமார் இருபத்தைந்து அறைகள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் உயர்தர மரத்தினால் செய்யப்பட்ட கட்

டில்கள் பூவேலைப்பாடுடன் கூடிய தட்டுகள் முதலியவை காணப்பட்டன.

இவற்றையெல்லாம் பார்வையிட்டபடி எல்லோரும் வெளியே வந்தனர். பிறகு மாடிப்பாக்கம் தோப்பைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தனர். கோகிலாராணியின் கண்கள் ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல் அங்கும் இங்கும் அலைபாய்ந்த படி இருந்தது. இதமான காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது.

ஆனால் ராஜசுந்தரத்தின் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்து இருந்தது. இரவு மீண்டும் கோகிலாராணிக்கு வெறிபிடித்து தமயந்தியைக் கொலை செய்து விட்டால் என்ன செய்வது. போதாக்குறைக்கு இரவு விளக்குகளும் எரியாது. இவற்றைச் சிந்தித்தபொழுது அவனுக்கு மூளையே குழம்பி விடும் போல் இருந்தது.

சரியாக ஆறுமணிக்கு மூவரும் வீட்டை அடைந்தார்கள். அவர்களுக்காக படகுக்காரக் கிழவன் உணவுடன் காத்துக் கொண்டிருந்தான். மூவரும் உணவருந்திய பிறகு அவன் புறப்பட்டுச் சென்று விட்டான். ராஜசுந்தரம் மாடியில் தமயந்தியைப் படுக்க வைக்க எண்ணினான். அதனால் தன் அறைக்கு எதிராக இருந்த அறையில் அவளைப் படுக்கச் சொன்ன ராஜசுந்தரம், ரகசியமான குரலில், "எச்சரிக்கையோடு இரு, தமயந்தி! இன்று பிற்பகல் கோகிலா ராணி உன்னிடம் நடந்து கொண்டதை வைத்துப் பார்த்தால் அவள் உன்னைக்கொலை செய்யக்கூட அஞ்சமாட்டாள் என்று தோன்றுகிறது! அதனால் உள்ளே அறைக்கதவை பூட்டிக்கொள்!" என்று கூறிவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றான்.

கோகிலாராணி கீழே இருந்த அறைகளில் ஒன்றில் படுத்துக் கொண்டாள். ராஜசுந்தரத்திற்கு வெகுநேரம் வரை உறக்கமே வரவில்லை. அன்று இரவு ஏதோ ஒரு பயங்கரம் நிகழப்போகிறதென்று அவன் உள்மனம் அவனை எச்சரித்த படிஇருந்தது. அதனால் தனக்கு வந்த உறக்கத்தைத் தன்னால் இயன்றவரை கட்டுப்படுத்திக் கொண்டான். ஒருமணி நேரம் வரை உறக்கத்துடன் கடுமையாகப் போராடிய ராஜசுந்தரம் தோல்வியடைந்து தன்னை மறந்து உறங்க ஆரம்பித்தான்.

எவ்வளவு நேரம் அவன் உறங்கியிருப்பான் என்று தெரியாது. திடீரென்று அவனுக்கு விழிப்பு ஏற்பட்டது. "க்ளிக்" என்றசத்தம் கேட்டதாக அவனுக்குத் தோன்றியது. யாரோ அறைப்பூட்டைத் திறக்கும் ஓசைதான் அது என்பதைப் புரிந்து கொண்ட ராஜசுந்தரம் ஒருகால் கோகிலா

ராணி தமயந்தியைக் கொல்லத்தான் அவளுடைய அறைக் கதவைத் திறக்கிறாளோ என்று எண்ணியவனாக தன்னுடைய படுக்கையை விட்டு வேகமாக எழுந்தான். தமயந்தியை ரத்த வெறிபிடித்த பிசாசான கோகிலாராணியிடமிருந்து காக்க வேண்டுமென்ற தவிப்பு அவனுக்கு ஏற்பட்டது.

பூனைபோல ஓசைப்படாமல் தன்னுடைய அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த ராஜசுந்தரம் தமயந்தியின் அறைக் கதவில் கையை வைத்து அழுத்திப் பார்த்தான். அது பூட்டப்பட்டிருந்தது. அதைக் கண்டு திருப்தியடைந்த ராஜசுந்தரத்திற்கு திடீரென்று தான் கேட்ட சத்தம் வெறும் பிரமையாக இருக்குமோ என்று தோன்றியது.

அதே சமயம் கீழ்த்தளத்தில் ஒருமுறை துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் கீழே ஓடினான் ராஜசுந்தரம். கீழ்த்தளத்தில் யாரையும் காணவில்லை. தனது டார்ச்சை வைத்து மூலை முடுக்கில் எல்லாம் அடித்துப் பார்த்தான். அப்பொழுது அவன் முகத்தில் 'சில்'லென்று எலும்பை உறைய வைக்கும்படி காற்று வீசியது. பரபரப்போடு திரும்பிய ராஜசுந்தரம் வாசல் கதவு திறந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

துப்பாக்கியால் சுட்டவன்தான் அங்கு வரும்முன் கதவைத் திறந்துகொண்டு தோப்பினுள் ஓடிவிட்டான் என்பதைப் புரிந்துகொண்ட ராஜசுந்தரம் வெளியே ஓடினான். தோட்டம் முழுவதும் தேடி அலுத்துப்போன அவன் தோட்டத்தைவிட்டு வெளியே வந்தான். நிலவு காய்ந்து கொண்டிருந்ததால் எங்கும் வெளிச்சம் பரவி இருந்தது. அதனால் டார்ச் அவனுக்கு அவசியமாகப்படவில்லை.

அப்பொழுது எதிர்பாராதவிதமாக சிறிது தொலைவில் ஒரு கல்மீது ஒரு கரிய உருவம் உட்கார்ந்திருந்தது. வெகு வேகமாக அந்த உருவத்தை நோக்கி ஓடினான் ராஜசுந்தரம். ஆனால் அந்த உருவம் தான் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. அந்த உருவத்தை நெருங்கிவிட்ட ராஜசுந்தரம், அதன் முகத்தைப் பார்த்ததும், "ஆ! நீங்களா?" என்று கூச்சலிட்டான்.

## 10 மர்ம மாளிகை!

ராஜசுந்தரம் அங்கு உட்கார்ந்திருந்த நபரைப் பார்த்ததும் மிகுந்த ஆச்சரியமடைந்தான். அவன் உண்மையிலேயே அவரை அங்கு எதிர்பார்க்கவில்லை. அவனை ஐந்து

வருடகாலம் சிறையில் தள்ளியதே இன்ஸ்பெக்டர் கதிர்வேல் தான். அவர்தான் அங்கு அமர்ந்துகொண்டிருந்தார்.

"நான் எங்கே இங்கே வந்தேன் என்று எண்ணுகிறாயா, ராஜசுந்தரம்?" என்று புன்னகையோடு கேட்டார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

அவரை அங்குக் கண்ட அதிர்ச்சியிலிருந்து ராஜசுந்தரம் இன்னும் மீளவில்லை. பங்களாவினுள் ஒரு குண்டுச் சத்தம் கேட்டதே. ஒருக்கால் இன்ஸ்பெக்டர் கதிர்வேல், "உனக்கு இதில் என்ன பங்கு?" என்று கேட்டான் ராஜசுந்தரம்.

"இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் மர்ம விவகாரங்களில்!" என்று பதிலளித்தார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

"நானாக இதில் ஈடுபடவில்லை!" என்று கூறிய ராஜசுந்தரம்," வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டேன்!" என்றான்.

"உன்னை இதில் ஈடுபடுத்தியது யார் என்று எனக்குத் தெரியும், ராஜசுந்தரம்! கோகிலாராணிதானே, அது?" என்று கேட்டார் கதிர்வேல்.

"ஆமாம்!" என்று கூறிய ராஜசுந்தரம், "இந்த வழியை யார் உங்களுக்குச் சொன்னது?" என்று கேட்டான்.

"மனேகர்!"

"மனேகர் உயிருடன் இருக்கிறானா?" என்று ஆவலாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

"இல்லை அவன் இறந்துபோய் விட்டான்!" என்று கூறிய இன்ஸ்பெக்டர் கதிர்வேல், "நான் விவரமாகச் சொல்லுகிறேன் கேள்!" என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்.

"தமயந்தி வீட்டின் அடுத்த வீட்டில் தாக்குதல் நடந்த பொழுது கோகிலாராணியும் மனேகரும் ஒளிந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு கான்ஸ்டபிள் சுட்ட குண்டு மனேகரின் கையில் பாய்ந்துவிட்டது. அந்த அடியையும் பொறுத்துக்கொண்டு இருவரும் ஓடிவிட்டனர். ஆனால் அகப்பட்டுக் கொண்டவன் வேல்முருகன் என்னும் இவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஆள். அவனைப் போலீஸார் சுட்டுக் கொன்று விட்டனர்!"

"என்ன! வேல்முருகன் இறந்துவிட்டானா?" என்று அதிர்ச்சியோடு கேட்டான் ராஜசுந்தரம்.

"ஆமாம்! அவன் தாக்குதலின்போது போலீஸார் குண்டுக்கு இரையாகிவிட்டான். அவன் பிணத்தை அப்புறப் படுத்தி விட்டார்கள். எங்களுக்குத் தகவல் அளித்தவன் பக்கத்து வீட்டுக்காரன். தமயந்தி வீட்டிற்கு நிறைய ஆட்கள் வந்துசேரவே அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் சுமார் மூன்று வருடங்களாக அந்த

வீட்டில் வசித்துவந்த தமயந்தி வீட்டிற்கு நிறைய ஆட்கள் வந்து சேரவே அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் சுமார் மூன்று வருடங்களாக அந்த வீட்டில் வசித்து வந்த தமயந்தியை இதுவரை யாரும் தேடி வந்தது கிடையாது. அப்படி இருக்க ஒரு கோஷ்டியினர் தேடி வந்தார்கள் என்றால் அதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று முடிவு கட்டிக்கொண்டான்.

"அவள் வீட்டைக் கண்காணிக்க எண்ணிய அவன் தோட்டத்தில் உலாவிக்கொண்டு அவள் வீட்டையே பார்த்தபடி இருந்திருக்கிறான். அப்பொழுது வெளியே ஒரு கார் வந்து நின்றிருக்கிறது. அதிலிருந்து ஒரு பெண்ணும் ஒரு மனிதனும் இறங்கியிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்ததும் அவனுக்கு அந்த விவகாரத்தில் ஒரு சுவாரசியம் ஏற்பட்டிருக்கிறது. காரைவிட்டு இறங்கிய மனிதனின் கையில் ஒரு துப்பாக்கி இருந்ததுபோல் அவனுக்குத் தோன்றியிருக்கிறது. அவன் காரைவிட்டு இறங்கியவுடன் தன் கையிலிருந்த துப்பாக்கியைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டதையும் அவன் பார்த்து இருக்கிறான்.

"துப்பாக்கி வைத்துக்கொண்டு ஒரு மனிதன் ஒரு உத்தமப் பெண்மணியின் வீட்டினுள் நுழைகிறான் என்றால் அதில் ஏதோ ஒரு பெரிய மர்மம் இருக்குமென்று எண்ணியிருக்கிறான். அதே சமயம் அவர்கள் அந்த வீட்டினுள் நுழைந்துவிட்டனர். சிறிது நேரம்வரை எந்தவித சத்தமும் கேட்கவில்லை. பிறகு ஏதோ பேச்சு சத்தம் கேட்டிருக்கிறது. தமயந்திக்கு ஏதோ ஆபத்து ஏற்படப் போகிறதென்பதை உணர்ந்துகொண்ட அவன் அவள் வீட்டினுள் என்ன நடக்கிறதென்பதை அறிந்துகொள்ள எண்ணியிருக்கிறான். அவன் ஜன்னல் வழியாக தமயந்தியின் வீட்டினுள் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட மனோகர் அவனை நோக்கிப் பாய்ந்திருக்கிறான்

"துப்பாக்கி வைத்திருந்த மனிதன் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் கலங்கிப்போன அவன் எங்கே அந்த மனிதன் தன்னைச் சுட்டுவிடுவானோ என்று கலங்கி தோட்டத்திற்குள் ஓடியிருக்கிறான். ஆனால் மனோகர் அவனை விடவில்லை. துரத்தி அவனைப் பிடித்துவிட்டிருக்கிறான் அப்பொழுது தான் நீங்கள் மூவரும் வெளியே வந்திருக்கிறீர்கள். பக்கத்து வீட்டுக்காரன் மீது டார்ச் விளக்கை அடித்த தமயந்தி அவனை நோக்கி கடுமையாகக் கூச்சலிட்டிருக்கிறாள். அதனால் அவளிடமிருந்து தனக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்காது என்பதை எண்ணி கலங்கியிருக்கிறான் அவன். அப்பொழுது அவனைக் கொண்டுபோய் நீங்கள் எல்லோரும்

அவன் வீட்டு சமையற்கட்டிலேயே அடைத்து வைத்திருக்கிறீர்கள்.

"நீங்கள் அவனை எதுவும் செய்துவிடுவீர்களோ என்று பயந்த அவன் தப்புவதற்கு எதுவும் வழி இருக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்திருக்கிறான் அவனை நீங்கள் சமையற்கட்டில் அடைக்கும்பொழுது பின்னால் ஒரு கதவு இருப்பதைக் கவனிக்கத் தவறிவிட்டீர்கள். அதனால் அது திறந்திருந்தது. சுற்றுமுற்றும் பார்த்த அந்த வீட்டுக்காரன் தப்புவதற்கு அந்தக் கதவு இருப்பதைக் கண்டதும் ஓசை செய்யாமல் அதைத் திறந்துகொண்டு வெளியே ஓடி இருக்கிறான். பக்கத்தில் இருந்த தொலைபேசி நிலையத்தில் எங்களுக்குத் தகவல் கொடுத்து அங்கு வரச் சொன்னான்.

"நாங்கள் அங்கு வந்தபொழுது கோகிலாராணி, மனோகர், வேல்முருகன் ஆகிய மூவரே அங்கு இருந்தனர். உன்னையும் தமயந்தியையும் காணவில்லை. அதனால் நீங்கள் இருவரும் முன்பே தப்பிச் சென்றுவிட்டீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு விட்டேன். நீங்கள் எங்கே போயிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியாது. அதனால் என்னால் இயன்றவரை மனோகரையும் கோகிலாராணியையும் பிடிக்க முயற்சித்தேன். ஆனால் அவர்கள் இருவரும் தப்பி ஓடிவிட்டார்கள்?" என்று நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

"பிறகு மனோகரை எப்படிச் சந்தித்தீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

"கோகிலாராணியும் மனோகரும் தங்களுடைய திருட்டுக் காரைத் தேடியிருக்கிறார்கள். ஆனால் அதைக் காணவில்லை. அது எப்படி அவர்களுக்குக் கிடைக்கும்? அதில்தான் நீயும் தமயந்தியும் ஏறிக்கொண்டு சோலைப்பாக்கம் ரயில் நிலையத்திற்குச் சென்றுவிட்டீர்களே அதேசமயம் மனோகர் கையில் இருந்து எக்கச்சக்கமாக ரத்தம் வழிந்தோடியிருக்கிறது. அதைக்கண்டு தான் எங்கே இறந்து போய் விடுவோமோ என்று பயந்த மனோகர் கோகிலாராணியிடம் ஏதாவது ஒரு டாக்டரிடம் சென்று காட்டலாம் என்று யோசனை கூறியிருக்கிறான். ஆனால் அந்த நிலையில் ஏதாவது ஒரு டாக்டரிடம் சென்றால் தாங்கள் மாட்டிக் கொள்வது நிச்சயம் என்று மனோகரிடம் கூறிய கோகிலாராணி அவனை அழைத்துக் கொண்டு ஓடியிருக்கிறாள்.

அவர்கள் ஓடஓட மனோகர் கையிலிருந்து ஏராளமான ரத்தம் கொட்டியிருக்கிறது. அதன் வேதனை பொறுக்க முடியாமல் மனோகர் திணறியிருக்கிறான். அதற்குள் தெருவில் அவர்கள் ஒருகாரைப் பார்த்திருக்கிறார்கள். அதில் இருவரும் ஏறிக்கொண்டு சோலைப்பாக்கம் ரயில் நிலையத்திற்கு ஓட்டி

யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அங்கு போய்ச் சேருவதற்குள் மனேகர் மயங்கி விட்டிருக்கிறான். அங்கு கோகிலாராணி மாடிப்பாக்கம் செல்லும் ரயில் எப்பொழுது வரும் என்று கேட்டிருக்கிருள். ஆனால் அந்த ரயில் போய் பத்து நிமிடங்களாகின்றன என்று தகவல் கிடைத்திருக்கிறது. கோகிலாராணி ரொம்பவும் ஏமாற்றமடைந்திருக்கிருள்.

"ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொண்ட அவள் வேறு எந்த ரயில் மாடிப்பாக்கத்திற்கு செல்லுமென்று விசாரித்திருக்கிருள். ஒரு சரக்கு(கூட்ஸ்) ரயிலைத் தவிர வேறு எந்த ரயிலும் மாடிப்பாக்கம் செல்லாது என்பது கோகிலாராணிக்குத் தெரிய வந்திருக்கிறது. மறுநாள் காலைவரை அவளுக்கு அங்கே காத்திருக்க பொறுமை இல்லை. மேலும் மனேகர் இறந்து விடுவான் போலத் தோன்றியதால் அவனை உடனடியாக ஒரு ஆஸ்பத்திரியில் சேர்க்க விரும்பியிருக்கிருள் கோகிலாராணி.

"சரக்கு வண்டி அப்பொழுது புறப்படும் தருவாயில் இருந்திருக்கிறது. அப்பொழுது கோகிலாராணிக்கு அதிலேயே போகலாம் என்ற யோசனை ஏற்பட்டிருக்கிறது. மேலும் சீக்கிரமாக அவனை ஆஸ்பத்திரியில் சேர்க்க விரும்பியிருக்கிருள் கோகிலாராணி. காரணம் எவ்வளவு பெரிய சோதனை வந்தாலும் கோகிலாவுடனேயே இருந்து அவளுக்கு உதவி புரிந்து வந்த மெய்க்காப்பாளன் அவன். அதனால் அவன் இறக்கக் கூடாது என்று தவித்திருக்கிறள் கோகிலா. அதனால் சரக்கு வண்டியிலேயே மாடிப்பாக்கம் போய்விட எண்ணி வண்டி புறப்படும் பொழுது மனேகரை கைத்தாங்கலாக பிடித்து அழைத்துக் கொண்டு வண்டியில் ஏறி விட்டாள்.

"வழியெல்லாம் மனேகர் முனகிக்கொண்டே வந்திருக்கிருன். அவன் அருகில் இருந்தபடி அவனையே கவனித்துக் கொண்டிருந்திருக்கிருள் கோகிலாராணி. ஒருதடவை யாரோ அவர்கள் இருந்த பெட்டியைத் திறந்திருக்கிருர்கள். அந்த சமயம் மனேகர் மயக்கமாக இருந்திருக்கிருன். தான் அவ் விதம் மனேகருடன் திருட்டுத்தனமாக ஏறியதை யாரும் கவனித்து போலீஸாருக்குத் தெரியப்படுத்தி இருப்பார்களோ என்று கோகிலாராணி பயந்திருக்கிருள். அதனல் மனேகரை இழுத்துச் சென்று அங்கு இருந்த மூட்டைகள் ஒன்றின் பின்னல் கிடத்திவிட்டு கோகிலாராணி கதவைத் திறந்து யார் என்று கவனிக்கச் சென்றிருக்கிருள். கதவைத் திறந்த ஒரு மனிதன் மூட்டைகளை ஒரு முறைச் சுற்றிப் பார்த்து விட்டு இறங்கிப் போய்விட்டான். அந்த நேரத்தில் மயக்கம் தெளிந்து கண்விழித்த மனேகர் கோகிலாராணி தன்னை இவ்

விதம் மூட்டைகளுக்கிடையே போட்டுவிட்டு ஓடிவிட்டாள் என்று தவருக எண்ணியிருக்கிறான். மேலும் ஏராளமான ரத்தம் சேதமானதால் அவனால் சரிவர பேசக்கூட முடிய வில்லை.

''ராஜசுந்தரத்திடம் காதல் கொண்டு அலையும் கோகிலா ராணி தன்னைக் கொலை செய்ய திட்டமிட்டிருப்பதாக அவ ளிடமே கூறியிருக்கிறான். ஆனால் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்திருக்கிருள் கோகிலாராணி. ஆனால் மேலும் மேலும் அவன் அவளைக் கண்டபடி திட்டவே பொறுமை இழந்த கோகிலாராணி அவனை வாயை மூடும்படி கூறியிருக்கிருள். அப்படி செய்யாவிட்டால் ஓடும் ரயிலில் இருந்து அவனைக் கீழே தள்ளி கொலை செய்யப் போவதாக மிரட்டியிருக்கிருள்.

"அவளுடைய மிரட்டலைக் கண்டு பயந்து விட்ட மனேகர், அவள் எங்கே தன்னை உண்மையாகவே கொலை செய்து விடுவாளோ என்று பயந்திருக்கிறான். அதற்குள் தான் முந்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு ஏற் பட்டிருக்கிறது. அதனால் அவன் தன்னிடம் எப்பொழுதும் தற்காப்புக்காக வைத்திருக்கும் துப்பாக்கியை மற்றொரு கையால் எடுத்திருக்கிறான். அவனது வஞ்சக எண்ணத்தைப் புரிந்து கொண்ட கோகிலாராணி அவன் கையிலிருந்து பாய்ந்து துப்பாக்கியைப் பிடுங்கியிருக்கிருள்.

"அதைத் தன் இருப்பில் சொருகிக் கொண்ட அவள் கத வைத் திறந்து வைத்து விட்டு மனேகர் அருகேவந்திருக்கிருள். நிறைய பேசிய களைப்பினாலும் ரத்தசேதம் காரணமாகவும் அவன் மீண்டும் மூர்ச்சை அடைந்திருக்கிறான். அதுதான் தருணம் என்று உணர்ந்த கோகிலாரணி அவனை இழுத்து வந்து வெளியே தள்ளிவிட்டிருக்கிருள். அந்த ரயில் பெட்டி யில் எங்கு பார்த்தாலும் ஒரே ரத்தமாகக் காணப்பட்டது. தன்னுடைய சேலை முந்தானையைக் கிழித்து தண்ணீரில் நனைத்து அவ்வளவு ரத்தத்தையும் சுத்தப் படுத்தி இருக் கிருள் கோகிலாராணி.

"அதற்குள் மாடிப்பாக்கம் ஸ்டேஷன் வந்து விட்டது. கோகிலாராணி இறங்கி விட்டிருக்கிருள். தமயந்தி முதல் நாளிரவு குறிப்பிட்ட மாடிப்பாக்கம் தோப்பிற்கு நீங்கள் அன்று இரவே போய் இருப்பீர்கள் என்று எண்ணி தமயந்தி குறிப்பிட்ட அடையாளத்தை வைத்துக் கொண்டு இடம் கண்டு பிடித்து வந்திருக்கிருள். அப்பொழுதுதான் நீங்கள் இருவரும் படகில் ஏற இருந்திருக்கிறீர்கள். உங்களைத் தடுத்து நிறுத்தி அவளும் ஏறிக் கொண்டிருந்திருக்கிருள்!

அதன் பிறகு நடந்ததுதான் உனக்குத் தெரியுமே!'' என்று கூறி நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

'தெரியும்' என்ற பாவனையில் தலையாட்டிய ராஜசுந்தரம் ''மனோகருக்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டான்.

''கோகிலாராணி அவனைத் தள்ளிவிட்ட இடம் அதிர்ஷ்டவசமாக செடி கொடிகள் நிறைந்த சமதளமாக இருந்தது. அதனால் அவனுக்கு பலத்த அடி எதுவும் இருக்கவில்லை. ஆனால் கையிலிருந்து ஏராளமான ரத்தம் வெளியேறிக் கொண்டே இருந்தது. அவன் விழுந்த இடம் ஒரு ஒதுக்குப்புறமான காட்டுப் பகுதியாக இருந்ததால் யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

''கிட்டதட்ட ஒரு மணிநேரம் கழித்து யாரோ இரு ஆட்டிடையர்கள் அவனைக் கண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். துப்பாக்கியால் அவன் சுடப்பட்டிருந்த காரணத்தால் டாக்டர்கள் அதை அவசியம் போலீஸுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணி இருக்கிறார்கள். அதனால் எங்களுக்கு டெலிபோன் செய்யப்பட்டது. நான் அங்கே விரைந்து சென்றேன். மனோகர் தன்னுடைய மரணவாக்கு மூலமாக முதலில் நான் கூறியவைகளைக் கூறினான். அதன் பிறகு தீவிரசிகிட்சை அளித்தும் பலனளிக்காமல் இறந்து விட்டான்!'' என்று நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

''இத்தனைக் கொலைக்கும் காரணகர்த்தாவான கோகிலாராணி மாடிப்பாக்கம் சென்றிருக்கிறாள் என்பதை மனோகர் எனக்குத் தெரிவித்தவுடன் நிறைய போலீஸ் வீரர்களுடன் இங்கே வந்துவிட்டேன். அவர்கள் இங்கேதான் மறைந்திருக்கிறார்கள். நான் இந்த இடத்தை அடைந்தபொழுது மணி ஏழு! மாளிகை இருண்டு கிடந்தது. ஆனால் என் மனதில் இன்று ஒரு பயங்கர நிகழ்ச்சி நடைபெறும் என்று தோன்றியதால் இந்த மாளிகையைக் கண்காணிந்து வந்தேன்!'' என்று கூறிய கதிர்வேல், ''தமயந்திக்கு ஆபத்து ஒன்றுமில்லையே?'' என்று மீண்டும் கேட்டார். பிறகு, ''ராஜசுந்தரம்! நீ எப்படி விழித்தாய்?'' என்று கேட்டார்.

''கோகிலாராணி கீழ் அறை எடுத்திருந்தாள். நான் இரவு தூங்கக் கூடாது என்று எவ்வளவோ முயன்றும் முடியாமல் தூங்கிவிட்டேன். அப்பொழுதுதான் அந்தத் தாழ்ப்பாள் நீக்கப்படும் சத்தம் கேட்டது. கோகிலாராணி தான தமயந்தியின் அறையில் நுழைகிறாளோ என்று பயந்த நான் வேகமாக என்னுடைய அறையை விட்டு வெளியே வந்தேன். தமயந்தியின் அறைக் கதவின் மேல் கையை வைத்து கதவு பூட்டிதான் இருக்கிறதா என்று அறிந்து கொள்ள அழுத்திப் பார்த்ததேன்.

கதவு பூட்டிதான் இருந்தது. கீழே இறங்கி வந்தேன் அப்பொழுது துப்பாககி வெடிச் சத்தம் கேட்டது. போதாக்குறைக்கு வாயிற்கதவு திறந்திருந்தது. துப்பாக்கி யால் சுட்டவன் தப்பி ஓடியிருக்கிறான் என்று எண்ணிய நான் தோட்டம் முழுவதும் அலசிப் பார்த்தேன் யாரையும் காணவில்லை. காம்பவுன்டை விட்டு வெளியே வந்தபொழுது தான் உங்களைப் பார்த்தேன்!'' என்று கூறி நிறுத்தினான் ராஜசுந்தரம்.

## 11 கடைசி அத்தியாயம்!

அதே சமயம் வீட்டினுள் இருந்து ஒரு பெண் உருவம் இன்ஸ்பெக்டர் கதிர்வேலையும், ராஜசுந்தரத்தையும் நோக்கி வந்தது. அருகில் வந்தவுடன்தான் அது தமயந்தி என்பது அவர்களுக்குப் புரிந்தது.

''நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள், ராஜசுந்தரம், அங்கே ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் எழுந்தது! உங்களுக் குக் கேட்டதா? யார் சுட்டது என்று தெரியுமா!'' என்று கேட்டாள் தமயந்தி.

''அதைச் சுட்டது கோகிலாராணியாகத்தான் இருக் கும்!'' என்று தீர்க்கமாகக் கூறினார் இன்ஸ்பெக்டர் கதிர்வேல்.

''நாம் கோகிலாராணியை எழுப்பி எல்லாவற்றையும் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம்! எனக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்களெல்லாம் தீர்ந்துவிட்டன. கோகிலாராணியை வைத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் ஒரு தெளிவு ஏற்படுத் தப்போகிறேன்!'' என்று ஒரே முடிவாகக் கூறினான் ராஜசுந்தரம்.

அவர்கள் முன் ஹாலை அடைந்தபொழுது கோகிலா ராணி தன்னுடைய அறையை விட்டு வெளியே வந்துகொண் டிருந்தாள். அவள் முகத்தில் பயங்கர அமைதி குடிகொண் டிருந்தது.

''வா, கோகிலா! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண் டிருந்தோம்!'' என்று கூறிய ராஜசுநதரம், ''இவர்தான் இன்ஸ்பெக்டர் கதிர்வேல் என்று கோகிலாராணிக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

தன்னுடைய அமைதியை இழக்காமல் இன்ஸ்பெக்டர் கதிர்வேல் பக்கம் திரும்பிய கோகிலாராணி,'' வணக்கம், இன்ஸ்பெக்டர்! இந்த அர்த்தஜாம வேளையில் இங்கு ஒரே

பரபரப்பாக இருக்கிறதே என்ன விஷயம்?'' என்று ஒன்றும் தெரியாதவளைப் போலக் கேட்டாள்.

''இங்கே ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது! உனக்குத் தெரியாதா, கோகிலா?'' என்று அமைதியாகக் கேட்டான் ராஜசுந்தரம்.

''விளையாடாதே ராஜசுந்தரம்! நடந்தது என்னவென்று சொல்!'' என்று கடுமையாகக் கேட்டாள் கோகிலாராணி.

''இரவு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னால் ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் எழுந்ததே! உனக்குக் கேட்க வில்லையா!'' என்று கேட்டான் ராஜசுந்தரம்.

ஆச்சரியத்தால் கோகிலாராணியின் கண்கள் அகல விரிந்தன. ராஜசுந்தரத்தை ஏறிட்டு நோக்கிய அவள், ''அது என் காதில் விழுந்தது! ஆனால் பயம் காரணமாக ஏற்பட்ட பிரமையாக இருக்கக் கூடுமென்று எண்ணி நான் மீண்டும் தூங்கிவிட்டேன். உங்களுடைய பேச்சு சத்தத்தினால் விழித்துக்கொண்டு வெளியே வந்த பொழுது நான் உங்களைப் பார்த்தேன்!'' என்று கூறிய கோகிலாராணி, ''அப்படி யானால் துப்பாக்கி வெடித்தது உண்மைதானா?'' என்று கேட்டாள்.

மாணிக்கவேல் இங்கே இல்லை என்பது உனக்குத் தெரியும்! அவன் இந்த உலகத்திலேயே இல்லை என்பது கூட உனக்குத் தெரியும்! ஆனால் தெரியாதது போல நடிக்கிறாய்!'' என்று கூறினான்.

''பொய்! உளறாதே, ராஜசுந்தரம்! அவன் உயிரோடு இருக்கிறான். மனோகரையும் தமயந்தியின் சிநேகிதி ஆஷாவை யும் கொன்றவன் அவன்தான்!'' என்று கத்தினாள் கோகிலா ராணி.

ஆனால் அதை லட்சியம் செய்யாத ராஜசுந்தரம், ''மனோகரை நீதான் கொன்றாய்!'' என்று முழங்கினான்.

''இல்லை, இல்லை! இல்லவே இல்லை!'' என்று கதறினாள் கோகிலாராணி.

''நான் சொல்வதை கவனமாகக் கேள், கோகிலா! அப் பொழுது உனக்கே நீ செய்த குற்றங்கள் புரியும்! அவசரப் பட்டு குறுக்கே வீரிட்டுக் கத்தாதே!'' என்று அமைதியான குரலில் எச்சரித்தான் ராஜசுந்தரம். பிறகு இன்ஸ்பெக்டர் கதிர்வேலை நோக்கி, ''இன்ஸ்பெக்டர் சார்! எனக்குத் தெரிந்த உண்மைகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்! சொல்லலாமா?'' என்று கேட்டான்.

''தாராளமாக!'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் கதிர்வேல் தானும் அதைக் கேட்க தன்னுடைய நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டார். ராஜசுந்தரத்திற்கும் கோகிலா

ராணிக்கும் இடையே நடைபெறும் அந்த நாடகத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் தமயந்தி.

கோகிலாராணியின் முகத்தைத் திரும்பிப் பார்த்த ராஜசுந்தரம், "தேசத் துரோக செயலில் ஈடுபட்டிருந்தபொழுது நீங்கள் போலீஸாரிடம் மாட்டிக்கொண்டீர்கள். அப்பொழுது தன்னுடைய உயிருக்கு பயந்து மாணிக்கவேல் தான் உங்களைக் காட்டிக் கொடுக்க முன்வந்தான் என்று நீ கூறினாய்! ஆனால் நீதான் அவர்களைக் காட்டிக் கொடுத்தாய். அதனால்தான் அந்நிய போலீஸார் வேல்முருகனின் கையை வெட்டி விட்டார்கள். மேலும் மாணிக்கவேலை புளிய மிலாரினால் விளாசினார்கள். மனோகரும் அதில் மாட்டிக் கொண்டான்.

"நீதான் அவர்களைக் காட்டிக் கொடுத்தாய் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள் என்று பயந்த நீ உன் காதலனை மாணிக்கவேலின் மீது குற்றத்தைச் சுமத்தினாய். தண்டனையடைந்த பிறகு நீங்கள் மூவரும் மாணிக்கவேலைச் சந்திக்கவே இல்லை. ஆனால் நீ உன் மீது தோழர்களுக்கு சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காக மாணிக்கவேலைத் தேடுவது போல பாவனை காட்டி வந்தாய். உன்னுடைய அப்பாவித் தோழர்களும் அதை நம்பி விட்டார்கள்.

"இப்படி நீ போக்குக் காட்டிக் கொண்டிருந்தபொழுது அடுத்த வருடம் ராணுவத்தில் சேர்ந்த மாணிக்கவேல் இறந்து விட்டான் என்ற செய்தி உனக்குக் கிடைத்தது. அதைப் பரம ரகசியமாக உனக்குள் வைத்துக் கொண்டாய், கோகிலா! இதனால் உன் தோழர்கள் மாணிக்கவேலின் மரணம் பற்றி அறிய முடியாமல் போய்விட்டது.

"அதன் பிறகு பக்கிரி என்றொரு மனிதனையும் வேலப்பன் என்ற மனிதனையும் உன் கற்பனை மாணிக்கவேலைக் கொல்ல வேண்டுமென்று ஏவினாய். ஒருநாள் இரவு அவர்கள் இருவரும் இறந்த மாணிக்கவேலைத் தேடிக் களைத்துப் போயிருந்தார்கள் அப்பொழுது பக்கிரி தெருவைக் கடக்கும்பொழுது அவனைக் காரேற்றிக் கொன்றாய். மற்றொரு சமயம் வேலப்பனை ஆள்விட்டு தண்ணீரில் மூழ்கடிக்கச் சொன்னாய். அதன் பிறகு அவர்கள் மாணிக்கவேலால்தான் கொல்லப்பட்டார்கள் என்ற பொய்த் தகவலைப் பரப்பினாய்.

"இதையெல்லாம் நம்பிக் கொண்ட உன் அப்பாவிக் கூட்டத்தினர் நீ உண்மையிலேயே மாணிக்கவேலைத் தேடி அலைவதாகவும், அவன் உயிருடன் இருப்பதாகவும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். வேலப்பனும் பக்கிரியும் இறந்துபோய் கொஞ்சகாலம் வரை நீயே மாணிக்கவேலைத் தேடி அலை

வகைப் போல நாடகமாடினுய். பிறகு மூன்றுவதாக என்னைத் தேர்ந்தெடுத்தாய். நான் தமயந்தியைக் கண்டு பிடிக்கக்கூடாது என்று எவ்வளவோ முயற்சி செய்தாய்.

"இதற்குக் காரணம் நான் தமயந்தியைக் கண்டுபிடித்து விட்டால மாணிக்கவேல் இறந்துபோய் விட்ட தகவலைத் தெரிந்து கொண்டு விடுவேன் என்று நீ பயந்தாய். அதனுல் தான் ஆஷா எனக்கு தமயந்தி இருக்குமிடத்தைத் தெரி விக்கக்கூடாது என்ற எண்ணத்தினுல் அவளை மாடிப்படியி லிருந்து தள்ளிவிட்டுக் கொன்ருய். ஆஷாவை நீ காலை வாரி விட்டுக் கொன்ருய். ஆனுல் ஒன்றை நீ கவனிக்க மறந்து விட்டாய்.

"ஆஷா தன்னுடைய கையில் தமயந்தியின் விலாசம் இருந்த டைரியை வைத்திருந்தாள். அதை நீ எடுக்க மறந்து விட்டாய். அதனுல் அவளுடைய விலாசத்தை நாங்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விட்டோம். அதனுல் நீ தமயந்தி சொல்வது பொய் என்றே சொல்லிக் கொண்டிருந்தாய்.

"ஆஷாவின் வீட்டு மாடியில் நீ எப்படி வந்தாய் என்று நாங்கள் கேட்டதற்கு நீ பதிலே சொல்லவில்லை. நாங்கள் வருவோம் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்ட நீ அங்கே வந்து மறைந்திருந்தாய். ஆஷா மாடிக்கு டைரியைத் தேடிக்கொண்டு வருவாள். அவள் பார்க்காதபோது—மாடிப் படியில் இறங்கப் போகும்பொழுது பின்னுல் இருந்து காலை வாரி விடுவதுதான் உன் திட்டம். அது வெற்றிகரமாக முடிந்து விட்டது.

"குரலை மாற்றும் கலையை நன்கு கற்றிருந்த நீ உன் குரலை மாற்றி மாடியிலிருந்து பேசினுய். பாலுவின் பிணத்தை நான் பார்க்க வந்தபொழுது நீதான் மாணிக்கவேலின் குர லில் பேசினுய்! மனேகரையும் கொன்றது நீதான்!" என்று நிறுத்தினுன் ராஜசுந்தரம்.

"இல்லை, இல்லை!" என்று வீரிட்டாள் கோகிலாராணி.

"மேலும் தமயந்தி மீது உனக்குப் பொருமை, ஆத்திரம் இரண்டும் இருந்தது. அவள் உன்னைவிட அழகாக இருப் பதே பொருமைக்குக் காரணம். உன்னை நம்பாமல் நான் அவளைத்தான் நம்பினேன்! அதுதான் உன் ஆத்திரத்திற்குக் காரணம!" என்று கூறினுன்.

அதற்கு மேலும் தப்ப முடியாது என்பதை உணர்ந்து கொண்ட கோகிலாராணி சட்டென்று தன்னுடைய இடுப்பி லிருந்து துப்பாக்கியை உருவி எடுத்தாள், பிறகு. "முதல் குண்டினுல் பாலுவைக் கொன்றேன்! இரண்டாவது குண்டும் மூன்றுவது குண்டும் இரண்டு போலீஸ் வீரர்களைக் கொல்ல பயன் பட்டது. நான்காவது குண்டு பாலுவின் வீட்டின்

ராஜசுந்தரத்தை பயமுறுத்த பயன்படுத்தப்பட்டது. ஐந்தாவது குண்டு இந்த மாளிகையில் பிரயோகிக்கப் பட்டது. ஆறாவது குண்டு என்னுடையது!" என்று கூறிவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் தன்னுடைய நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொண்டு சாய்ந்தாள்.

மூவரும் அவளுடைய பிணத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு வாரம் கழித்து தமயந்தியும் ராஜசுந்தரமும் "அன்னிமீரா" ஒட்டலில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஆம்! அவர்களுக்கு மணமாகி விட்டது.

# படுகொலையுண்ட பாவை

## 1 தப்பியோடிய பயங்கரவாதி!

படுபயங்கரமான வேகத்தில் சென்றுகொண்டிருந்த அந்த கார் மாடிப்பாக்கம் காட்டு ரஸ்தாவை அடைந்ததும் இன்னும் அசுர வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. அந்தக் காட்டு ரஸ்தா சென்னைக்கும் மாடிப்பாக்கத்தையும் இணைக்க போடப்பட்டிருந்தது. மாலை ஆறுமணிக்கே இருள் கவிந்து பார்ப்பதற்கே ஒரு பயங்கரத் தோற்றத்தை அளிக்கும் அந்தப் பாதையில் இரவு சுமார் பனிரெண்டு மணியளவில் ஒரு கார் செல்கிறதென்றால் அதில் மர்மம் இருக்கத்தானே செய்யும்.

அந்தக் காரில் ஒரு கரிய உருவத்தைத் தவிர வேறு யாரும் காணப்படவில்லை. கார் சிறிய அளவில் இருந்ததால் அப்படிக் காற்றுபோலப் பறக்க முடிந்தது. தனது கார் பியட்காராக இருப்பதைக் கண்டு அவன் மகிழ்ச்சியடைந்தான். அந்தக் காரினுள் அமர்ந்திருந்த மனிதனின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. தான் எப்படியும் விடிவதற்குள் அந்த இடத்தை விட்டே மறைந்துவிட வேண்டுமென்ற தவிப்புதான் அவனிடம் காணப்பட்டது.

திடீரென்று அவன் முகத்தில் புன்னகை படர்ந்தது. தனது காரின் வேகத்தை குறைத்த அவன் சிந்தனைகள் பின்னோக்கிப் பாய்ந்தன. அப்பொழுது அவன் கண்களில் கண்ணீர் துளித்தது.

பாலகுமார் வேலை பார்த்துவந்த கம்பெனி மிக நல்ல நிலையில்தான் இருந்தது. அவனுக்கு கணிசமான சம்பளமும் கிடைத்தது. அதே கம்பெனியில் அவனுக்குக்கீழ் வேலை பார்த்து வந்தான் ராஜசுந்தரம். இருவரும் இணைபிரியா

நண்பர்களாக இருந்தனர். இந்த நிலையில் பாலகுமார் நளினி என்ற பெண்ணை காதல் மணம்புரிந்து கொண்டான். இத்திருமணத்தில் ராஜசுந்தரத்திற்கு விருப்பமில்லை.

அதே சமயத்தில் ராஜசுந்தரம் கம்பெனி பணத்தில் ஒரு லட்சரூபாய் கையாடிவிட்டான். ஆனால் சாட்சியங்கள் பாலகுமாரரை குற்றம் சாட்டின. ராஜசுந்தரம் தன்னுடைய நட்பை பாலசுந்தரத்திடமிருந்து பிரித்துக்கொண்டான். நிரபராதியான பாலகுமார் தண்டனையை அனுபவித்துவிட்டு சில மாதங்களில் வெளியே வந்தான். அவனுடைய வீட்டில் மனைவி இல்லாதது கண்டு மனம் வருந்தினான். இந்த நிலைக்கு தன்னை ஆளாக்கிய ராஜசுந்தரத்தைப் பழி வாங்க வேண்டுமென்ற வெறி அவன் மனதில் எழுந்தது, ராஜசுந்தரத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டான்.

அன்று காலார நடக்கலாம் என்று எண்ணி நுங்கம் பாக்கம் பூங்கா வழியாக நடந்துகொண்டிருந்தான், அப்பொழுது அவனைத் தாண்டி தாடியுடன் ஒரு உருவம் கடந்து சென்றது. அந்த உருவத்தை அதற்குமுன் எங்கோ பார்த்த நினைவு வந்தது பாலகுமாருக்கு. அவசரமாக அவனைக் கடந்து சென்று மிக அருகில் பார்த்தான். சந்தேகமில்லாமல் அவன் ராஜசுந்தரம் தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவனது தோளில் கை வைத்து "என்னை ஏமாற்றவா இப்படி தாடியுடன் சுற்றிக்கொண்டிருக்கிறாய் உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று ஆவேசத்துடன் கையை ஓங்கினான்.

ராஜசுந்தரம் மிகவும் பணிவுடன் "என்னை ஒன்றும் செய்யாதே, என்னைவிட்டுவிடு நான் இப்பொழுது அவசரமாக ஒரு இடத்திற்குப் போகிறேன்" என்று கூறிவிட்டு, "நாளை இரவு பத்துமணிக்கு மாந்தோப்பில் சந்திக்கிறேன்" என்றான்.

"சரி நாளை வராமல் என்னை ஏமாற்ற வேண்டுமென்று நினைத்தால் உன்னை எப்படியும் கண்டுபிடித்து விடுவேன், பிறகு உன் உயிருக்கே ஆபத்து" என்று கூறி அவனை அங்கிருந்து அனுப்பி வைத்தான்.

மறுநாள் இரவு சரியாக பத்துமணிக்கு மாந்தோப்பில் ராஜசுந்தரத்தின் வரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தான்.

சற்று தூரத்தில் ஒரு உருவம் வருவது மங்கலாகத் தெரிந்தது. அது ராஜசுந்தரம்தான் என்பதை அறிந்து கொண்டு தன்னுடைய லைசென்ஸ் பெற்ற துப்பாக்கியை எடுத்து பாதுகாப்பிற்காக மறைத்து வைத்துக் கொண்டான்.

அவன் அருகில் வந்த ராஜசுந்தரம், பாலகுமார் "நான் செய்த தவறை எல்லாம் மன்னித்துவிடு உனக்கு நான் பணம் தருகிறேன், நடந்ததை மறந்துவிடு" என்று கூறினான். தனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, "எவ்வளவு பணம் தருவாய்" என்று கேட்டான்.

"ஐயாயிரம் ரூபாய் தருகிறேன்" என்றான் ராஜசுந்தரம்.

இந்தப் பிச்சைக்காரக் காசுக்காகத்தானா, செய்யாத தவறுக்காக சிறை சென்று, என்னுடைய மனைவியைப் பிரிந்து தனி மரமாக நிற்கிறேன். நன்றிகெட்டவனே உன்னை என்ன செய்கிறேன் பார் என்று அவன்மீது பாய்ந்தான், பாலகுமார்.

எதற்கும் தயாராக வந்திருந்த ராஜசுந்தரம் அதைக் கண்டு அஞ்சவில்லை. இருவரும் கட்டிப் புரண்டனர்.

பல நாட்களாக பழிவாங்க வேண்டுமென்றிருந்த வெறியில் பாலகுமார் ராஜசுந்தரத்தைப் பலமுறை சுட்டான். ராஜசுந்தரத்தின் உயிர் பிரிந்தது. பாலகுமார் கால் போன போக்கில் ஓடினான்.

ஆனால் விதியாரை விட்டது. மாந்தோப்பு காவல்காரன் கூறிய அடையாளங்களை வைத்து பாலகுமார்தான் கொலை செய்தான் என்பதை அறிந்து போலீஸார் அவனைக் கைது செய்தனர். கோர்ட்டில் பாலகுமாருக்கு ஆயுள் தண்டனை தீர்ப்பாக்கியது.

* * *

மாடிப்பாக்கம் காட்டு ரஸ்தாவில் காரில் சென்று கொண்டிருந்த அந்த மனிதன் தனது வாழ்க்கை வரலாற்றை நினைத்து வேதனையடைந்தான். எப்படியோ சிறையிலிருந்து தந்திரமாகத் தப்பியதை நினைத்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

## 2 விசித்திர மனைவி!

அன்று காலை தினத்தந்தி தாங்கிவந்த செய்தியைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

அதையே கவனித்துக்கொண்டிருந்த கமிஷனர் ராஜப்பா, "என்ன இன்ஸ்பெக்டர் சார் கொலையாளி தப்பி ஓடிய செய்தியைப் படித்துவிட்டு சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்ன காரணம் என்று கேட்டார்.

"பாலகுமாரைப் போன்றவர்களுக்கும் கொலையைச் செய்துவிட்டு தப்பிச் செல்லும் தைரியமும் இருக்கிறதே என்று எண்ணித்தான் சிரித்தேன்" என்று கூறினார்.

மனிதன் பிறக்கும்போதே கோழை, தைரியசாலி என்று பிறப்பதில்லை. சந்தர்ப்பம், சூழ்நிலைதான் மனிதனை மாற்றி விடுகிறது, பாலகுமாரும் அப்படித்தான் செய்யாத குற்றத்திற்காக தண்டனை அனுபவித்த அவனுக்கு அப்படி ஒரு வெறி ஏற்பட்டதில் அதிசயமில்லை என்று கூறிவிட்டு, அது சரி எப்படி அவனைக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்'' என்று கேட்டார், கமிஷனர் ராஜப்பா.

அவனுடைய மனைவி நளினி மாடிப்பாக்கத்தில் ஒரு விடுதியில் இருப்பதாகக் கேள்வி, அவளைச் சந்தித்து விபரம் அறிந்துவிடுகிறேன் என்று கூறினார்.

பிளாரன்ஸ் தொடக்கப்பள்ளி என்னும் பள்ளியை இன்ஸ்பெக்டர் அடைந்தபோது அவரை அப்பள்ளியின் தலைவி வரவேற்றாள்.

''உங்களது பள்ளியில் நளினி என்ற பெண் பணிபுரிகிறாளா?'' என்று கேட்டார்.

''ஆமாம் மிகவும் அடக்கமான பெண் இங்குதான் பணி புரிந்து கொண்டிருக்கிறாள்'' என்று கூறிவிட்டு பணியாளை அழைத்து, நளினியை அழைத்து வருமாறு கூறினாள்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த நளினி இன்ஸ்பெக்டர் ராஜவேலை வணங்கினாள்.

இருபத்தி இரண்டே வயதான அவள் மிகவும் அடக்கத்துடன் காணப்பட்டாள் என்றாலும் அவளது முகத்தில் சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது.

''நளினி உன்னிடம் சில கேள்விகள் கேட்பேன் என்னிடம் மறைக்காமல் கூற வேண்டும்'' என்று இன்ஸ்பெக்டர் ராஜவேல் அவளிடம் கேட்டுக் கொண்டார்.

''என் கணவரைப்பற்றி என்னிடம் தயவுசெய்து எதுவும் கேட்காதீர்கள், என்னைப் பொருத்தவரையில் அவர் இறந்துவிட்டார் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன்'', என்றாள் வெறுப்புடன்.

''நீ தவறாக நினைக்க வேண்டாம் நளினி. நீ கூறும் ஒவ்வொரு தகவலும் நாட்டிற்கும், சட்டத்திற்கும் எவ்வளவு நன்மையளிக்கும் என்று தெரியுமா'' என்று கூறினார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

''நான் என்னுடைய கணவர் என்பதால் எனக்குத் தெரிந்த விஷயங்களை மறைப்பேன் என்று கருத வேண்டாம். பெற்ற பிள்ளையாக இருந்தாலும் நாட்டிற்கு துரோகமான செயல் புரிபவனாக இருந்தால் சட்டத்திற்கு காட்டிக் கொடுக்காமல் இருக்கமாட்டேன்'' என்று கூறினாள் நளினி.

அவனுடைய இந்த ஆவேசமான பேச்சு ராஜவேலுவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

"உன்னுடைய கணவரை கடைசியாக நீ எப்பொழுது சந்தித்தாய்" என்றார்.

"அவர் கம்பெனி பணத்தைக் கையாடியதாக குற்றம் சுமத்தப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதற்குப் பிறகு அவரைச் சந்திக்கவில்லை" என்றாள்.

"உனக்கு பாலகுமார் மாடிப்பாக்கத்திலிருக்கும் விபரம் தெரியாதா" என்றார்.

"நான் இந்த ஊரை வந்தடையும் போதுதான் கொலை விவகாரம் காரணமாக கைது செய்யப்பட்டிருந்தார்" என்று வேதனையோடு தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

நளினியைச் சமாதானப் படுத்திவிட்டு, "உன்னிடம் கடைசியாக ஒரு கேள்விமட்டும் கேட்டுவிட்டு விடை பெறுகிறேன்" என்றார் ராஜவேல்.

"சீக்கிரம் என்னிடம் கேள்வி கேட்பதை முடித்துக் கொள்ளுங்கள் எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்றாள் நளினி.

"மாடிப்பாக்கம் வருவதற்கு முன் நீ எங்கு தங்கியிருந்தாய்" என்றார் இன்ஸ்பெக்டர்.

அவருடைய இந்த கேள்வியைக் கேட்டு சிறிது தடுமாறிய நளினி, தன்னை ஒருவாறு சுதாரித்துக்கொண்டு, "நான் என்னுடைய ஒன்றுவிட்ட அத்தை வீட்டில் தங்கியிருந்தேன், திடீரென்று அவர் காலமாகிவிட்டதால் நான் வேலை தேடி இங்கு வரவேண்டிய நிலை வந்துவிட்டது" என்றாள்.

இன்ஸ்பெக்டர் தொடர்ந்து, "உன்னுடைய அத்தை வீடு எங்கிருக்கிறது" என்றார்.

"பூந்தமல்லியில் உள்ளது. ஆனால் அதை யாரோ விலைக்கு வாங்கிவிட்டார்கள்" என்று கூறினாள்.

அவள் எதையோ மறைக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட இன்ஸ்பெக்டர் அவளிடமும் பள்ளி தலைவியிடமும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்.

'இந்த வழக்கு விசித்திரமான குழப்பமான வழக்காக இருக்கும்போல் தெரிகிறது' என்று எண்ணிக்கொண்டே ஸ்டேஷனுக்குள் நுழைந்தார் ராஜவேல்.

COMICS PDF TIMES

## 3 விந்தை மனிதனின் விசித்திரத் தகவல்!

மேற்கொண்டு எந்த கோணத்தில் விசாரணையை ஆரம்பிக்கலாம் என்று எண்ணிய இன்ஸ்பெக்டர் ராஜ வேலுவுக்கு குழப்பம் ஒன்றுதான் எஞ்சியது. எடுத்த உடனேயே அவரால் ஒன்றுமே யூகிக்க முடியவில்லை. முதலில் மிகச் சுலபமாக முடிந்துவிடும் என்று அவர் எண்ணிய வழக்கு இவ்வளவு குழப்பத்தை அளிக்கும் என்று அவர் கருதவில்லை. பாலகுமார் சிறை சென்றபிறகு நளினியின் நிலைதான் அவருக்கு மன வருத்தத்தை அளித்தது. அத்தகைய இனிய பெண்மணிக்கு நேர்ந்த துன்பங்களும் வாழ்க்கைத் தோல்வி களும் சாதாரணமானவையல்லவே. மிகவும் கொடூர மானவை.

இவ்வாறு யோசனையில் இன்ஸ்பெக்டர் ராஜவேல் ஆழ்ந்திருந்தபோது யாரோ உள்ளே நுழையும் அரவம் கேட்டது. அதைத் தொடர்ந்து, "சார்!" என்று கான்ஸ் டபிளின் குரல் ஒலித்தது.

"யாரோ ஒரு மனிதன் உங்களைப் பார்க்க வேண்டு மென்று வெளியே காத்திருக்கிறான். அவனை வரச் சொல்லவா? அவன் தான் யாரென்று உங்களிடம் சொல்லிக் கொள்வதாகவும் தன்னிடம் எதுவும் கேட்க வேண்டா மென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டான்!" என்று கூறினார் அந்த கான்ஸ்டபிள்.

"நல்லது!" என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், "அவனை உள்ளே வரச் சொல்!" என்று கூறினார்.

சில வினாடிகளில் ஒரு மனிதன் ஒரு காலை நொண்டியபடி உள்ளே நுழைந்தான். அவன் கண்களைப் பார்த்தபொழுது இன்ஸ்பெக்டர் ராஜவேலுவுக்கு ஒரு ஆந்தையின் கண்களைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி தோன்றியது. அவனது ஆட்டுக்கடா மீசை அவன் முகத்திற்கே ஒரு பயங்கரத் தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தது.

தன் இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்துகொண்ட ராஜ வேல் அந்த மனிதனையும் அமரச் சொன்னார்.

"உங்களுடைய பெயர் என்ன?"

"மாயாண்டி!"

"என்னைப் பார்க்க வேண்டுமென்பதன் நோக்கம் என்ன?"

"அது ஒரு முக்கியமான விஷயமாகும். நேற்று மாலை நளினியைச் சந்திக்க நீங்கள் சென்றிருந்தீர்களல்லவா?"

"ஆமாம்! அதற்கென்ன இப்பொழுது?" என்று பொறுமையிழந்து கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

நேற்று அவள் சொன்னதையெல்லாம் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். அத்தனையும் பித்தலாட்டம். பெண் உருவில் அவதரித்த பேய் அவள். அவள் பேச்சையெல்லாம் நீங்கள் நம்பி விட்டீர்கள் என்று எண்ணுகிறேன்!"

"அவள் சொன்னதுபற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கு என்னுடைய எதிரியைப்பற்றி ஒவ்வொரு விஷயமும் தெரியும்!"

"அவள் உங்கள் எதிரியா? எந்த விதத்தில்?"

"சட்டத்தின் எதிராக நடப்பவர் எல்லோருக்கும் எதிரியாவார்!" என்று கரகரப்பான குரலில் கூறிய மாயாண்டி, பிறகு தெளிவான குரலில் பேச ஆரம்பித்தான். "இப்பொழுது உங்களிடம் நான் வந்திருக்கும் நோக்கமே ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்கென்றுதான். அது என்னவென்றால், நளினி பாலகுமார் சிறை சென்றதுபற்றி கவலைப்படவில்லை. ராஜசுந்தரம் கொலையுண்டதுபற்றியே கவலைப்பட்டாள்."

"அதற்குக் காரணம்?"

நளினி ராஜசுந்தரத்தின் முன்னால் காதலி. அதாவது, பாலகுமாரை அவள் திருமணம் செய்துகொண்டது சந்தர்ப்ப வசத்தால்தான். ஆனால் திருமணம் செய்துகொண்டபிறகும் அவள் ராஜசுந்தரத்தின்மீது எல்லையற்ற காதல் கொண்டிருந்தாள்."

ஒரு புன்னகை பூத்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "எப்படி உங்களுக்கு நளினியைத் தெரியும்?" என்று கேட்டார்.

"மாடிப்பாக்கம் வருவதற்கு முன்பு அவள் ராஜசுந்தரத்தோடு தங்கியிருந்தாள். அப்பொழுது அவள் வீட்டுப் பக்கத்தில் நான் குடியிருந்தேன். எனக்கும் ராஜசுந்தரத்திற்கும் நெருக்கமான பழக்க மேற்பட்டது. அப்படியும் அவன்தான், தான் பணம் கையாடியதாகச் சொல்லவே இல்லை. இத்தனை நாள்வரை அவன் உத்தமன் என்றே எண்ணி வந்தேன். அவன் என்னிடம் கூறியது என்னவென்றால் பணக்கையாடல் காரணமாக தனது நெருங்கிய நண்பனாகிய பாலகுமாரைக் கைது செய்து போலீஸார் வழக்கு தொடுத்திருப்பதாகவும் அவன் சிறைத் தண்டனை பெற்று விடுதலை ஆகி வரும்வரை தான்தான் நளினியைப் பராமரிக்கப் போவதாகவும் ராஜசுந்தரம் என்னிடம் கூறினான். அவனுக்கு தன் நண்பனுக்கு

உதவி செய்யும் மனப்பான்மையைக் கண்டு நானே ஆச்சரியம் அடைந்தேன்!''

"அவள் ராஜசுந்தரத்தைதான் விரும்பினுள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

"அவள் வீட்டில் வேலை பார்த்துவந்த வேலைக்காரி வாயம்மாள் என்னுடைய வீட்டிலும் வேலை பார்க்கிறுள். அவர்கள் இருவருடைய நடவடிக்கையும் அவர்கள் காதலை வெளிக்காட்டுவதாக இருந்தது. அது போக ஒருநாள் அந்த வேலைக்காரி ஒரு கனத்த மர்ம நாவல் புத்தகத்தை நளினி வீட்டில் பெருக்கும்பொழுது எடுத்திருக்கிறுள். அதை ஓரமாக வைக்க எண்ணி புத்தக அலமாரியை நெருங்கியிருக்கிறுள். அப்பொழுது நளினி சமையலறையில் ஏதோ வேலையாக இருந்திருக்கிறுள். அவள் புத்தக அலமாரியை நெருங்கும் பொழுது அந்த புத்தகம் கையிலிருந்து நழுவி கீழே விழுந்து விட்டிருக்கிறது. அதிலிருந்து ஒரு போட்டோ நழுவி வெளியே விழுந்தது. ஆவலால் அதை எடுத்துப் பார்த்த வேலைக்காரி யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டு அதை அப்படியே சட்டையினுள் சொருகிக் கொண்டிருக்கிறுள். அங்கு வந்த நளினி நடந்ததை அறியாதவளாய் மீண்டும் தன் வேலையை கவனிக்கப் போய்விட்டாள். நேராக என்னுடைய வீட்டிற்கு வேலைசெய்ய வந்தவள் குளியலறைப் பக்கம் நின்று திருட்டுத்தனமாக ஒரு போட்டோவை பார்த்துக் கொண்டிருந்ததை நான் பார்த்துவிட்டேன். அதில் ராஜசுந்தரமும் நளினியும் கைகோர்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். இரண்டுமூன்று வருடங்களுக்கு முன்பு அந்த போட்டோவை எடுத்திருக்க வேண்டுமென்று தோன்றியது எனக்கு. அந்த யூகத்தை ஊர்ஜிதப்படுத்துவதைப்போல பின்புறம் போட்டோ எடுக்கப்பட்ட தேதியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது எனக்கு அந்த போட்டோ இரண்டாண்டுகளுக்கு முன்பு எடுத்தது என்பதை அறிவித்தது. போதுமா, சாட்சி?'' என்று கேட்டு தன் பேச்சை நிறுத்தினுன் மாயாண்டி.

அவனையே ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "நீங்கள் எங்கே குடியிருந்தீர்கள்!'' என்று கேட்டார்.

"சென்னை அடையார் பகுதியில்!''

"என்ன வேலை பார்க்கிறீர்கள்?''

"ஒரு வேலையும் பார்க்கவில்லை. என்னுடைய தந்தையின் பூர்வீகச் சொத்து கொஞ்சம் பணமாக பாங்கில் இருக்கிறது தேவைப்பட்டபோது கொஞ்சம் பணம் எடுத்துக் கொள்கிறேன். மேலும் நான் இங்கு வந்தது வேலை செய்து கொண்

-டிருக்க இல்லை. உல்லாசமாகப் பொழுது போக்கத்தான். இன்னும் கொஞ்சநாளில் நான் சென்னைக்கே போய் விடுவேன்!"

"நளினிமேல் இவ்வளவு ஆத்திரமேற்படக் காரணம்?"

"கணவனுக்கே துரோகம் செய்யும் பெண்ணும் ஒரு பெண்ணா. அப்படிப்பட்ட பெண் பேய்க்கு சமமாவாள். உங்களுக்கு அவளை நம்ப வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யவே இங்கு வந்தேன். அழகிய பெண்களையே இந்த காலத்தில் நம்ப முடியாது!" என்று வெறுப்புடன் கூறிய மாயாண்டி தன் இருக்கைவிட்டு எழுந்தான்.

"அந்த போட்டோவை நான் பார்க்கலாமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"அது முடியாது! ஏனென்றால் அதை நான் மீண்டும் எடுத்த இடத்தில் வைக்க அந்த வேலைக்காரியிடம் சொல்லி விட்டேன். உங்களுக்குத் தேவைப்பட்டால் இன்னும் இரண்டு நாட்களில் அந்த போட்டோவை மீண்டும் எடுத்துத் தருகிறேன்!" என்று கூறிய மாயாண்டி அவரிடம் தன் விலாசத்தைக் கூறிவிட்டு விடை பெற்றான்.

## 4 இருட்டினில் ஆட்டம்!

இரவு சுமார் ஒருமணி இருக்கலாம். இருளின் ஆட்சி வலுத்திருந்தது. எலும்பையே மரத்துப் போகச் செய்யும் அளவுக்குப் பனிபயங்கரமாக வீசிக்கொண்டிருந்தது. யாரும் வெளியே தலைகாட்டக்கூட பயப்படும் அளவுக்கு குளிர் வீசிக்கொண்டிருந்தது. மாடிப்பாக்கம் காட்டு ரஸ்தாவில் பேய்களை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அதே சமயம் எங்கிருந்தோ வேகமாக ஒரு கார் அந்த ரஸ்தாவில் ஓடிவந்தது. அதனுள் இரு உருவங்கள் அமர்ந்திருந்தன. அவற்றை அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி கருப்பு முகமூடி அணிந்திருந்தன. கண்களுக்கு மட்டும் இரு துவாரங்கள் காணப்பட்டன.

கொஞ்ச தூரம் மின்னல் வேகத்தில் வந்த அந்த கார் திடீரென்று கிரீச்சிட்டு நின்றது. அதனுள் அமர்ந்திருந்த இரண்டு உருவங்கள் கீழே இறங்கின. ஒரு உருவம் மற்றொன்றின் கையைப் பற்றியது.

"நாம் நம் இருப்பிடத்திற்கு சீக்கிரம் போகலாம்! எனக்கு என்னவோ நாம் மாட்டிக்கொள்வோம் போலத் தோன்றுகிறது. நம் விளையாடல்களை தொடர வேண்டாம் என்று நினைக்கிறேன். இதோடு எல்லாவற்றிற்கும் ஒரு

முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும்!'' என்று கரகரத்த குரலில் கூறியது அந்த உருவம்.

சிறிது எரிச்சலடைந்த மற்ெறாரு உருவம், ''வாயை மூடு! இன்ெனாருமுறை இப்படிப் பேசினாயானால் நிச்சயம் நான் கடுமையாகக் கோபித்துக் கொள்வேன், உன்னை மீண்டும் எச்சரிக்கிறேன். நினைவிருக்கட்டும்!'' என்று கொடூரமான குரலில் எச்சரித்தது.

அதற்கு மேல் அந்த இரு உருவங்களுக்கும் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறவில்லை. அவை இரண்டும் சாலையின் இடது புறத்தில் வளர்ந்திருந்த மரங்களின் இடுக்கில் நுழைந்து இருண்ட தோப்பின் உட்புறம் நடக்க ஆரம்பித்தன. தனது கையில் வைத்திருந்த டார்ச்சை அடித்து வழிபார்த்தபடி வந்த இரண்டாவது உருவம், ''நீ இப்படி அனாவசியமாக பயந்துகொண்டிருக்காதே, நம்மை அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்கும் அளவிற்கு நமது அருமை போலீஸாருக்கு மூளை இருக்குமென்று நீ எண்ணுகிறாயா? அப்படி நீ எண்ணினால் உன்னைப்போல ஒரு வடிகட்டின முட்டாள் உலகில் இல்லை என்பதை நான் சத்தியம் செய்து சொல்லக்கூடத் தயார்!'' என்று இகழ்ச்சியாகக் கூறியது.

சில நிமிடங்களில் அவை இரண்டும் சிறிது தொலைவில் காணப்பட்ட பாழடைந்த பங்களாவிற்குள் சென்றது.

அந்தப் பங்களாவின் வாசலில் ஒரு கனத்தப் பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. இரண்டாவது கரிய உருவம் மற்றொன்றை நோக்கி, ''நீ நம் இருப்பிடத்திற்குப்போ! நான் நம் காரை மறைத்துவிட்டு வருகிறேன்!'' என்று கூறிவிட்டு இருளில் மறைந்தது.

இடிந்துபோன அவற்றைத் தாண்டி உள்ளே நுழைந்த அந்தக் கரிய உருவம் மெதுவாக மாளிகையின் பின்புறம் சென்றது. அங்கு ஒரு கம்பியில்லா ஜன்னல் விரியத்திறந்திருந்தது. அதில் ஏறி பூனைப்போல உள்ளே குதித்த அந்த உருவம் சந்தடி செய்யாமல் பின்புறம் கட்டப்பட்டிருந்த அடுக்களையை அடைந்தது. அந்த உருவத்தினால் தன் இதயத் துடிப்பையே தெளிவாகக் கேட்க முடிந்தது. எல்லையற்ற திகில் அடைந்திருந்த அந்த உருவத்தின் முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி அது அணிந்திருந்த கறுப்பு முகமூடியை நனைத்தன. சுற்றும் முற்றும் கலவரத்தோடு ஒருமுறை பார்த்துக்கொண்ட அந்த உருவம் தனது முகமூடியைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டது.

சமையல் செய்யும் மேடையைத் தடவி உணர்ந்து கொண்ட அந்த உருவம் தனது டார்ச்சை எடுத்து அடித்துப்

பார்த்தது. சிறிது நேரத்தில் அந்த உருவம் இருளில் மறைந்தது. இதற்குள் மற்றொரு முகமூடி மனிதனும் காரை மறைத்து வைத்துவிட்டு தங்களது இரகஸிய இருப்பிடத்தை அடைந்தான்.

அங்கே சில நிமிடங்கள்வரை மௌனம் நீடித்தது. பிறகு ஒரு முகமூடி மனிதன் பேச ஆரம்பித்தான். அவன் குரல் மிகவும் இனிமையாக இருந்தது. "நல்லது! இனி நம் அடுத்த திட்டம் என்ன என்பதை இப்பொழுதே யோசித்து முடிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு நமக்கு நேரம் கிடைக்காது. அவசரமாக நாம் எதுவும் திட்டம் போடப் போய் அது ஆபத்தில் முடிந்தாலும் முடியலாம். எனவே இப்பொழுது நாம் இருவரும் கலந்துபேசி ஒரு நல்ல முடிவுக்கு வரலாம்!" என்று கூறினான். பிறகு ஏதோ யோசித்தவனாகத் தன்னுடைய முகமூடியை கழற்றி கையில் வைத்துக் கொண் டான்.

அவனது அழகிலேயே சிறிதுநேரம் லயித்திருந்த மற்றொரு முகமூடி மனிதனைத் தன் சுயநினைவிற்கு கொண்டு வந்தது முதல் முகமூடியின் கனைப்புச் சத்தம்தான். தன் நினைவுக்கு வந்த அவன் தனது கர்ணகடூரமான குரலில் பேச ஆரம்பித்தான். பகலில் கேட்டாலே குலைநடுங்க வைக்கும் அந்தக் குரல் இரவில் படுபயங்கரமாக நான்கு சுவர்களிலும் மோதி எதிரொலித்தது. "என்னைக் கேட்டால் இப்பொழுது பணம்தான் முக்கியமாகத் தேவை என்று சொல்வேன்.

நாம் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருள்களும் பணமும் தீர்ந்து போய்விட்டன. இப்பொழுது உணவுக்கே மீதி இருப்பது பற்றாது. எனவே நாம் பணம் கிடைப்பதற்கு ஒரு நல்ல வழி செய்வோம்! இல்லாவிட்டால் நம் பாடு அவ்வளவுதான்!" என்று கூறினான்.

"அது சரி! நாம் எங்கிருந்து எப்படித்தான் பணத்தை எடுப்பது—அல்லது—என்ன?" என்று யோசனையோடு கேட் டான் முதல் மூகமூடி மனிதன்.

அதற்கு இரண்டாவது முகமூடி மனிதன், "நாளை காலை நீ 'பீனு' பாங்கிற்குச் சென்று அங்கு நீ கணக்கு ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்கு விதி முறைகளைக் கூறுமாறும் கேட்டு விட்டு அங்குள்ள அமைப்புகளை அறிந்துவா. அதன் பிறகு நான் ஒரு திட்டம் வைக்கிறேன். அதன் பிறகு நமக்கு பணக்கஷ்டம் என்பதே இருக்காது" என்று கூறினான்.

* * *

அன்று இரவு சுமார் ஏழு ஐம்பது மணி இருக்கும். "பீனு பாங்"கில் கூட்டமே இருக்கவில்லை. ஒரே ஒரு மனிதன் தான் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டிருந்தான்.

அதேசமயம் வாசலில் கார் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து இரண்டு மனிதர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்களில் ஒருவன் காலையில் வந்த முதல்மனிதனுவான். மற்றவன் கையில் ஒரு பெட்டி இருந்தது. பாங்கினுள் நுழைந்ததும் அவன் கையிலிருந்து பெட்டியை வாங்கிக் கொண்ட தாடிக்கார மனிதன் நேராக காஷியரிடம் சென்றுன். அதைத் தொடர்ந்து அடுத்த விஞடி தனது பாக்கெட்டிலிருந்து எடுத்த ஒரு உருண்டைப் பொருளை தரையில் மோதி உடைத்தான் அந்த மனிதன்;

சிறிதுநேரத்தில் புகை எங்கும் வியாபித்தது. அதைத் தொடர்ந்து அனைவரும் கண்ணைக் கசக்கிக் கொண்டு அங்கும் இங்கும் ஓடலாயினர். அதேசமயம் மற்றொரு மனிதன் தனது பாக்கெட்டிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து கையில் பிடித்தபடி, "யாரும் இருக்கும் இடத்தை விட்டு அசையாதீர்கள்! அசைந்தால் ஈவிரக்கமில்லாமல் கொல்லப்படுவீர்கள்!" என்று எச்சரித்தான்.

அந்த மனிதனின் கண்களில் விசித்திர கண்ணுடி ஒன்று இருந்தது. முழு கண்ணையும் மறைக்கக்கூடிய விதத்தில் அது செய்யப்பட்டிருந்தது. அதனுல் கண்ணீர்ப்புகை உள்ளே செல்ல நியாயமிருக்கவில்லை.

அதைத் தொடர்ந்து சிலநிமிடங்களில் சில இலட்சங்கள் இடம் மாறின: துப்பாக்கியால் அனைவரையும் மிரட்டியபடி இருவரும் வெளியே வந்தனர். அதேசமயம் இன்ஸ்பெக்டர் ராஜவேல் உள்ளே நுழைந்தார்.

செய்வதறியாது அனைவரும் திகைத்தபடி நின்றுகொண்டிருக்க தாடிக்கார மனிதன் இன்ஸ்பெக்டர் ராஜவேலிடம் அவசரமாக, "கண்ணீர்ப் புகைக்குண்டை வீசி திருட்டை நடத்துகிருர்கள் உள்ளே போங்கள் சீக்கிரம்!" என்று படபடத்தான்;

ஆனுல் தாடிக்காரனின் கையிலிருந்த பெட்டியை அவசரத்தில் பார்க்க மறந்துவிட்ட இன்ஸ்பெக்டர் ராஜவேல் உள்ளே ஓடினுர். அதேசமயம் இருவரும் வெளியே வந்து தயாராக காத்துக்கொண்டிருந்த காரில் வாயு வேகம் மனோவேகமாக ஓட்டிக்கொண்டு பறக்க ஆரம்பித்தனர்.

"எப்படி நமது கொள்ளை!" என்று இறுமாப்போடு கேட்ட மற்றொரு மனிதன், "எப்பொழும் என் கணக்கு தப்பாவதில்லை!" என்று பெருமையோடு கூறினுன்.

இன்ஸ்பெக்டர் ராஜவேல் வேகமாக பாங்கினுள் ஓடினர். காஷியர் இருக்கும் கவுன்டர் முன்பு ஒரு ஆசாமி விழுந்து கிடந்தான். அவன் டிப்டாப்பாக உடை உடுத்தியிருந்தான். அவனைப் பாய்ந்து 'பிடித்துக்கொண்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். அவர் கண்கள் கண்ணீர்ப்புகை காரணமாக எரிந்தன. அதனால் அவரால் சரிவரப் பார்க்கக் கூட இயலவில்லை. ஆனால் கையில் அகப்பட்ட அந்த மனிதனை உடும்புப் பிடியில் பிடித்துக்கொண்டார்.

இறுதியில் ஒரு பாங்க் கொள்ளையைத் தடுத்துவிட்டோம் என்று எண்ணியபோது அவருக்குப் பெருமையாக இருந்தது. அந்த ஆள் திமிறிக் கொண்டிருந்தான். ஆனால் அவர் விடும் வழியாக இருக்கவில்லை.

"நீ யார்! எதற்காக இங்கே வந்தாய்?" என்று கர்ஜித்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

ஆனால் அங்கே ஓடிவந்த பியூன் அவசரமான குரல், "இன்ஸ்பெக்டர் சார்! அவர் நீங்கள் எண்ணுவதைப்போல திருடரல்ல. அவர்கள் தப்பிவிட்டனர், இவர்தான் காஷியர். அவரை வெளியே தள்ளி தாக்கிவிட்டு துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவர்கள் கொள்ளையடித்துச் சென்று விட்டனர்!" என்று விளக்கினன்.

"அப்பொழுது பாங்கின் வெளியே இரண்டு மனிதர்கள், "உள்ளே கொள்ளை நடந்துகொண்டிருக்கிறது! சீக்கிரம் போங்கள்!" என்று கூறினர்களே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

"அவர்கள் இருவரும்தான் இந்த பாங்க் கொள்ளையையே நடத்தியவர்கள் ஒருவன் தாடிக்காரன்!" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் ராஜவேலின் கையிலிருந்து விடுபட்ட காஷியருக்கு முதலுதவி செய்வதற்கு விரைந்தான்.

ஆனல் இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு இந்தக் கொள்ளையைத் தடுக்க முடியாதது பெருத்த அவமானமாகத் தோன்றியது. ஆனல் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் வேகமாக காஷியர் விழுந்துகிடந்த இடத்திற்கு ஓடினர். ஆனல் அங்கு ஒரு தடயமும் அவருக்குக் கிடைக்கவில்லை.

ஆயாசத்துடன் வெளியே வந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் அந்த பாங்கிற்கு நல்ல பாதுகாப்பு போட ஏற்பாடு செய்தார். அந்த தாடிக்கார மர்ம மனிதன் யாராக இருக்கக் கூடுமென்று அவருக்கு விளங்கவில்லை.

சிறந்த கேடிகளின் போட்டோக்களை எடுத்துப் பார்த்தார். ஆனால் எந்த மனிதனும் அந்த தாடிக்காரனுக்கு பொருத்த முடையவனாகத் தோன்றவில்லை. ஒரே ஒரு போட்டோவை இறுதியில் எடுத்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் அதனை ஒப்பிட்டுப் பார்த்தார். அதில் கொஞ்சம் ஒற்றுமை இருப்பதைப் போலத் தோன்றியது. தனது மனத்திரையில் இருக்கும் தாடிக்காரனையும் போட்டோவில் காணப்பட்ட மனிதனையும் ஒப்பிட்டுப் பார்த்ததன் விளைவாக அவருக்கு அந்த தாடிக்காரன் யாரென்று விளங்கிவிட்டது. அவரது வாய் அவரை அறியாமலேயே அவனது பெயரை மெல்ல உச்சரித்தது.

"இப்படியே—இந்தக் கோணத்திலேயே பார்த்தால் குற்றவாளி இவனாகத்தான் இருக்கும்போலத் தோன்றுகிறது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. அதாவது இந்த பயங்கரமான குற்றவாளி மாடிப்பாக்கத்தை விட்டு வேறு இடம் எதற்கும் செல்லவில்லை. அதற்குக் காரணம் அவன் கொள்ளைத் திட்டமாகத்தான் இருக்கும். அதையும் அவன் வெற்றிகரமாக நடத்திவிட்டான். இனிமேல் அவன் வேறு இடங்களுக்கு ஓடத் தயாராக இருப்பான். அப்பொழுது விடக் கூடாது! அவனைப்பற்றி எதுவும் சொல்லக்கூட ஆட்களில்லை!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்ட இன்ஸ்பெக்டர் ராஜவேலின் மூளையில் பளிசென்று ஒரு யோசனை தோன்றியது.

அன்று காலை அவர் மாயாண்டி கொடுத்த விலாசத்தின்படி அவன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்.

சுமார் ஐந்து நிமிடங்கள் கழித்து யாரோ நடந்துவரும் அரவம் அவருக்குக் கேட்டது. அதைத் தொடர்ந்து தாழ்ப்பாள் நீக்கும் ஒலியும் கதவு திறக்கப்படும் கிரீச் ஒலியும் எழுந்தன. கதவைத் திறந்த பெண்மணிக்கு இருபத்திஐந்து வயது இருக்கும். ஒல்லியாக நெட்டையாகக் காணப்பட்டாள்.

'நீங்கள் யார்?' என்று கேட்கும் பாவனையில் அவரைப் பார்த்தாள் அந்தப் பெண்.

"நான் உங்கள் ஐயாவுக்கு ரொம்பவும் வேண்டியவன். அவர் இருக்கிறாரா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

'இல்லை' என்று தலையாட்டினாள் அந்தப் பெண்.

"உன் பெயர் என்ன அம்மா?" என்று பரிவோடு விசாரித்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"காயத்திரி!"

"இந்த வீட்டில் ஐயாவோடு வேறு யாரும் தங்குவதில்லையா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"இல்லை! எனக்கே சில சமயங்களில் இவர் ஏன் இன்னும் திருமணமே செய்துக் கொள்ளவில்லை என்று தோன்றும் அவருடைய ரசனை அப்படிப்பட்டது!" என்று மெல்லிய குரலில் கூறிய காயத்திரி என்ற அந்த வேலைக்காரி மேற்கொண்டு எதையுமே பேசவிரும்பாதவள் போல், "நல்லது, ஐயா? நீங்கள் போய் வாருங்கள். அவர் வந்தால் உங்கள் நண்பர் தேடிவிட்டுப் போனார் என்று சொல்கிறேன். எனக்கு முக்கியமான அலுவல்கள் இருக்கின்றன!" என்று கூறிவிட்டு கதவை சாத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

அவளுடைய அந்த திடீர்ச் செய்கை இன்ஸ்பெக்டர் ராஜவேலை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆனால் மேற்கொண்டு அவளிடம் பேசிப் பயனில்லை என்று எண்ணிக்கொண்ட ராஜவேல் மாயாண்டியிடம் மற்றதைப் பேசிக்கொள்ளலாம் என்ற முடிவோடு வெளியே நடந்தார். அவருக்கு இந்த வழக்கு குழப்பத்திற்குமேல் குழப்பத்தைதான் அளித்துவந்ததே தவிர தெளிவை அளிக்கவில்லை.

## 6 பத்திரிகைச் செய்தி!

அன்று கமிஷனர் அலுவலகத்துள் நுழைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேலைப் பார்த்ததும், கமிஷனர் ராஜப்பா அவரிடம் அன்றை பத்திரிகையைக் கொடுத்து படிக்குமாறு கூறினார், அதிலுள்ள செய்தி இதுதான்,

"பீனு பாங்கில்"

படுபயங்கரக் கொலை!

அதிகாரி ஏமாந்தார்!

ஏப்ரல் 20,

மாடிப்பாக்கம்,

நேற்று இரவு சுமார் ஏழே முக்கால் மணிக்கு மாடிப்பாக்கம் வடக்கில் உள்ள "பீனு பாங்க்" என்னும் பாங்கில் பயங்கரமான கொள்ளை நடைபெற்றிருக்கிறது. அந்த சமயத்தில் உள்ளே நுழைந்த அதிகாரியை ஏமாற்றி கடுக்காய் கொடுத்துவிட்டு அவர்கள் பறந்துவிட்டனர். இதன் விவரம் பின்வருமாறு :

"பீனு பாங்க"

மாடிப்பாக்கத்தின் வடக்கில் நிறுவப்பட்டுள்ள "பீஞ் பாங்க்" என்னும் பாங்கு நேற்று முழுவதுமே ரொம்ப சுறுசுறுப்பாக இயங்கி வந்திருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டது அது. அரசாங்கத்தைச் சேர்ந்த பாங்க் அது. அதில் கணக்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காது. அது நிறுவப்பட்டிருக்கும் இடமே இருட்டான ஒரு தோப்புப் பகுதிதான். அருகில் தான் சவுக்குத் தோப்பு. அதனால் கூட்டம் ஆறரை மணிக்கே குறைந்துவிடும்.

**மர்ம மனிதர்கள்:**

இப்படிப்பட்ட பாங்கில் சுமார் ஏழரை மணிக்கு இரண்டு மர்ம மனிதர்கள் நுழைந்தார்கள். ஒருவன் தாடி வைத்திருந்தான். பார்ப்பதற்கு வடக்கத்தியனைப் போலக் காணப்பட்டான். மிகவும் அழகிய சரீரம் படைத்தவனாகக் காணப்பட்டான். மற்றொரு மனிதனின் முகத்தின் வலது கன்னப் பகுதியில் ஒரு நீண்ட வெட்டுக் காயத் தழும்பு காணப்பட்டது. அவன் பார்ப்பதற்கு ஒரு முரட்டு மனிதனைப் போலக் காணப்பட்டான். அவன் கையில் ஒரு பெட்டி காணப்பட்டது.

**பயங்கரக் கொள்ளை:**

அந்த தாடிக்கார மனிதன் பாங்கினுள் நுழைந்ததும் மற்றவன் கையிலிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டு முன்னே காஷியரிடம் சென்றிருக்கிறான். அவன் ஏதோ பணம் போடத்தான் செல்கிறான் என்று எண்ணிய மற்ற ஊழியர்கள் அவரவர் வேலையில் ஈடுபட்டனர்.

மற்றொரு மனிதன் முன்னேயே நின்றுவிட்டான். அதே சமயம் காஷியர் கவுண்டர் அருகே போய் நின்று கொண்ட தாடிக்காரன் தன் கையிலிருந்த ஒரு கண்ணீர்ப் புகைக் குண்டை எடுத்து வீசியிருக்கிறான். அவர்கள் இருவரும் கண்ணை முழுமையாக மறைக்கும் ஒரு விசித்திரக் கண்ணாடி அணிந்திருந்தனர். எனவே அவரால் கண்ணீர்ப்புகையின் கொடுமையை அறிய முடியவில்லை. தாடிக்காரன் காஷியரின் முகத்தில் ஒரு குத்துவிட்டு அவரைக் கீழே தள்ளி விட்டான். அதே சமயம் மற்றொரு மனிதன் தனது பாக்கெட்டிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து எல்லோரையும் மிரட்டிக் கொண்டிருந்திருக்கிறான். அந்த வேளையில் தாடிக்கார மனிதன் எல்லா பணத்தையும் எடுத்து அடுக்கிக்கொண்டிருந்திருக்கிறான். அளவு சுமார் ஐந்து லட்சம்.

கடுங்குளிர் காரணமாக ஒரு காப்பி மட்டும் குடிக்கச் சென்ற காவலாளி இருந்திருந்தால் ரொம்பவும் சௌகரியமாக இருந்திருக்கும். வழக்கமாக அந்தக் காவலாளி அப்படி தினமும் காப்பி குடிக்க இரவு ஏழரை மணிக்கு செல்வது வழக்கம்.

## அதிகாரி ஏமாற்றம்:

அந்தச் சமயம் பிரபல போலீஸ் அதிகாரி இன்ஸ்பெக்டர் ராஜவேல் உள்ளே நுழைந்திருக்கிறார். அதே சமயம் திருட்டை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு கொள்ளையர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அவர்கள் கொள்ளையர்கள் என்பதை உணராத அதிகாரி அவர்களிடமே என்ன நடந்திருக்கிறதென்று கேட்டிருக்கிறார். அவர்கள் உள்ளே கொள்ளை நடக்கிறதென்று அவரை உள்ளே அனுப்பிவிட்டு தப்பிவிட்டனர்.

பாவம் அதிகாரி! காஷியரைப் பிடித்து கொள்ளைக்காரன் என்று உலுக்கிக் கொண்டிருந்திருக்கிறார்.

இப்படிப்பட்ட அதிகாரிகள் எப்படித்தான் பெயரும் புகழும் அடைந்தார்களோ தெரியவில்லை. மேலும் இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டிருப்பதால் நம் போலீஸ் இலாகாவுக்குத்தான் என்ன லாபம் என்று தெரியவில்லை. விரைவில் அந்த ஏமாளி அதிகாரியை நீக்கிவிட்டு புதிய புத்திசாலி அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று தினத்-தண்டோரா பத்திரிகையும் அதன் மூலமாக நாட்டு மக்களும் கேட்டுக் கொள்கிறார்கள்!

அந்த செய்தியைப் படித்தவுடன் இன்ஸ்பெக்டர் ராஜவேலின் மனம் வேதனையடைந்தது. தனது திறமையைக் காண்பிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் தான் அதை நழுவவிட்டதை எண்ணியதும் அவருக்கு மிகவும் மனவேதனை ஏற்பட்டது.

அவரையே கூர்ந்து நோக்கிய கமிஷனர் ராஜப்பா, "பார்த்தீர்களா! உங்களைப்போல ஒரு திறமையான அதிகாரிக்கு எப்படிப்பட்ட பெயர் கிடைத்திருக்கிறதென்று. அதுதான் உலகம். நீங்கள் இனிமேல் ரொம்பவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். நமது தோழனை அவ்வளவு

சாமானியமானவனுக நாம் கணக்கிட்டிருக்கக் கூடாது!'' என்று புன்னகையுடன் கூறினுர்.

''நான் மேற்கொண்டு விசாரணையில் ஈடுபடுகிறேன். எனக்கு இவ்வளவு விசாரித்தும் எவ்விதத் தடயமும் கிடைக்காததுதான் வருத்தத்தை அளிக்கிறது. ஆனுலும் மேலும் நாம் கடக்க நிறைய படிகள் உள்ளன என்பது எனக்கு நன்கு தெரியும்!'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேலின் முகத்தில் பழைய உற்சாகக்களை படர்ந்தது.

''நல்லது, இன்ஸ்பெக்டர் சார்! உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெறுவீர்களாக!'' என்று புன்சிரிப்போடு கூறினுர் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

''அப்படியானுல் நான் வருகிறேன். எனக்கு இன்னும் யோசிக்க பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வைத்துப் புதிய கோணத்தில் என் விசாரணையை ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகிறேன்!'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், கமிஷனர் ராஜப்பாவிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பி தன் ஜாகைக்கு சென்றுர்.

## 7. படுகொலையுண்ட பாவை!

இன்ஸ்பெக்டர் ராஜவேல் வீட்டிற்குள் நுழைந்தபோது அவருக்கு ஒரு ஆச்சர்யம் காத்துக் கொண்டிருந்தது. அங்கே நளினி அமர்ந்திருந்தாள்.

அவளருகில் சென்ற இன்ஸ்பெக்டர், ''நளினி நீயா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார். அவள் தன்னைத் தேடி வரக் காரணம் என்னவென்று அவருக்குப் புரியவில்லை.

''ஆமாம்!'' என்று மெல்லிய குரலில் முனகிய நளினி, ''என்னை ஒரு படு பயங்கரமான ஆபத்து சூழ்ந்திருக்கிறது. நீங்கள்தான என்னைக் காப்பாற்ற வேண்டும்!' என்று கலவரமாகக் கூறினுள். அவளுடைய அகலமான விழிகள் சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டன. அவள் உடல் ஒருமுறை நடுங்கியது.

"அது என்ன ஆபத்து, நளினி! நீ என் தங்கை போல. ஆகவே எதையும் மறைக்காமல் நீ என்னிடம் சொல்லலாம்!" என்று பரிவோடு விசாரித்தார்.

மீண்டும் ஒருமுறை தன்னைச் சுற்றி ஒரு பயந்த பார்வையை ஓட்டிய நளினி, "எனக்கு என்னவோ நான் கொலை செய்யப்பட்டு விடுவேன் போலத் தோன்றுகிறது! அந்த ஆபத்திலிருந்துதான் நீங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும், இன்ஸ்பெக்டர் சார்!" என்று கூறினாள்.

"உனக்கு ஏன் அப்படித் தோன்றுகிறது, அம்மா? உனக்கு யாராவது எதிரிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"இல்லை! ஆனால் என் கணவராலேயே எனக்கு மரணம் ஏற்படும் போலத் தோன்றுகிறது, சார்!" என்று கூறும் பொழுதே நளினியின் கண்கள் கலங்கின.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தனது இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். அவருக்கு ஒரு நல்ல தடயம் கிடைக்கும் போலத் தோன்றியது.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இன்று காலை எனக்கு வந்தது ஒரு டெலிபோன். அது மிகப் பயங்கரமானதாக இருந்தது—" என்று தன் உடலை உலுக்கிக் கொண்டாள் நளினி.

"அது யார் செய்தது?"

"அது என் கணவருடைய குரலைப் போலவே ஒலித்தது. அதனால் தான் எனக்கு அந்தச் சந்தேகம் எழுந்தது, இன்ஸ்பெக்டர் சார்!" என்று பயத்துடன் கூறினாள் நளினி.

"அந்தப் போன் ஆசாமி உன்னிடம் என்ன கூறினான் என்பதை எனக்குத் தெளிவாகக் கூறு, அம்மா!" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"இன்ஸ்பெக்டர் எனக்கு என்னவோ இங்கு கூறுவதற்கு பயமாக இருக்கிறது. இன்று மாலை 5.30 மணிக்கு என் வீட்

டிற்கு வாருங்கள் விபரமாகக் கூறுகிறேன்" என்று சொல்லி விட்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டாள் நளினி.

அன்று மாலை வரை நிலை கொள்ளாமல் தவித்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் ஐந்தரை மணியானதும் அவசரமாகப் புறப்பட்டு நளினி வீட்டிற்கு விரைந்தார். பத்து நிமிடங்களில் அவள் வீட்டை அடைந்து விட்டார்.

அந்தச் சிறியவீடு அமைதியாகக் காணப்பட்டது. மனித அரவமே இருக்கவில்லை. அந்த வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம் போடப்பட்டிருந்தது. வெளியே நின்று கொண்ட இன்ஸ்பெக்டர் ராஜவேல் கதவை மெதுவாகத் தட்டினார். ஆனால் யாரும் கதவை வந்து திறக்கவில்லை. அதனால் தன் கையைக் கதவின் மீது வைத்து அழுத்தினார். உடனே கதவு திறந்து கொண்டது.

அப்படிக் கதவு திறந்து கொண்டது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவ்வளவு பயப்படும் பெண் ஒருத்தி கதவைத் திறந்து வைத்துக் கொண்டா இருப்பாள் என்பது அவருக்கு புரியாத புதிராக இருந்தது. உள்ளே நுழையலாமா வேண்டாமா என்று அவருக்குத் தயக்கமாக இருந்தது. ஒருகால் அவள் கதவைத் தாளிட மறந்திருக்கலாம். எனவே மீண்டும் ஒருமுறை தட்டலாம் என்று பலமாக ஒரு முறை திறந்திருந்த கதவின் மீது தட்டினார்.

ஆனால் யாருமே வரவில்லை. வரும் அறிகுறியும் தென்படவில்லை. இன்ஸ்பெக்டர் ராஜவேலின் மனதில் இலேசான சந்தேகம் எழுந்தது. ஒருகால் நளினி பயந்ததற்கு ஏற்றாற் போல் எதுவும் நடைபெற்றிருக்கிறதா என்று அவருக்குத் தோன்றியது.

இதை எண்ணி அவர் மனதில் கலவரம் மூண்டது. வேகமாக வீட்டினுள் ஓடினார். முன் ஹாலில் யாருமே இருக்கவில்லை. அடுத்தாற்ப் போல் இருந்த படுக்கையறையிலும் யாருமே காணப்படவில்லை.

எல்லையற்ற ஆச்சர்யம் அடைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் வேகமாக சமையலறையை அடைந்தார். அங்கு நளினி அடுப்பு மேடைக்கு அருகில், இன்ஸ்பெக்டருக்கு முதுகு காட்டிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

"நளினி உன்னைக் கூப்பிட்டேனே கேட்கவில்லை?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தார் ராஜவேல்.

ஆனால் நளினி மும்முரமாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அடுப்பில் ஏதோ காணப்பட்டது. ஆனல் அடுப்பு எரியவில்லை. நளினியின் கையில் ஒரு கத்தி காணப்பட்டது. அது காய்கறி நறுக்கப் பயன்படுத்தும் கத்தியாகும்.

அளவற்ற ஆச்சர்யம் அடைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "நளினி! நான் வந்திருக்கிறேன்! வாசல் கதவைத் திறந்து போட்டு வைத்திருக்கிருய். யாராவது உள்ளே நுழைந்தால்—?" என்று கேட்ட இன்ஸ்பெக்டர் அப்படியும் நளினி திரும்பாததைக் கண்டு பெரு வியப்புற்ருர்.

"நான் அழைப்பது காதில் விழவில்லையா?" என்று கேட்டபடி சமையலறையினுள் காலடி எடுத்து வைத்த இன்ஸ்பெக்டர் ராஜவேலின் காலில் ஏதோ பிசுபிசுவென்று ஒட்டியது.

சட்டென்று குனிந்து பார்த்தார். சிகப்பாக ஏதோ அங்கு ஊற்றியிருந்தது. அளவு கடந்த பரபரப்பிற்கு ஆளான இன்ஸ்பெக்டர் ராஜவேல் வேகமாக ஓடி நளினியின் தோளில் கையை வைத்துத் திருப்பினர். நளினியின் உயிரற்ற சடலம் கீழே விழுந்தது. நளினியின் நெஞ்சில் ஒரு துப்பாக்கி குண்டு பாய்ந்திருந்தது.

## 8 புதிய தடயம்!

நளினி கொலை செய்யப்பட்டது மிகவும் பயங்கரமான விஷயமாகத் தோன்றியது இன்ஸ்பெக்டர் ராஜவேலுவுக்கு. சில நிமிடங்களில் போலீஸ் வீரர்களால் அந்த வீடு நிரம்பி வழிந்தது.

சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிருள் நளினி என்பதை போலீஸ் வைத்தியர் தெளிவாகக் கூறினர். ரேகை ஒன்றும் அங்குக் காணப்

படவில்லை. இது மிகப்பெரிய ஏமாற்றமாகத் தென்பட்டது. மற்றும் போராட்டம் நடந்ததற்கான அறிகுறியும் தென்படவில்லை.

சில நிமிடங்களில் பிணம் அப்புறப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து வீட்டிற்கும் காவல் வைக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு தன்னால் எந்தவித உண்மையையும் நளினியிடமிருந்து அறிய முடியவில்லையே என்று வருத்தமாக இருந்தது. ஆனால் அவரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

கமிஷனர் ராஜப்பா மீண்டும் அவரிடம் சுறுசுறுப்பாக நடந்துகொள்ளும்படி அறிவுரை கூறினார். அதுவேறு ராஜவேலுக்கு மனச் சங்கடத்தை அளித்தது. இதுவரை வெற்றிப் பாதையிலேயே நடைபோட்டுவந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் போன்றவர்களுக்கு இது ஒரு பயங்கரமான சவுக்கடி போன்றே இருந்தது.

எதையுமே நிர்ணயிக்க முடியாத நிலையில் குழம்பினார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். அன்று மாலை ஒரு மனமாறுதலுக்காக கடைத்தெரு பக்கம் நடக்க ஆரம்பித்தார். ஆனால் அதில்கூட அவருக்கு உற்சாகம் குன்றிவிட்டது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அப்படியே திரும்பிவிட வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டார்.

அப்பொழுது கொஞ்சதூரத்தில் தெரிந்த ஒரு கடையின்பால் அவருடைய கவனம் சென்றது. அதில் பல்வேறு பொருட்கள் வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. அதில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு விசித்திரப் பொருள் அவர் கவனத்தைக் கவர்ந்தது.

அது ஒரு கண்ணாடி. கண்கள் முழுவதையும் மறைக்கும் அளவிற்கு அந்தக் கண்ணாடி செய்யப்பட்டிருந்தது. அதற்கு இரண்டு ரப்பர் வால்கள் தொங்கிக் கொண்டிருந்தன. மொத்தத்தில் கண்களில் மாட்டிக்கொள்ள சௌகரியமாக செய்யப்பட்டிருந்தது. உடனே வேகமாக அந்தக் கடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். அவர் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்தது.

கடையினுள் வேகமாக நுழைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் நேராக கடைக்காரரிடம் சென்றார். உள்ளேயும் பல கண்ணாடிகள் அதுபோல் இருந்தன.

"அந்தக் கண்ணுடி எதற்குப் பயன்படுத்துவது?" என்று கேட்டார் ராஜவேல்.

"அது சிறு குழந்தைகளுக்கான விளையாட்டு சாமான் ஆகும். அதைக் கண்களில் போட்டுக்கொண்டு விண்வெளி வீரன் என்று கூறிச் சந்தோஷப்படுவார்கள் சிறுவர்கள். எங்களுக்கு விற்பனையும் அதிகம். நீங்களும் உங்கள் குழந்தைக்கு ஒன்று வாங்கிப் போங்கள் ஐயா! உங்கள் குழந்தை ரொம்பவும் சந்தோஷப்படும்!" என்று சிரித்தபடி கூறினார் அந்தக் கடைக்காரரர்.

அவரைப் பார்த்து புன்னகை புரிந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "எனக்கு குழந்தைகளே கிடையாது! இன்று—இல்லை—நேற்று யாராவது உங்களிடம் இந்தக் கண்ணுடியை வாங்கிப் போனுர்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஓ! மூன்று பேர் வாங்கிப் போனுர்கள்! நீங்கள் யாரைக் கேட்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை!" என்று கூறினார் கடைக்காரரர்.

"இல்லை ஒரு தாடிக்காரனே அல்லது ஒரு மனிதன் முகத்தில் வெட்டுக்காயத் தழும்போடு வந்து வாங்கிப் போனுனு? நன்ருக நினைவுபடுத்திச் சொல்லுங்கள்!" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

சிறிதுநேரம் யோசித்த கடைக்காரரர், "எனக்கு நினைவில்லை! இருங்கள் எங்கள் கடைப்பையனைக் கேட்டுச் சொல்கிறேன்! என்று கூறிவிட்டு தனது கடைப்பயனை அழைத்தார்.

சிறிதுநேரம் கழித்து அங்கு ஓடிவந்த பதினேந்து வயதுச் சிறுவனை அதே கேள்வியைக் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"தாடிக்காரனு?" என்று கேட்டபடி கொஞ்ச நேரம் யோசித்த அந்தப் பையன், "ஆ! நினைவுக்கு வருகிறது! ஒரு அழகான வடநாட்டு ஆளைப்போல காட்சியளித்தான். எனக்கு எப்படித் தெரியுமென்ருல் என் வீட்டு அருகில் அந்த ஆள் அடிக்கடி நடமாடுவதைப் பார்த்திருக்கிறேன்!" என்று உற்சாகமாகக் கூறினுன் அந்தப் பையன்,

"உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"வடக்குப் பகுதியில் — "பீஞ பாங்க்" எதிரில் உள்ள சந்தில்! நேற்று காலேகூட அந்த மனிதன் "பீஞ பாங்"கிற்கு வந்தான்!" என்று திட்டவட்டமாகக் கூறினுன் அந்தப் பையன்.

ஒரு நல்ல சாட்சி கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "ஆமாம்! அவன் யாரென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது! ஆனுல் புதிய மனிதன் என்று மட்டும் தெரியும்!"

"அவனுடைய இருப்பிடம் உனக்குத் தெரியுமா?"

"தெரியாது!"

"சரி உன் விலாசத்தைக் கொடு சமயம் வரும்பொழுது உன்னுடன் தொடர்பு கொள்ளுகிறேன்!" என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேல் அதனுடைய விலாசத்தை எழுதிக் கொண்டார்.

அவர்கள் இருவருக்கும் இடையே நடைபெற்ற சம்பாஷணையையே அதிசயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அந்தக் கடைக்கார ஆள். அவன் அருகில் வந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "அந்த தாடிக்கார ஆசாமி ஒரு பெரிய கொள்ளேக்காரன் அவன் வந்தால் அவனே எப்படியாவது பிடித்துக்கொடுத்தால் உனக்கு நல்ல சன்மானம் கிடைக்கும், எனவே ஜாக்கிரதையாகத் தகவல் கொடு!" என்று கூறிவிட்டு கடைக்கு வெளியே வந்தார்.

## 9. நண்பனே உலே!

நடுநிசி சுமார் ஒன்றேகால் மணி இருக்கும். அந்த இருட்டு வேளேயில் மாடிப்பாக்கம் காட்டு ரஸ்தாவிலிருந்த பாழடைந்த பங்களாவில் இருந்த பாதாள ரகசிய அறையில் இரண்டு கரிய உருவங்கள் பேசிக் கொண்டிருந்தன. அவையின் பேச்சில் பேராசையும் இரக்கமின்மையும் தொனித்தது.

"நாம் எப்படியோ காரியத்தைச் சாதித்து விட்டோம்! இனிமேல் எப்படி ஓடிப் போவது? இதுதான் பெரிய பிரச்னையாக இருக்கும் போல இருக்கிறதே!" என்று சங்கடத்தோடு முனகியது ஒரு உருவம்.

"இவ்வளவு செயல்களையும் நாம் எவ்வளவு பிரமாதமாக முடித்து விட்டோம்! அதுபோல நாம் ஓடிப்போவது பற்றி சிந்திப்போம். ஆற அமறதான் அதுபற்றி யோசிக்க வேண்டும்! பணம் வேறு இருக்கிறது. ஏன் நாம் அவசரப்பட வேண்டும்?" என்று கேட்டது மற்ருெரு உருவம்.

"இல்லை நாம் அவசரமாக ஓடிப்போய் விடவேண்டும். இல்லாவிட்டால் போலீஸார் நம்மைச் சுலபத்தில் பிடித்து விடுவார்கள்!" என்று அவசரமாகக் கூறியது முதல் கரிய உருவம். அதன் குரல் நடுங்கியது.

"இல்லை!" என்று மறுத்த இரண்டாவது உருவம், "நாம் இப்படி மறைந்திருக்கும் வேலையில் நம்மை வெளியே ரொம்பத் தீவிரமாகத் தேடுவார்கள். அப்பொழுது நாம் வெளியே தலை காட்டிஞல் அவ்வளவுதான்!" என்று கூறியது.

சிறிது நேரம்வரை யோசித்த முதல் உருவம், "நல்லது! நாம் இனி பதுங்க வேண்டியதுதான்!" என்று கூறிவிட்டு கடகடவென்று சிரித்தது.

"ஏன் இப்படி பேய் போலச் சிரிக்கிருய்?" என்று எரிச்சலோடு கேட்டது இரண்டாவது உருவம்.

"என்னுடைய பழைய வாழ்க்கையையும் நான் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தேன் சிரிப்பு வந்து விட்டது. முன்ஞல் நான் வாழ்ந்த வாழ்க்கை இரக்கம் மிகுந்தது. இப்பொழுது கடுகளவு கூட என்னிடம் இரக்கம் என்பதே இல்லை. இவைக்கெல்லாம் காரணம் இந்த பயங்கரமான உலகம்தான். அது என்னை ஏமாற்றியது. நானும் இப்பொழுது அதை ஏமாற்றுகிறேன்!" என்று கூறுவிட்டு பயங்கரமாகச் சிரித்தது அந்தக் கரிய உருவம்.

அந்த உருவத்தையே இரக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்த மற்ருெரு உருவம் மெல்லத் தன் இருக்கையை விட்டு

எழுந்தது. பிறகு குறுக்கும் நெடுக்குமாக உலாவியது. சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. அதை இன்னும் நீடிக்க விட மனமில்லாத இரண்டாவது மனிதன், "உன் வாழ்க்கை ரொம்பவும் பரிதாபகரமானதுதான்! ஆனால் அதற்காக உலகத்தைப் பழித்துப் பயனில்லை. நம்முடைய தலையெழுத்துப் படிதான் எல்லாம் நடைபெறுகிறது!" என்று சமாதானமாகக் கூறினான்.

"இல்லை!" என்று கூச்சலிட்ட முதல் உருவம், "நீ இந்த இடத்தில்தான் தப்பு செய்கிறாய்! என்னுடைய ஆருயிர் நண்பன் எப்பொழுது என்னை ஏமாற்றத் துணிந்தானோ அப்பொழுதே இந்த உலகம் ஒரு பண ஆசை பிடித்த சத்துரு என்பது எனக்குப் புரிந்து விட்டது. அவனை அப்படிப் போராசைக் காரனாக்கியது எது? உலகம்தானே? அதனால் இந்த உலகம்தான் என்னை இப்படி பயங்கர வாழ்க்கை வாழச் செய்கிறது!" என்று கூறியது.

அதற்கு மேல் அந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க விரும்பாத இரண்டாவது உருவம், நல்லது! இப்பொழுது நாம் தப்பிக்க ஒரு வழி யோசிக்க வேண்டும். அதைப் பற்றி மறந்துவிடு! என்று பேச்சை வேறு திசையில் திருப்பியது.

"நமக்கு இப்பொழுது தென்படுவது ஒரே ஒரு வழிதான். அதாவது கொஞ்சகாலம் பதுங்கியிருக்க வேண்டும். அதுவும் இதே இடத்தில்தான் இருக்க வேண்டும். இடத்தை மாற்றப் போய் வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ளப் போகிறோம்" என்று கூறியது முதல் உருவம்.

"நாம் பணத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாமா?" என்று கேட்டது இரண்டாவது உருவம்.

"அதற்கு என்ன இப்பொழுது அவசரம்?"

"நாம் இப்பொழுதே அந்த வேலையை எல்லாம் முடித்து விட்டால் நாம் அவசரமாக ஓடிப் போகும் பொழுது பிரிந்து விட்டால் கூடப் பரவாயில்லை அல்லவா?"

"ஓ! அப்படியானால் உனக்குக் கூட என் மீது அன்பு இல்லையா? என் பணத்துக்குத்தான் நீ கூட்டாளியா?" என்று உறுமியது முதல் உருவம்.

சிறிது நடுங்கிய இரண்டாவது உருவம், "இல்லை! நாம் சந்தர்ப்பவசத்தால் பிரிந்து போய்விட்டால் என்னசெய்வது. நம் இருவரில் யாராவது பணமில்லாமல் போய்விட்டால் அவர்களை சுலபமாகப் போலீஸார் பிடித்து விடலாம். அதற்காகச் சொன்னேன்!" என்று கூறியது.

"அதற்கு முன்னால் உன்னிடம் சிலவற்றை நான் கேட்டுத் தெளிவு படுத்திக் கொள்ள விரும்புகிறேன்! நான்கொலை செய்து சிறைக்குச் செல்லும்முன் நளினியைச் சந்திக்கவில்லை என்பதை போலீஸாரிடம் சொல்லச் சொன்னேனே எந்த விதத்தில் அதைச் சொன்னாய்?"

தான் இன்ஸ்பெக்டர் ராஜவேலைச் சந்தித்து எவ்விதம் சொன்னோம் என்பதை அந்த உருவம் கூறியது. பிறகு, "உன்னைக் காப்பாற்ற அந்தப் பரிதாபகரமான பெண்மணியின் பெயருக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது. முதல்நாள் அவள் சொன்ன சாட்சியம்—பொய் சாட்சியம் இன்ஸ்பெக்டரைத் திருப்தி படுத்த வில்லை என்பதை நான் திருட்டுத் தனமாக ஜன்னல் வழியாகப் பார்த்து தெரிந்து கொண்டேன்!" என்றது.

"அப்படியானால் நான் நளினியிடம் தங்கியிருந்ததை அவர்களிடமிருந்து மறைத்து விட்டாயல்லவா?"

"ஓ! அதுசரி நீ எதற்காக நளினியுடன் தங்கியிருந்ததை மறைக்க முயல வேண்டும்!"

"உனக்குத் தெரியாது, முட்டாளே!" என்று இகழ்ச்சியாகக் கூறிய அந்த முதல் உருவம், "நளினியுடன் நான் அப்பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, பேச்சுவார்த்தை வைத்துக் கொண்டிருப்பதை போலீஸார் பார்த்து விட்டால் பிறகு நம்மை எப்படியாவது அலசிப் பிடித்து விடுவார்கள்! பெண்புத்தி பின்புத்தி என்பதற்கு உதாரணமாக நளினியும் தன் இருப்பிடத்தை அவர்கள் மிரட்டிக் கேட்டதும் காட்டிக் கொடுத்திருப்பாள். இப்பொழுது அந்த வம்புகளுக்கே இடமில்லாமல் போய்விட்டது பார்த்தாயா? அதுசரி! நளினி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டது.

"நேற்று அவளை நீ மிரட்டினாயல்லவா?"

"எதைக் கேட்கிறாய்? என் இருப்பிடத்தை தப்பித் தவறி போலீஸாரிடம் சொல்லி விட்டால் கூட கொன்று போட்டு விடுவேன் என்று பயமுறுத்தினேனே அதைச் சொல்கிறாயா?"

"ஆமாம்!"

"அதற்கென்ன இப்பொழுது?"

"அந்த முட்டாள் பெண் என்ன செய்தாள் தெரியுமா? நீ உண்மையிலேயே அவளைக் கொல்லப் போவதாக நினைத்து அந்த இன்ஸ்பெக்டரிடம் கூறி விட்டாள். நேற்று மாலை அவரைத் தன் வீட்டிற்கு வரச் சொல்லி உன்னைக் காட்டிக் கொடுக்க முயன்றிருக்கிருள்! அதனுல் அவளை எமலோகத்துக்கு அனுப்பி விட்டேன்!" என்று கூறியது இரண்டாவது உருவம்.

"என்ன?" என்று திக்பிரமை பிடித்தது போல ஒரு நிமிடம் ஆடாமல் அசையாமல் நின்ற முதல் உருவம், "என்ன காரியம் செய்து விட்டாய்! எனக்கென்று இருந்த ஒரே ஒரு உறவையும் அறுத்து விட்டாய்!" என்று கூச்சலிட்டது.

"வாயை மூடு! சமயம் அறியாமல் உளராதே! உனக்கு வேண்டுமானுல் நாம் வெளிநாடு ஓடிய பிறகு தினம் ஒரு பெண் கிடைப்பாள்! அவளை நான் விட்டு வைத்திருந்தால் இந்நேரம் உன்னைச் சிறையில் கம்பி என்ன வைத்திருப்பாள். புரிகிறதா? அப்படி நீ மாட்டிக் கொண்டிருந்தால் நான் ஓடிப்போய் இருப்பேன். எனக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது என்பது போல்!" என்று கூறியது இரண்டாவது உருவம். அதன் குரலில் கேலி தொனித்தது.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த முதல் உருவம், "நான் மாட்டிக் கொண்டிருந்தால் நீ என்னைவிட்டு ஓடியிருப்பாயா? எப்படி?" என்று யோசனையோடு கேட்டது.

"இப்பொழுது போலீஸார் உன்னை மட்டும்தான் தேடுகிருர்கள். என்னைத் தேடவில்லை. அதனுல் நான் ஓடி விட்டால் கூட அவர்களுக்குத் தெரியாது!" என்று கூறியது இரண்டாவது உருவம்.

"அப்படியானுல் இப்பொழுது நான் சந்தர்ப்ப வசத்தால் மாட்டிக் கொண்டால் கூட நீ பணத்துடன் ஓடி விடுவாயல்லவா? என்று கேட்டது முதல் உருவம்.

"நீ மாட்டிக் கொள்ள மாட்டாய்! ஏனென்ருல் நாம் அவ்வளவு திறமையாக மறைந்திருக்குருேம். உன்னையும்

என்னையும் தவிர வேறு யாருக்கும் இந்த மறைவிடம் தெரியாது! அப்படியே உன்னைக் கைது செய்து விட்டால் நான் ஓடிவிடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்ட இரண்டாவது உருவம், அது சரி. பணம் பங்கிட—'' என்று ஆரம்பித்து சட்டென்று நிறுத்தி விட்டது. அதன் கண்கள் வெளியே வந்து விடுபவை போல பயங்கரமாக விரிந்தன. முகம் வெளிறியது.

அதைத் தொடர்ந்து சத்தமே இல்லாமல் பாய்ந்து வந்த ஒரு துப்பாக்கி குண்டு அந்த உருவத்தின் நெஞ்சில் பாய்ந்தது.

''என் நண்பனே எனக்கு உலை!'' என்று கூறியபடி துப்பாக்கியைத் தன் பாக்கெட்டினுள் போட்டுக் கொண்டது முதல் உருவம்.

## 10 கணவனை வெறுத்த கயல்விழியாள்!

நளினியின் அந்தச் சிறிய வீடு சோதனை செய்யப் பட்டது. ஆனால் தடயம் எதுவும் அகப்படவில்லை. ஒரு மர அலமாரியில் காணப்பட்ட நளினியின் டைரியை எடுத்து ஆவலோடு பிரித்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். ஆனால் அதில்கூட அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. காரணம் அவள் தனது சாதாரணமான அனுபவங்களைத்தான் அதில் எழுதியிருந்தாளே தவிர தன்னைக் கொலை செய்ய யாரோ தயாராக இருப்பதைப்பற்றியோ அவர் யாரென்பதைப்பற்றியோ அதில் அவள் குறிப்பிடவில்லை.

நளினி கொலை செய்யப்பட்டது உண்மையிலேயே ஒரு பரிதாபகரமான விஷயமாக இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்குத் தோன்றியது. அதெல்லாம் போக அவள் ஒரு பெரிய மர்மத்தையே விடுக்கப்போகும் நேரத்தில் இப்படி ஒரு அசம்பாவிதம் நடைபெற்றது குறித்து அவர் வருந்தினார். ஆனால் ஒரு கோணத்தில் பார்த்தபொழுது அவருக்கு நளினி மீது ஆத்திரம்கூட ஏற்பட்டது. தன் வீட்டிற்கு வந்த பொழுதே அவள் அந்த உண்மையைக்கூறி இருக்கலாம்.

தானே அவளை மடத்தனமாக அனுப்பிவிட்டதாக அவர் எண்ணினார்.

கமிஷனர் ராஜப்பா அன்று ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கமிஷனர் ஆபீஸிற்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், "வணக்கம், சார்," என்று மெதுவான குரலில் கூறினார்.

தலை நிமிர்ந்து பார்த்த கமிஷனர் ராஜப்பா, "இதுவரை ஒரு கொலைக்கும் ஒரு கொள்ளைக்கும் நாம் இடம் கொடுத்து விட்டோம் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது பார்த்தால் மற்றொரு கொலை!,, என்று கூறினார்.

"எங்கே?" என்று பரபரப்போடு கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"அந்தப் பிணம் இன்று பிற்பகல் கண்டெடுக்கப்பட்டது-தோப்பு உள்ளே!" என்று கூறிவிட்டு, "அவன் யாரென்று எனக்குப் புரியவில்லை!" என்று கூறினார் கமிஷனர் ராஜப்பா.

அங்கிருந்து புறப்பட்ட இன்ஸ்பெக்டர் ராஜவேல் நேராக சவக்கிடங்கிற்கு பத்து நிமிடங்களில் சென்றார். அங்கு மூடிவைக்கப்பட்டிருந்த பிணங்களில் அந்தப் பிணம் எது என்பதை கேட்டுத் தெரிந்துகொண்டு அங்கு போய்ப் பார்த்தார்.

அந்தப் பிணத்தைப் பார்த்த இன்ஸ்பெக்டர் எல்லை கடந்த ஆச்சரியம் அடைந்தார். அவரை அறியாமலேயே அவருடைய வாய், "மாயாண்டி!" என்று கூறியது. அவன் சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான் என்பதையும், சுடப்பட்டது வேறொரு இடத்தில் என்றும், அவன் உடல் கிடந்தது வேறு இடத்தில் என்பதையும், அவன் எங்கு சுடப்பட்டான் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை என்பதையும் அறிந்துகொண்ட பிறகு தன் ஜாகைக்குத் திரும்பினார் ராஜவேல்.

அவர் மனம் தீவிரமாக வேலைசெய்து கொண்டிருந்தது. மாயாண்டி எதற்கு கொல்லப்பட வேண்டுமென்பதுதான் அவருக்குப் புரியவில்லை. அவன் யாரென்றும் அவருக்கு

நிச்சயமாகத் தெரியாது, அவனைப்பற்றி அவனது வேலைக்காரியிடம் எதுவும் கேட்டால் தெரிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் அவன் வீட்டை அடைந்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

ஆனால் அவள் மாயாண்டி மாடிப்பக்கம் வந்ததும் தற்காலிகமாக அமர்த்தப்பட்டவள் என்பதும் அவளுக்கு அவனைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்பதும் அறிந்து கொண்டார். அன்று மாலை மாயாண்டி வீடும் சோதனையிடப்பட்டது. ஆனால் அங்கு ஒரு தடயமும் அகப்படவில்லை. அங்கு இருந்த சில குறிப்புகளால் மாயாண்டியின் உண்மைப் பெயர் வஜ்ரவேல் என்பதும் அவன் சென்னையில் ஒரு பிரபல வியாபாரி என்பதும் அவருக்குப் புரிந்தது.

அவருக்கு இன்னும் உற்சாகம் எழுந்ததும், அன்று அவருக்கு ஏதோ துப்பு கிடைத்துவிட்டதைப்போல உணர்ந்தார். அவருக்கு ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அதாவது இந்தக் கொலைகளைச் செய்பவன் பாலகுமார் ஒருவன்தான் என்பதும் அவன் நிச்சயம் மாடிப்பாக்கத்தில் தான் இருக்கிறான் என்பதும் அவருக்குப் புரிந்தது. ஆனால் அவனுக்கும் மாயாண்டிக்கும் என்ன சம்பந்தம் என்பதும், அவன் ஏன் மாயாண்டியைக் கொல்லவேண்டும் என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது. ஆனால் இன்னும் இரண்டு நாட்களில்தான் எப்படியும் அந்தப் பயங்கரக் கொலையாளியைக் கண்டுபிடித்துவிடுவோம் என்ற அசையாத நம்பிக்கை அவருக்கு இருந்தது. கொலையாளி யாரென்று தெளிவாகத் தெரியும். அவன் இருக்கும் இடம் மட்டும் தெரிந்துகொண்டால் போதும். அது எப்படி?

திடீரென்று இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு மூளையில் ஒன்று மின்னலைப்போலத் தாக்கியது. நளினி மாடிப்பாக்கத்தை அடைந்ததிலிருந்து அவளுக்கு ஆதரவளித்து வருபவள் அவள் வேலைபார்த்துவந்த பள்ளிக்கூடத்து தலைவி தான். எனவே தனக்கு எதுவும் ஆபத்து, அல்லது நல்லது என்றாலும் அவளிடம் தான் நளினி சொல்லியிருக்கக் கூடும். எனவே அங்கு போய் விசாரித்தால் நல்ல தகவல் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கை அவருக்கு எழுந்தது.

சில நிமிடங்களில் அவர் அந்த பள்ளிக்கூடத்தை அடைந்துவிட்டார். அந்தப் பள்ளித் தலைவி இன்ஸ்பெக்டர் ராஜவேலை அமர்க்களமாக வரவேற்றாள்.

"உட்காருங்கள்!" என்று கூறி அந்தத் தலைவி, "உண்மையில் ஒரு நல்ல பெண்மணியான நளினிக்கு இப்படிப்பட்ட கோர முடிவு ஏற்பட்டதை நினைத்தால் என் நெஞ்சம் நடுங்குகிறது, இன்ஸ்பெக்டர்!" என்று நடுங்கும்குரலில் கூறினாள்.

'ஆமாம்' என்ற பாவனையில் தலையாட்டிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், "உங்களுக்குத் தொந்தரவு கொடுப்பதைக் குறித்து வருந்துகிறேன். எனக்கு சில தகவல்கள் தேவை. அவை உடனடியாக கிடைக்காவிட்டால் நளினி போன்ற பல பேர் ஒன்றும் அறியாதவர்கள்கூட கொல்லப்பட நேரலாம். எனவே இப்பொழுது சில தகவல்கள் தேவைப் படுகின்றன. உங்களை நான் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். சிரமம் நீங்கள் பாராமல் எனக்கு பதிலளித்து உதவினால் ஒரு பயங்கரவாதியைப் பிடிக்க உதவியவர்கள் ஆவீர்கள்!" என்று பரிவான குரலில் விசாரித்தார்.

"எனக்குத் தெரிந்த அளவுக்கு உங்களுக்கு பதில் தருகிறேன். அவை உண்மையிலேயே அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். என்னால் இந்த உலகம் பயனடையும் என்றால் அது நிச்சயம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்குமே தவிர சங்கடத்தை அளிக்காது. எனவே நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளைத் தாராளமாகக் கேட்கலாம்: நான் பதில் சொல்கிறேன். இதில் எனக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை!" என்று பவ்யமாகக் கூறினாள் பள்ளித்தலைவி.

"நல்லது!" என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், "நளினி எப்பொழுது இங்கு வந்து வேலைக்கு சேர்ந்தாள்?" என்று கேட்டார்.

"மூன்று மாதங்களுக்கு முன்பு!"

"அப்பொழுது அவள் தன் கணவனைப்பற்றி உங்களிடம் எதுவும் கூறினாளா?"

அவள் கணவன் பணக்கையாடல் வழக்கு ஒன்றில் சிக்கி சிறை சென்றுவிட்டதாக என்னிடம் கூறினாள். பிறகு அவனைச் சந்திக்கவே இல்லை என்று என்னிடம் கூறினாள். அதுவும் தவிர அவன் எப்பொழுது விடுதலையாகி வருகிறான் என்பதும் அவளுக்குத் தெரியாதாம். அந்தச் சமயத்தில்தான் மாடிப்பாக்கத்தில் நடந்த ராஜசுந்தரம்

என்பவனது கொலைவழக்கில் மீண்டும் தன் கணவனே மாட்டிக்கொண்டுவிட்டதை பேப்பர் மூலமாக அறிந்து ரொம்பவும் வேதனையடைந்தாள்! ஒரு பெண்ணுக்கு, அதுவும் இவ்வளவு சிறிய வயது பெண்ணுக்கு இப்படிப்பட்ட வயதில் இவ்வளவு துன்பங்கள் அடுக்குத்தொடர்போல வருவது சகிக்க முடியாதது!'' என்று தலையைக் குனித்தபடி கூறினாள் பள்ளித்தலைவி.

''ஆமாம்!'' என்று ஆமோதித்த இன்ஸ்பெக்டர் ராஜவேல், ''இந்த இடைக்காலத்தில் அவள் தன் கணவனைச் சந்திக்கவே இல்லையா? அதைப்பற்றி அவள் உங்களிடம் எதுவும் கூறினாளா?'' என்று கேட்டார்.

''இல்லை இந்த இடைக்காலத்தில் அவள் தன் கணவனைச் சந்திக்கவே இல்லையாம். சந்திக்கவும் விரும்பவில்லை என்று அவள் என்னிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டாள். தான் நல்லவனென்று எண்ணிய தன் கணவன் இப்படிப்பட்ட படுபாதகனாக இருப்பானென்று தான் எதிர்பார்க்கவில்லையென்றும், அவன் அப்படி மாறிவிட்டதால் இனி தன் கணவனைத் தன் நினைவிலிருந்து மறந்துவிட முயற்சிப்பதாய் அவள் என்னிடம் கூறினாள்!''

''சமீப காலமாக அவள் எதுவும் சங்கடத்தில் ஆழ்ந்திருந்தாளா? அப்படி இருந்ததாக உங்களுக்குத் தோன்றியதா?''

''இல்லையே, ஆனால் அவள் சோகத்தில் ஆழ்ந்துபோய் இருந்தது உண்மை. ஆனால் சங்கடத்தில் ஆழ்ந்திருந்தாளா என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரியவில்லை.''

''அதாவது பயந்ததுபோலக் காணப்பட்டாளா என்று கேட்கிறேன்!''

''இல்லையே!''

"சரி! தன்னை யாராவது கொல்லப் பார்க்கிறார்கள் என்று அவள் உங்களிடம் கூறினாளா? தான் விரைவில் இறந்துவிடுவோம் என்று அவள் எண்ணிக்கொண்டிருப்பதாக உங்களிடம் சொன்னாளா?"

"அப்படி ஒன்றும் அவள் சொல்லவில்லை. ஆனால் கடந்த இரண்டு நாட்களாக அவள் போக்கில் ஒரு மாறுதல் தென்பட்டது. எதை எடுத்தாலும் மிகவும் மெதுவாகத்தான் செய்து முடித்தாள்!" என்று கூறினாள் பள்ளித்தலைவி.

அதற்குமேல் அவளிடம் எதுவும் கேட்டுப் பயனில்லை என்பதை அறிந்துகொண்ட இன்ஸ்பெக்டர் ராஜவேல் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினார்.

## 11 காட்டு பங்களா மர்மம்!

தான் எதிர்பார்த்ததைப் போல பள்ளித்தலைவியிடமிருந்து கிடைத்த தகவல்கள் உபயோகமாக இல்லையே என்ற வருத்தத்துடனும், எப்படியாவது, எத்தனை சிரமங்கள் வந்தாலும் அதை எதிர்த்து இந்த சிக்கலைத் தீர்த்தால்தான் தனக்கு நிம்மதி என்ற வைராக்கியத்துடன் வீடு திரும்பினார்.

அன்று தன்னுடைய நண்பனுக்கு விருதுப்பட்டியில் திருமண ரிசப்ஷன் இருப்பது நினைவுக்கு வரவே, அங்கு சென்று வந்தாலாவது மனதுக்கு ஆறுதலாக இருக்கும் என்று எண்ணியவராக ஜீப்பை எடுத்துக்கொண்டு கிளம்பினார். அவனுடைய நண்பன் விருந்துக்குச் செல்வதில் ஒரு விதத்தில் அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால் விருதுப்பட்டி ரஸ்தாவில்தான் ஏதோ ஒரு இடத்தில் கொலைகாரனுடைய ஜாகை இருக்கிறது என்பது அவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை.

தன்னை கேவலப்படுத்தி எழுதியிருந்த தினத்தன் டோரரோ பத்திரிகையே தன்னைப் பாராட்டி எழுதவேண்டும். தோல்வி என்பதே என்னவென்று தெரியாமல் இருந்துவந்த என்னை, 'பல ஆயிரக்கணக்கானோர் படிக்கும் பத்திரிகை மட்டமாக எழுதிவிட்டதே, எத்தனை மக்கள் என்னுடைய திறமையை தவறாகப் புரிந்திருப்பார்கள், அதே பத்திரிகை மூலமாக தவறைத் திருத்தி நான் யார் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன்' என்று எண்ணியவாறே ஆக்ஸிலேட்டரை அழுத்தமாக மிதித்தார் ஜீப் காற்றைப் பறந்தது.

இன்ஸ்பெக்டர் ராஜவேலின் ஜீப் மாடிப்பாக்கத்திற்குள் நுழையும்போது சரியாக மணி மாலை ஆறு. நீண்டநாட் களுக்குப்பின் தன் நண்பனைச் சந்தித்த மகிழ்ச்சியில் அவனு டன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். மணி இரவு பத்து ஆகி விட்டது. நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார் ராஜவேல். தனது ஜீப்பில் வந்த இன்ஸ் பெக்டர் ராஜவேலின் எண்ணம் முழுவதும் அத்தனை கொலைகளை வெற்றிகரமாக நடத்திய பாலகுமார் மீதே இருந்தது. அவனுக்கு அதனால் என்ன லாபம் என்றும் அவருக்குப் புரியவில்லை.

இன்னும் இரண்டு மைல்கள்தான் பாக்கி பிறகு தன்னு டைய ஜாகையை அடைந்ததும் நிச்சயம் இதற்கெல்லாம் ஒரு வழி செய்தாக வேண்டும் என்று எண்ணிக்கொண்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். துணைக்கு அவர் ஒருவரையும் அழைத்துச் செல்லவில்லை. அப்படி உதவிக்கு யாரையும் வைத்துக் கொள்ளும் வழக்கமும் அவரிடம் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. அதாவது மாடிப்பாக்கம் காட்டுரஸ்தாதான் கொலைகாரனுடைய அன்றாட போக்குவரத்துச் சாலையாக இருக்க வேண்டு மென்று அவர் எண்ணினார்.

மற்றொரு விஷயமும் அவருக்கு மெல்லப் புரிந்தது கொலையாளி மாறுவேடக் கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்ற

COMICSPDF TIMES

வனுக இருக்கவேண்டும். கண்களுக்கு குழந்தைகள் அணிந்து விளையாடும் கண்ணுடிகளை விற்பனை செய்யும் மனிதன் தன்னிடம் கண்ணுடி வாங்கியவன் ஒரு தாடிக்காரன் என்று கூறினுன். அது போக கொள்ளை நடந்த பாங்கில், கொள்ளை நடந்த சமயம் அந்த தாடிக்காரன்தான் காணப்பட்டான். அப்படியானுல் அந்த தாடிக்காரன்தான் பாலகுமாராக இருக்க வேண்டும் என்று இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்குத் தோன்றியது. அவனுடன் இருந்த மனிதன்தான் யாரென்று அவருக்குப் புரியவில்லை.

அதே சமயம் எதிர் பாராதவிதமாக வண்டி ஒரு குலுங்கலுடன் நின்றது. அவசரமாகக் கீழே இறங்கிய இன்ஸ்பெக்டர் ராஜவேல் முன்பக்கம் போய் வண்டியைத் திறந்து பார்த்தார். அதில் தண்ணீரே இருக்கவில்லை. எனவே எஞ்சின் மிகவும் சூடாக இருந்தது.

சிறிது நேரம் திகைத்து நின்ற இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு அப்பொழுதுதான் தான் எவ்வளவு மடத்தனமாக முன்னேற்பாடு இல்லாமல் புறப்பட்டோம் என்று புரிந்தது. ஆனுல் அந்த நிலையில் தன்னுல் எதுவும் செய்ய இயலாது என்பது அவருக்கு மிக நன்ருகத் தெரியும். நடப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை உணர்ந்துகொண்ட அவர் மெல்ல நடக்க ஆரம்பித்தார். சுமார் அரை மைல் தூரம் நடந்திருப்பார்.

அப்பொழுது ஒரு கார் வரும் அரவம் கேட்டது. உடனே அவர் ஒரு புதரில் மறைந்து நின்றுகொண்டார். சாலை இரு மருங்கிலும் அவ்விதம் செடி, மரங்கொடிகள் வளர்ந்திருந்தது ஒருவிதத்தில் சௌகரியமாக இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

அவர் இருந்த இடத்தை நெருங்க நெருங்க காரின் வேகம் குறைந்தது. இன்ஸ்பெக்டர் ராஜவேல் நின்ற இடத்திலிருந்து பத்து அடிதள்ளி அந்தக் கார் நின்றது. நல்ல வேளை அது இன்னும் முன்னே செல்லவில்லை. சென்றிருந்தால்

தன் ஜீப்பை பார்த்து அதனுள் இருந்த மனிதன் உஷாராகி இருப்பான் என்று ராஜவேலுக்குத் தோன்றியது. இந்த அர்த்தராத்திரியில் அந்த மனிதன் ஏன் அந்தக் காட்டு பிரதேசத்திற்கு வரவேண்டும் என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது.

நிறுத்தப்பட்டிருந்த காரிலிருந்து யாரும் வெளியே இறங்குகிறார்களா என்று எச்சரிக்கையாக வெளியே எட்டிப் பார்த்தார். ஆனால் யாரும் இறங்கவில்லை. காரினுள் ஒரே ஒரு மனிதன் தான் காணப்பட்டான். அந்த இருளில் அவன் முகத்தை ராஜவேலால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. அடுத்தபடி என்ன நடைபெறப் போகிறதென்பதை அறிய ஆவலாகக் காத்திருந்தார் ராஜவேல். அவருக்கு ஏதோ ஒரு பயங்கரமான மர்மத்திரை விலகுவதைப் போன்ற உணர்வு எழுந்தது.

சில விநாடிகளில் மீண்டும் கார் புறப்படும் சத்தம் கேட்டது. சிறிது ஏமாற்றத்திற்குள்ளான இன்ஸ்பெக்டர் ராஜவேல் மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தார். ஆனால் அந்தக் கார் ரஸ்தாவில் செல்லவில்லை அதற்கு பதிலாக திரும்பி வலதுபக்கத்தில் வளர்ந்திருந்த அடர்த்தியான புதரினுள் மெல்ல நுழைந்தது.

அந்த காட்சியையே எல்லை கடந்த ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். அந்த மர்ம மனிதனால் எப்படி இந்த இரவில் காரை அப்படியொரு அடர்த்தியான புதரின் உள்ளே நுழைக்க முடிகிறது என்று எண்ணி வியந்தார். பகலிலேயே அப்படி யாரும் செய்யத் தயங்குவார்கள். அப்படியானால் அந்த மனிதன் ரொம்பவும் பழக்கப்பட்டவனாக இருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது.

அவனைப் பின்தொடர வேண்டுமென்ற யோசனை இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்குத் தோன்றியது. அதனால் தன் இருப்பிடத்தை விட்டு வேகமாக வெளியே வந்தார்.

ஆனால் உஷாரராக பதுங்கிப்பதுங்கி முன்னேறினர். காரை அந்த மனிதன் பதுக்கிய இடத்தை அடைந்ததும் அவர் மிகவும் எச்சரிக்கையாக உள்ளே நுழைந்தார். அவருக்கு முன்னால் சில அடிகள் முன்னே அந்த மர்ம மனிதன் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் எதற்கும் கவலைப்பட்ட தாகவே தெரியவில்லை.

மூன்றாம் பிறையானதால் மெல்லிய சந்திரனின் ஒளிக் கீற்றுகளால் தூரத்தில் தெரிந்த பிரமாண்டமான—பாழ டைந்த மாளிகை ஒரு பெரிய கரிய பூதம்போல காட்சி யளித்தது. அந்த இடத்திற்குத்தான் அந்த மனிதன் சென்று கொண்டிருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. அந்த பாழடைந்த பங்களாவைப்பற்றி இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு நன்றாகத் தெரியும். அந்த மாளிகை பல வருடங்களுக்கு முன் ராவ்பகதூர் செல்வத்துரையினால் கட்டப்பட்டது. பிறகு அவரது சந்ததியினரால் நாசப் படுத்தப்பட்டு இப்பொழுது கவனிப்பாரில்லாமல் சீரழிந்து காணப்பட்டது.

மாடிப்பாக்கத்தின் அமைதியான சூழ்நிலையை கண்டு அங்கு பங்களா வாங்கினால் நன்றாக இருக்குமென்று எண்ணிய இரண்டொருவர் ராவ்பகதூர் செல்வதுரையின் பங்களாவைப் பார்த்தனர். ஆனால் அவர்கள் அதனை வாங்க விரும்பவில்லை. காரணம் ஊரில் பரவியிருந்த பேய்க் கதைகள் தான். அந்த மாளிகை பேய்களின் இருப்பிடமாக மக்களால் கருதப்பட்டது.அதனால் அதை வாங்குவார்யாரும் இல்லாமல் அது மிகவும் சீர்கேடான நிலையில் காணப்பட்டது. இத்தகைய அம்சங்கள் வாய்ந்த பங்களாவினுள் அந்த மர்ம மனிதன் ஏன் செல்ல வேண்டும் என்பதுதான் அவருக்குப் புரியவில்லை.

அந்த பங்களாவின் தோட்டத்தினுள் மெல்ல நுழைந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் அங்கு காடுபோல வளர்ந்திருந்த புதர்களின் பின்னால் போய் மறைந்துகொண்டார். அந்த

மனிதன் நேராக வராமல் வேறு வழியாக உள்ளே செல்வான் என்று எண்ணிய அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அந்த மனிதன் மாளிகையின் பின்புறம் சென்ருன். அவன் பின்னுலேயே செல்ல ராஜவேல் விரும்பவில்லை. காரணம் அவன் தன்னைப் பார்த்துவிட்டால், நிராயுதபாணியாக இருக்கும் தனக்கு—அதுவும் ஒரு போலீஸ் அதிகாரியாக இருக்கும் காரணத்தால் எதுவும் தீங்கு செய்யாமல் விட மாட்டான். சில சமயங்களில் அது உயிருக்கே கூட ஆபத்தாக முடியலாம். அதுபோக அவனுக்கு சிறிது அவகாசம் அளிப்பதனுல் தன்னுல் நன்ருக வீட்டைச் சோதனை போட முடியும் என்று ராஜவேல் எண்ணினுர்.

அதனுல் சில நிமிடங்கள் காத்திருந்தார். சிறிது நேரத்தில் எந்தவித அரவமும் அவருக்குக் கேட்கவில்லை. தனது இருப்பிடத்தைவிட்டு வெளியே வந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் மாளிகையின் பின்பக்கம் நடந்தார். அப்பொழுது ஒரு ஆந்தை எங்கிருந்தோ மிகவும் பயங்கரமாக அலறியது. ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் அந்தச் சத்தம் அந்த வட்டாரம் முழுவதும் எதிரொலித்து அடங்கியது. சிறிது நேரம் செயலற்றுப்போய் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் தானே ஒரு நிமிடம் பீதியடைந்து விட்டதை எண்ணி தனக்குள் சிரித்தபடி மேலே நடந்தார்.

வீட்டின் பின்புறம் இரண்டு பிரமாண்டமான ஜன்னல்கள் காட்சியளித்தன. ஒரு பெரிய கதவும் தென்பட்டது. கொல்லைப்புறம் வருவதற்கென்று அமைக்கப்பட்ட வாசல் அது என்பதை இன்ஸ்பெக்டர் ராஜவேல் புரிந்துகொண்டார். அந்தக் கதவின்மீது கையை வைத்து தன் பலங்கொண்ட மட்டும் அழுத்தினுர். ஆனுல். கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது.

மெதுவாக வலதுபுறம் இருந்த ஜன்னலருகே வந்தார். கம்பியில்லா ஜன்னலான அதன் வழியாகத்தான் அந்த மர்ம மனிதன் உள்ளே சென்றிருக்கக் கூடுமென்று முடிவு செய்துக்

கொண்ட இன்ஸ்பெக்டர் ராஜவேல் சிறிதுநேரம் யோசித்தார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவராய் ஜன்னல்மீது ஏறி உள்ளே குதித்தார்.

அவர் குதித்த இடம் விசாலமான ஒரு பெரிய அறையாகும். அதனுள் யாருமே தென்படவில்லை. அங்கு யாரும் ஒளிந்திருக்கவும் சாத்தியமில்லை என்று இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்குத் தோன்றியது. காரணம் அங்கு எந்தவிதமான பொருட்களும் காணவில்லை. சிறு துரும்பு கூட இல்லாமல் சுத்தமாக இருந்தது. போதாக்குறைக்கு ஒரு பரண்கூட ஒளிந்துகொள்ள சௌகரியமாக கட்டப்பட்டிருக்கவில்லை.

அங்கிருந்து ஒவ்வொரு அறையாகப் பார்த்தபடி முன்னேறினார்.இன்ஸ்பெக்டர் ராஜவேல். கடைசியில் மாடியைச் சோதனை போட்டுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்ட அவர் கீழே இருந்த அறைகளில் யாரும் இல்லாததால் சமையலறையில் சோதனையிட்டுவிட்டு இறுதியில் மாடிக்குச் செல்லலாம் என்று எண்ணினார்.

ஆனால் அதுவரை அவரை அறியாமல் அவரையே பின் தொடர்ந்துவந்த ஒரு கரிய உருவம் தன்கையிலிருந்த ஒரு தடிபோன்ற கருவியால் அவர் தலையில் ஓங்கி அடித்தது. ராஜவேல் மூர்ச்சித்தார்.

## 12 எல்லாம் உடைந்தது!

---

சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்த இன்ஸ்பெக்டர் ராஜவேல் தனது தலை பயங்கரமாக வலிப்பதை உணர்ந்துகொண்டார். தான் எங்கிருக்கிறோம் என்பதை ஒருகணம் மறந்துவிட்ட அவர், "நான் எங்கே இருக்கிறேன்?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டார். தான்

ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருக்கிறோம் என்பதும் அது தன்னுடைய வீடு அல்ல என்பதும் அவருக்குப் புரிந்தது. மெல்ல படுக்கையைவிட்டு எழ முயன்றார்.

"பொறு, நண்பனே! உனது கைகால்கள் கட்டப் பட்டுள்ளன. எழ முயலாதே! நீ எங்கிருக்கிறாய் தெரியுமா? மாடிப்பாக்கம் காட்டு பங்களாவின் பாதாள அறையில்!" என்று கெக்கலித்தது ஒரு உருவம். அதன் முகம் கறுப்புத் துணியால் மறைக்கப்பட்டிருந்தது.

"என்னை என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல். வசமாக மாட்டிக் கொண்டோம் என்று அவருக்குத் தெளிவாகப் புரிந்தது.

ஒரு கேலிச் சிரிப்பு சிரித்த அந்த மனிதன், "நீ என்ன வைரமா அல்லது கோமேதகமா? உன்னை பத்திரப்படுத்தி வைக்க! நாளை நான் வெளியூர் போகப் போகிறேன். அதற்கு முன் உன்னை அழைத்துச் செல்ல யமனுக்கு சீட்டுவைக்கப் போகிறேன்!" என்று கரகரத்த குரலில் கூறினான்.

"நீ யார்?"

"நான் யாரா?" என்று திருப்பிக் கேட்ட அந்த மனிதன் ஏதோ முடிவுக்கு வந்தவனாக, "நீதான் சாகப் போகிறாயே என் முகத்தைக் காண்பிப்பதனால் என்ன வந்துவிடப் போகிறது. நன்றாகப் பார்த்துக்கொள்!" என்று கூறிவிட்டு தனது முகத்தை மறைத்துக் கட்டியிருந்த கறுப்புத் துணியை எடுத்தான்.

அந்த அறையில் எரிந்துகொண்டிருந்த மெழுகுத்திரியின் மெல்லிய வெளிச்சத்தில் கூட இன்ஸ்பெக்டர் ராஜவேலால் அந்த மனிதனின் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவருக்கு முன்பே அந்த மனிதன் யாரென்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

"பாலகுமார்!" என்று மெல்லிய குரலில் முனகிய ராஜவேல், "இத்தனை அழகனான நீ ஏன் இப்படிப் படுபாதகச்

செயலில் ஈடுபட்டாய்?'' என்று கேட்டார். அவர் குரலில் இரக்கம் தொனித்தது.

''அதுவா?'' என்று இகழ்ச்சியாகக் கேட்ட பாலகுமார், ''உங்கள் போலீஸ் இலாகா நாட்டிற்கு நல்லது செய்யும் என்று பெயர். ஆனால் அது செய்யும் படுபாதகச் செயல்கள் கடவுளுக்குத்தான் வெளிச்சம். நிரபராதியான என்னைக் கைதியாக்கி சிறைக்கு அனுப்பி குற்றவாளியை வெளியே நடமாடவிட்ட பெருமை உங்கள் இலாகாவிற்கே உரியதாகும்!'' என்று கூறினான்.

''இல்லை!'' என்று மறுத்த ராஜவேல், ''சந்தர்ப்ப சூழ்நிலைகள் உன்னை குற்றவாளியாக்கி விட்டன அவ்வளவு தான்!'' என்று கூறினார்!

''உன் இலாகாவைப்பற்றி நீ புகழாமல் வேறு யார் புகழ்வார்கள். கடைசியில் சந்தர்ப்ப சூழ்நிலையால் விளைந்தது என்ற சமாதானம் வேறு! சரி நீ இப்பொழுது நன்றாக ஒய்வெடுத்துக்கொள்! நாளைக் காலை உனக்கு விடுதலை—இங்கிருந்து மட்டுமல்ல இந்த உலகத்திலிருந்தே! புரிந்ததா? நான் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு நடந்தான் பாலகுமார்.

''கொஞ்சம் பொறு!'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், ''என்னைக் கொல்வதாக முடிவு செய்துவிட்டாயல்லவா?'' என்று கேட்டார்.

''ஆமாம்! அது நிச்சயமாகிவிட்டது!'' என்று எரிச்சலாகத் திரும்பினான் பாலகுமார்.

''அதற்கு முன்னால் நீ எதற்காக, எப்படி அந்த கொலைகளைச் செய்தாய் என்று நீ கூறினால் ரொம்பவும் சந்தோஷமடைவேன். எனது கடைசி ஆசையை நிறைவேற்றுவாயல்லவா தயவுசெய்து?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

அவரையே கொஞ்சம் நேரம் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த பாலகுமார், ''உனக்கு அவசியம் தெரிய

வேண்டுமானால் சொல்கிறேன்! நீ சாகப்போவது உறுதி. உன்னிடம் பயந்து என்ன ஆகப்போகிறது!" என்று இகழ்ச்சியாகக் கேட்டான்

"அது சரி! ராஜசுந்தரத்தை நீ எப்படிக் கொன்றாய்? எதற்காக கொன்றாய்?"

"நான் ராஜசுந்தரத்தை வேண்டுமென்றே கொல்லவில்லை. அவனும் நானும் நெருங்கிய நண்பர்கள். நானும் அவனும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்துவந்தோம். அந்தச் சமயத்தில் பணத்தேவை காரணமாக அவன் ஒரு லட்ச ரூபாய் கம்பெனி பணத்தில் கையாடிவிட்டான். ஆனால் சாட்சி எல்லாமே என்னைத்தான் காட்டிக் கொடுப்பவையாக இருந்தன. நண்பன் என்றும் பாராமல் அவனும் என்னையே காட்டிக் கொடுத்தான். போதிய சாட்சியில்லாத காரணத்தால் நிரபராதியான நான் தண்டனையை ஏற்க நேர்ந்தது.

விடுதலையான பிறகு என் மனைவி நளினியுடன்தான் நான் இருந்து வந்தேன். அவள் ஒரு பயந்த சுபாவமுள்ள பெண் இதற்கு இடையில் வேலை தேடி நான் மட்டும் மாடிப் பாக்கம் வந்து சேர்ந்தேன். வேலை கிடைத்ததும் நளினியை அழைத்துக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டேன். எனக்கு ஒரு வேலையும் கிடைத்தது. அந்தச் சமயத்தில்தான் ஒருநாள் பூங்காவில் ராஜ்சுந்தரத்தைச் சந்தித்தேன். அவன் என்னைக் கண்டதும் மிரண்டு ஓடிவிட்டான். ஆனால் நான் விடவில்லை. எனவே மறுநாள் இரவு என்னை மாடிப்பாக்கம் தோப்பில் சந்திப்பதாகக் கூறினான். அவன் என்னை ஏமாற்றினால் அவனை நான் கொன்றுவிடுவதாக பயமுறுத்தினேன்.

"மறுநாள் நாங்கள் இருவரும் தோப்பில் சந்தித்துக் கொண்டோம். அப்பொழுது அவன் ஐந்தாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு நடந்தவைகளை மறந்து விடும்படி என்னிடம் கூறினான். ஆனால் அந்தப் பிச்சைக்கார காசை நான் வாங்க விரும்பவில்லை. மாறாக அவனுக்கு புத்தி புகட்ட

எண்ணினேன். ஆனால் அவன் உடனே துப்பாக்கியை எடுத்து மிரட்டினான். எங்கள் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அவன் துப்பாக்கியையே எடுத்து இறுதியில் அவனையே நான் சுட்டு விட்டேன். அதன் பிறகு என்னைப் போலீஸார் கைது செய்து விட்டனர்.

''நான் கைதாகி கொஞ்ச நாட்களில் சிறையிலிருந்து தப்பி விட்டேன். பிறகு நளினியைச் சந்தித்தேன். அவள் தான் என்னை இந்த காட்டு பங்களாவில் மறைந்திருக்கும்படி யோசனை கூறினாள், அவளது பள்ளித் தோழன் ஒருவன் கூட எனக்கு உதவியாக இருப்பானென்று எனக்குக் கூறி மாயாண்டியை அறிமுகம் செய்து வைத்தாள். சந்தர்ப்ப வசமாக சமையலறையில் காணப்பட்ட ஒரு பொத்தானை விளக்கைப் பொருத்த எண்ணி அமுக்கினோம். அப்பொழுது கீழே ஒரு ஓட்டை தென்பட்டது. இறங்கிப் பார்த்தோம் இந்த அறைதான் அது. அதிலிருந்து இதுதான் எங்கள் மறைவிடமாக இருக்கிறது!'' என்று நிறுத்தினான் பால குமார்.

''நீ வெற்றிகரமாக நடத்திய கொள்ளையைப் பற்றி கொஞ்சம் சொல்!''

''எங்களிடம் பணம் இல்லாத காரணத்தால் நாங்கள் பாங்கில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டோம். அந்தத் திட்டத்தைச் சொன்னவன் மாயாண்டிதான். கடைத் தெருவுக்கு வடநாட்டவனைப் போல வேடமிட்டுக் கொண்டு போய் முழு கண்ணையும் மறைக்கும் கண்ணாடியை வாங்கி அணிந்து கொண்டு கண்ணீர்ப்புகை குண்டு ஒன்றையும் வைத்துக் கொண்டு அங்கு போய் அதை வெடித்து கலவரமாக்கி கொள்ளையை வெற்றிகரமாக நடத்தி விட்டோம். அன்று காலை பாங்க் எப்படிப்பட்ட அமைப்புடையது என்று பார்க்கத்தான் நான் வந்தேன். அப்பொழுதுதான் நீ என்னைப் பார்த்து விட்டாய்!''

''நளினியை ஏன் கொலை செய்தாய்?''

"நளினியைக் கொன்றது நானல்ல! மாயாண்டிதான் நளினியைக் கொன்ருன். எங்கள் இருப்பிடம் தெரிந்த அவள் என்ருவது ஒருநாள் மாட்டி வைத்துவிட்டால் என்ன செய்வது. ஆதலுல் அவளை நான் போனில் மிரட்டினேன். என் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்து விட்டால் அவளை ஈவிரக்கமின்றி கொன்று போட்டு விடுவதாக பயமுறுத்தினேன். பயந்து போன அவள் செய்வதறியாமல் உன்னிடமே வந்து உண்மையைக் கூற முற்பட்டிருக்கிருள். ஆனல் பைத்தியக்காரப் பெண் உன்னுடைய ஜாகையிலேயே அவள் உண்மையைச் சொல்லியிருந்தால் நீங்கள் அப்பொழுதே என்னைக் கண்டுபிடித்திருக்கலாம். ஆனல் அவள் உன்னைத் தன் வீட்டிற்கு வரச்சொல்லி நாங்கள் அவளைக் கொல்ல அவகாசம் அளித்துவிட்டாள். எனவே என்னைக்கூட கேட்காமல் மாயாண்டி அவளைக் கொன்று போட்டு விட்டான்."

"மாயாண்டியை ஏன் நீ கொலை செய்தாய் என்பதைச் சொல்!" என்று ஆவலாகக் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"அவன் பேசிய விதம் என்னை கொலைகாரனுக்கிவிட்டது! அவ்வளவுதான்!" என்று சர்வ சாதாரணமாகக் கூறினுன் பாலகுமார். தொடர்ந்து பேசியதால் அவன் சற்றுக் களைப்படைந்து காணப்பட்டான். அந்த அறையின் ஒரு கோடியில் வைக்கப்பட்டிருந்த பானைத் தண்ணீரைப் பருகி விட்டு வந்த பாலகுமார் தான் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

"மாயாண்டியைநான் கொல்வதற்கு காரணமானது ஒன்றுதான். அதுதான் அவனுடைய திமிர்ப்பேச்சு. சிறு வயது முதலே என்னுடைய விருப்பத்திற்கு எதிராக யாராவது ஏதாவது பேசிவிட்டால் அவர்களைக் கொல்லும் அளவிற்கு எனக்கு ஆத்திரம் ஏற்படும். என் சொந்த அம்மாவையே ஒருமுறை அடித்திருக்கிறேன். அப்படிப்பட்டவன் இந்த மாயாண்டிக்கா இரக்கம் காட்டுவேன்.

COMICS PDF TIMES

நாள் முழுவதும் இருவரும் ஒன்ருக இருந்து கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம். கஷ்டத்தில் எனக்கும் பங்கு உண்டு.

"நம்பிக்கைத் துரோகம் செய்பவன் யாராக இருந்தாலும் எனக்குச் சிற்றும் பிடிக்காது. ஏற்கனவே என்னுடைய இனிமையான வாழ்க்கையை ராஜசுந்தரம் கொடுத்த தோடமல்லாமல், மனைவியைப் பிரிந்து. என்னை சிறைக் கைதியாக்கி என்மதிப்பையும் கெடுத்த அவனை ஒழித்ததுபோல். இவனையும் ஒழித்து விட்டேன்." என்ருன்

இந்த உலகம் நான் நிரபராதியாக இருந்தபோது என்னை மதிக்கவில்லை. வீணுகபழி சுமத்தியது. இப்பொழுது கொள்ளையடித்து பணம் சம்பாதித்து என்னிடம் பணம் இருக்கும் போது எனக்கு கொடை வள்ளல் பட்டம் கொடுக்கிறது.

செய்யாத குற்றத்தைச் செய்ததாக பழிசுமத்திய உங்கள் இலாகாவைப் பழிவாங்க, உன்னைக்கொல்வதன் மூலம்ஓரளவு என்னுடைய பழிஉணர்ச்சிகுறையும்.ஏனெனில் நீ அந்த இலாகாவின் தானே பணியாற்றுகிருய்" என்ருன்.

"அவன் என்னைப் போலீஸார் பிடித்துவிட்டால் அவன் பணத்துடன் ஓடி விடுவதாக என்னிடம் கூறினுன். என்னுடைய இனிமையான வாழ்க்கையினுள் நுழைந்த ராஜசுந்தரத்தை உண்மை நண்பன் என்று எண்ணி ஏமாந்தது போல் இவனையும் உண்மை நண்பன் என்று நம்பினேன். ஆனுல் இவன் என்னை ஏமாற்றுவான் போலத் தெரிந்ததால் அவனையும் ஒழித்து விட்டேன். இனி பணம் முழுவதும் எனக்குத்தான், அல்லவா?"

"ஆமாம்!" என்று தலையாட்டினுர் இன்ஸ்பெக்டர் ராஜவேல்.

"நல்லது இன்னும் ஒருமணி நேரத்தில் உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன்:" என்று கூறிவிட்டு படியேறி மேலே சென்று விட்டான் பாலகுமார். அவன் கதவை அறைந்து சாத்தியது இன்ஸ்பெக்டர் ராஜவேலுக்கு நன்ருகக் கேட்டது.

அவர் தன் பார்வையை சுற்றும் முற்றும் ஓடவிட்டார். ஒரு மூலையில் ஒரு பிராந்தி பாட்டில் தென்பட்டது. அதைக் கண்டதும் அவருக்கு ஒரு யோசனை உதிர்த்தது. அதனருகில் கஷ்டப்பட்டு கட்டிலில் இருந்து இறங்கி ஊர்ந்துபோன ராஜ வேல், அந்த பாட்டிலைக் கவ்விக்கொண்டு எழுந்தார். பிறகு அந்த பாட்டிலை விட்டுவிட்டால், அது தரையில் விழுந்து நொறுங்கியது. ஒரு கண்ணாடித் துண்டை கால்களுக்கிடை யில் வைத்துக்கொண்டு தனது கைக்கட்டை சிரமப்பட்டு அறுத்தார். பிறகு தனது கால்கட்டையும் அவிழ்த்து விட்டார், இதைச் செய்துமுடிக்க அவருக்கு வெகுநேரம் பிடித்தது.

சிறிது நேரத்தில் மேலே யாரோ வரும் அரவம் கேட்டது. அங்குக் கிடந்த ஒரு மர முக்காலியை கையில் எடுத்துக் கொண்டுபோய் வாசலின் கதவுக்கருகில் நின்று கொண்டார் ராஜவேல். கொஞ்ச நேரத்தில் கதவு திறக்கப்படும் ஒலி கேட்டது. அதைத் தொடர்ந்து பாலகுமார் உள்ளே நுழைந்தான். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் தன் கையிலி ருந்த முக்காலியை அவன் தலையில் போட்டார் இன்ஸ் பெக்டர் ராஜவேல். நிலை தடுமாறி படிக்கட்டில் உருண்ட பாலகுமார் மூர்ச்சையடைந்தான்.

வெகு வேகமாக மூர்ச்சை தெளிந்து எழுந்த பாலகுமார் தான் கயிற்றால் கட்டப்பட்டிருப்பதை உணர்ந்தான். எப்படி தனக்கு இந்த நிலை வந்தது என்று நினைவு படுத்திக்கொண்ட அவனுக்கு இன்ஸ்பெக்டர் ராஜவேல் மீது ஆரத்திரமாக வந்தது. அவனைத் தூக்கி அவனுடைய காரிலேயே போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

அவன் அருகில் வந்த இன்ஸ்பெக்டர், "சட்டத்தின் பிடியில் எந்த குற்றவாளியும் தப்பிக்க முடியாது. உண்மையே எப்பொழுதும வெல்லும். நீ அறிந்தோ, அறியாமலே, செய்த

தவறுகளுக்கு சட்டத்தின் பரிசு உனக்குக்காத்திருக்கிறது" என்று கூறிய இன்ஸ்பெக்டர்.

சில தினங்கள் கழித்து ராஜவேலைப் பழித்த "தினத்—தண்டோரா" பத்திரிகை அவரைப் புகழ்ந்து எழுதியிருந்தது. அதே பத்திரிகை பாலகுமாருக்கு தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியையும் வெளியிட்டிருந்தது.

முற்றும்.

COMICS PDF TIMES

COMICSPDFTIMES
HSC